DEC. '48

Regd. No. M. 4975

மஞ்சரி

ஸர்வதாரி - மார்கழி

விலகிய அபாயம் . . . . நியூடெமொக்ராட் 1
புராதன இந்தியர் பேர் . . . . கைரளீ 7
இந்தியரை மணந்தேன் . . . . ஸவுண்டு 12
குழந்தையின் பயம் . . . . பேரண்ட்ஸ் மகஸின் 16
குதிரைப் பந்தய மன்னர் . . . . கவயுக் 21
ஜலதோஷ ஆராய்ச்சி . . . . மாத்ருபூமி 25
ஜோஸ்யப்படி பிறந்த உலக ரட்சகர் . . . . ஸிளிட்ஸ் 28
மறைந்த மயிலாசனம் . . . . பிரஜாமதம் 33
விளையாட்டில் பிறந்த கருவி . . . . பீபிள்ஸ் ஹெல்த் 36
பரிசுத்த பப்பாய் . . . . பேகம் 40
வெளிநாட்டில் நமது பிரசாரம் . . . . . . இந்தியன் ரெவ்யூ 43
குற்றம் புரியும் விலங்குகள் . . . . . . அமிர்தபஜார் பத்திரிகை 50
வென்ற பட்டாபி . . . . கர்மவீர் 54
தோற்ற டண்டன் . . . . தேசதூத் 55
ராணுவ மடம் . . . . ஆனந்தவாணி 56
ஹங்கரியில் சகுந்தலை . . . . மாடர்ன் ரெவ்யூ 60
நவாபை மிரட்டிய கொள்ளைக்காரர் . . . . சிசுஸாதி 62
பாங்கித் தொழில் . . . . இந்தியா 65

விசேஷப் பகுதிகள்

க்விஸ் 9
குழந்தைகள் குறும்பு 10
பாபுராவ் பதில் சொல்லுகிறார் 23
பிழையைத் திருத்துங்கள் 27
பரமஹம்ஸர் : வாழ்வும் வாக்கும் 48
கார்ட்டூன் கதம்பம் 68
சிறுகதை : ஸர்தார்ஜி . . . . கே. ஏ. அப்பாஸ் 71
நாவல் சுருக்கம் : கல்யாணி . . . . . ஜைனேந்திர குமார் 79

அணா 6

இதழும் மலரும்

பல இதழ்கள் ஒன்று சேர்ந்த முழு மலருக்கு ஓர் அலாதியான சோபை உண்டாகிறது. 'மஞ்சரி'யின் முதல் மலரிலே உள்ள இதழ்களை யெல்லாம் ஒன்று திரட்டி முழுசாய்ப் பார்க்கும்போது, அதுவும் ஒரு தனிச் சோலைதான் பெறுகிறது (அட்டைப் படம்).

நாடு சுதந்தரம் அடைந்த முதல் வருஷத்தில், மகத்தான ஒரு சிக்கலை நம் இந்திய சர்க்கார் தீர்த்து வைத்தது. அதை விமர்சனம் செய்வது 'விலகிய அபாயம்' (பக்-1); காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் போட்டி யிட்ட 'பட்டாபி - டண்டன்' இருவர் வாழ்க்கையும் தியாகம் நிறைந்தது (பக்-54, 55); 'குழந்தையின் பயம்' தீரப் பெற்றோர் அதற்கு உதவ வேண்டும் (பக்-16); அரிய முழு நாவல் சுருக்கம் 'கல்யாணி' (பக்கம்-79).

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.

த. நா. ஸேனாபதி — குமுதினி

வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்

சீதா தேவி — 'ஆர்வி'

கௌரி அம்மாள் — மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை, 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்று விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 2] [இதழ் 1

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

விலகிய அபாயம்

கே. எம். முன்ஷி

மலை போல் வந்த கஷ்டம் சம்ஸ்தானங்களின் சிக்கல். அதை ஒரே வருஷ காலத்தில், நம் இணையற்ற வீரத் தலைவர் சர்தார் படேல் பனி போல் தீர்த்து வைத்தார். பிரிட்டிஷார் போகும்போது பல்லாயிரம் பிசாசுகளை ஆடவிட்டது போல், இந்திய சம்ஸ்தானங்களையெல்லாம் அவிழ்த்துவிட்டுப் போனார்கள். அவற்றையெல்லாம் இந்திய யூனியனில் இணைத்து உறுதி கொள்ளச் செய்தார் படேல். அதில் அவருக்குப் பக்கத்துணையாக நின்று உதவிய முக்கியஸ்தருள் ஒருவர் இந்தக் கட்டுரையாசிரியர் முன்ஷி.

1947-ஆம் வருஷ ஆரம்பத்தில் புது டில்லி அரசாங்க மாளிகையில் இந்திய சுதந்தரச் சட்டத்தின் நகலைப் பற்றிய ஆராய்ச்சி நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்கு ஸ்ரீ கோபால சாமி ஐயங்கார், அல்லாடி கிருஷ்ண சாமி ஐயர், ஸர் பி. என். ராவ், நான் ஆகிய நால்வரும் அழைப்பின் மேல் போயிருந்தோம். மகாத்மா காந்தி, பண்டித நேரு, சர்தார் படேல், டாக்டர் ராஜேந்திர பிரசாத் ஆகியோர் அந்தக் கூட்டத்தில் இருந்ததாக ஞாபகம். லார்டு மௌண்ட்பாட்டன் பிரிட்டிஷ் மந்திரி சபையின் நோக்கங்களை விவரித்துக் கேள்விகளுக்குப் பதிலளித்தபடியே கூட்டம் நடந்த அறைக்கு உள்ளே வந்துகொண்டும் வெளியே போய்க்கொண்டும் இருந்தார்.

சுதந்தரச் சட்டத்தின் நகல் எங்கள்முன் இருந்தது. இந்தச் சட்டத்தின் ஒரு பகுதியினால் ஐந்நூற்று அறுபது சிறிய துண்டுகளாகிய சுதந்தர ராஜ்யங்களைப் பிரிட்டிஷ் பார்லிமெண்டார் உற்பத்தி செய்துவிட்டார்கள். தமோற்றம் தரும் அந்தப் பகுதியை நான் படித்தேன். அந்தத் துண்டுகள் யாவும் சேர்ந்தால் எஞ்சியிருக்கும் இந்தியாவைவிடப் பெரிய நிலப்பரப்பாக இருக்கும். புதிய இந்தியாவுக்கு முன் நின்ற தொல்லைகளுள் இதுதான் அபாயமானது.

இந்தியா சுதந்தர நாடாக விளங்க, வேண்டிய உதவி செய்வதாகச் சொல்லிக்கொண்டே வந்த 'நேசபாவமுள்ள' பிரிட்டனுடைய இந்தக் காரியத்தைக் கண்டு நான் பிரமித்துப் போனேன்.

* *

1946-ஆம் வருஷத்துப் பிற்பகுதியும் 1947-ஆம் வருஷத்து

காப்பிரைட்: நியூ டெமொகிராட் (ஆங்கிலம்: 20-10-'48), பம்பாய்.

ஆரம்ப மாதங்களும் இந்தியத் தலைவர்களை மிகவும் கவலைக்குள்ளாக்கிவிட்ட காலம். ஜின்னுவால் வந்த தலைவலிக்கு அடுத்தபடி வைசிராயின் காரியாலயம் அதிகத் தொந்தரவு கொடுத்தது. நரேந்திர மண்டலத்தின் தலைவராகிய போபால் நவாபினுடைய உதவியைப் பெற்று இந்திய சம்ஸ்தாணுதிபதிகளை ஒன்று கூட்டி இந்திய யூனியனேடு பேரம் பேசத் தன்னுல் ஆன காரியங்களையெல்லாம் அது செய்தது. பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ்களும் இந்தியாவில் உள்ள வெள்ளை அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு தொழிற் கட்சி மந்திரி சபையின் திட்டத்தைக் குலைக்க வேண்டுமென்று எண்ணினர்; இந்தியா சுதந்தர நாடாகத்தான் இருக்கவேண்டுமென்ருல் அது பலமற்றதாக இருக்கவேண்டுமென்பது அவர்கள் விருப்பம்.

பல சம்ஸ்தாணுதிபதிகள் தாம் கனவு கண்ட சுதந்தர யுகம் உதயமாகப் போவதாக எண்ணினர். அவர்களுக்கு உண்மை நிலையைச் சொல்லவேண்டியிருந்தது. இந்திய சம்ஸ்தானப் பிரதமர்களில் பலர் தங்கள் சம்ஸ்தாணுதிபதிகளைப் போலவே என்ன என்னவோ ஆவலுடையவர்களாக இருந்தனர். இந்தியாவை விட்டுப் பிரிந்து நின்ருல் சம்ஸ்தானங்கள் வாழ வழியில்லை என்பதையும், இந்தியா இல்லையென்ருல் சம்ஸ்தானங்களும் இல்லை என்பதையும் அவர்கள் உணரும்படி செய்ய வேண்டியிருந்தது. இத்தகைய எதிர்ப்புச் சக்திகளை யெல்லாம் சர்தார் படேல் எவ்வாறு மெல்ல மெல்ல உடைத்தெறிந்தார் என்ற கதை ஒரு நாள் வெளியாகும். ஒரு சமயம், ஆகஸ்டு 15-ஆம் தேதிக்குச் சில நாள் முன், பாகிஸ்தானின் சாயை கராச்சியிலிருந்து ஜோத்பூர், உதயபுரி, இந்தோர் வழியே போபாலில் வந்து நிற்குமென்று நினைக்கும்படியாகக்கூட இருந்தது.

இத்தகைய தருணத்தில் சம்ஸ்தாணுதிபதிகளுக்குள்ளும், அவர்களுடைய அமைச்சர்களுக்குள்ளும் சிறந்த தேசபக்தியும் தீர்க்க திருஷ்டியும் படைத்தவர்கள் இருந்தார்கள். அவருள் பிகானீர் மகாராஜா ஒருவர். மற்ருெருவர் உதயபுரி மகாராணு. அவரோடு நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவரிடம் நான் பெருமதிப்பு வைத்திருக்கிறேன். அப்போது அவருடைய அரசியல் ஆலோசனையாளனுக இருந்தேன். நோயாளியான இந்தக் கிழவரை ஆசை காட்டிப் பகைவர் தம் கூட்டத்தில் சேர்த்துக்கொள்வார்களென்று பலபேர் நினைத்தார்கள். சாதாரண விஷயங்களில் அவர் மந்திரிகளின் யோசனைப்படி நடப்பவர். இந்த விஷயத்தில் அவர் கல்லைப் போல அசையாமல் இருந்தார். இந்திய டொமினியனேடு சேரவேண்டும் என்பதில் அவருக்கு எப்போதும் தடுமாற்றமே இல்லை. ஒரு வாரம் முழுதும் இந்தியாவுக்கு விரோதமான கூட்டத்தோடு அவரைச் சேர்க்கக் குட்டிக்கரணம் போட்டுப் பார்த்தார்கள். மகாராணு ஒரே தீர்மானமாக இருந்தார். மந்திரிகளோடு கலந்து ஆலோசிக்க வேண்டிய அவசியங்கூட அவருக்கு இல்லை. அவர் சொன்ன வார்த்தை இன்னும் என் காதில் ஒலிக்கிறது; "இந்தியாவை விட்டு நான் என்றும் பிரியவே மாட்டேன்; என் பகைவர்களோடு முன்னேர்கள் சேர்ந்து நிற்க எண்ணியிருந்தால் இந்த உதயபுரி இப்போது

ஹைதராபாத்தைவிடப் பெரிதாக இருக்குமே! விரோதியர்கள் தங்கள் நெறியை முன்பே நிச்சயம் செய்துவிட்டார்கள். அதிலிருந்து நான் வழுவமாட்டேன்" என்றார்.

மன்னர்களுக்கு ஆலோசகர்களாக இருந்தவர்களுள் பலர் உதவி செய்தனர். அவர்களுக்குள் பரோடாவின் பிரதமராக இருந்த பி. எல். மித்தர் மிகவும் முக்கியமானவர். ஒவ்வொரு கட்டத்திலும் அவர் உறுதியாக நின்றார். இல்லாவிட்டால் எவ்வளவோ தொல்லைகள் ஏற்பட்டிருக்கும். "இந்தியாவுக்கும் சம்ஸ்தானங்களுக்கும் சமாதான ஏற்பாடு செய்யும் யோக்கியமான மத்தியஸ்தனாக இருப்பேன்" என்று சொல்லிக்கொண்டு ஒரு பிரிட்டிஷ் அதிகாரி வந்தார். அப்போது, பி. எல். மித்தர், "யோக்கியரோ அயோக்கியரோ எங்களுக்குப் புரோக்கர்களே தேவையில்லை" என்று சொல்லிவிட்டாராம்.

இவையெல்லாம் சரித்திரமாகிவிட்ட செய்திகள். இந்தச் சரித்திரத்தில் சர்தாரின் ராஜதந்திரந்தான் மூல சக்தியாக இருந்தது. முயற்சிகள் எல்லாம் தகர்ந்துவிடும் என்று தோன்றிய சமயத்தில்கூட அவர் மலைபோல் சலனமின்றி நின்று, தளர்ச்சியில்லாத தமது போராற்றலால், மன்னர்கள் முடிவான ஐக்கியத்தை நோக்கிச் செல்லும்படி செய்தார். அவர் பதவியில் இல்லாமல் இருந்தாலும், மன்னர்களுக்குள்ளும் அவர்களுடைய மந்திரிகளுக்குள்ளும் எப்படியாவது பலம் மிக்க இந்தியாவை நிர்மாணிக்கவேண்டுமென்ற ஆவலுள்ள தேசபக்தர்கள் இல்லாமல் போயிருந்தாலும், இந்தியா பிறந்தபொழுதே நம் பிக்கையற்ற நிலையில் நின்றிருக்கும்.

ஆபத்து என்னவோ உண்மையாகவே இருந்தது. பிரிட்டிஷ் அதிகாரம் இந்தியாவில் இருப்பதற்குச் சம்ஸ்தானங்கள் உதவி வந்திருக்கின்றன. சம்ஸ்தானங்களைத் தங்கள் ஆட்சியின் பக்கபலமாக ஆக்கத் தொடங்கியவர் லார்டு வெல்லஸ்லி. 1857-இல் இங்கிலாந்தின் அரசி இந்தியாவின் சக்கரவர்த்தினி ஆன பொழுது லார்டு கானிங் அந்தக் கைங்கரியத்தைப் பரிபூரணமாக்கினார். 1857-ஆம் வருஷத்தில் நிகழ்ந்த தேசியப் புரட்சிப் புயலை அடக்க இந்தச் சம்ஸ்தானங்கள் எவ்வளவு உபகாரமாக இருந்தன என்பதை அவர் உணர்ந்தார். ஏகாதிபத்தியத்தைச் சாசுவதமாக்கும் விஷயத்தில் சம்ஸ்தானங்கள் மிகவும் முக்கியமானவை என்பதைத் தெரிந்துகொண்டார்.

அவற்றை உருட்டி மிரட்டி வைத்திருந்தால் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆபத்து வரும் காலங்களில் சம்ஸ்தானாதிபதிகளின் உதவி கிடைக்கும் என்பது அவர் நினைப்பு. தவிர, படித்த வகுப்பாரிடையே தேசிய ஜனநாயகக் கொள்கைகள் உருவாகி வந்தன. அவற்றை எதிர்க்கவும் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லவா?

1935-ஆம் வருஷம் இந்தியா கவர்ன்மெண்டு சட்டம் வந்தது. அப்போது 21 முதல் 9 குண்டு மரியாதை வரையில் பெற்ற சமஸ்தானங்கள் 19 இங்கே இருந்தன. குண்டு மரியாதை பெறாத சம்ஸ்தானங்கள் 441. குண்டு மரியாதையையுடைய சம்ஸ்தானங்களில் பெரியது 32,698 சதுர மைல் பரப்புள்ள ஹைதராபாது; சிறியது 49 சதுர மைல் பரப்புள்ள ஸாசின். இந்தச் சம்ஸ்தானங்களைத் தவிர, சின்னச் சின்ன எஸ்டேட்டுகள்

வேறு இருக்கின்றன. அவற்றில் சில, வருஷத்துக்கு அரைப் பவுன் வரி வசூலிக்கின்றன. அத்தகைய குட்டிச் சம்ஸ்தானங்கள், இந்தியாவின் மேற்குப் பகுதியில் மாத்திரம் 7798 இருக்கின்றன.

பரோடா, க்வாலியர், ஹைதராபாது, காஷ்மீர், மைசூர், சிக்கிம் என்ற சம்ஸ்தானங்களில் ரெஸிடெண்டுகள் இருந்தார்கள். மற்றவைகளெல்லாம் 'ஏஜென்சிகள்' என்ற வகையின்கீழ் வந்தன. மத்திய இந்தியாவில் 28, சென்னையில் 4, பஞ்சாபில் 13, ராஜபுதனத்தில் 19, மேற்கிந்தியாவில் 17 இருந்தன. குண்டு மரியாதையில்லாத 441 சிறிய சம்ஸ்தானங்களில் 131 பம்பாய் மாகாணத்தைச் சார்ந்தவை; அவை வட குஜராத்திலும் காடியாவாடிலும் இருந்தன. மற்றவை மத்திய மாகாணம், மத்திய இந்தியா, பிஹார், ஒரிஸ்ஸா ஆகியவற்றில் இருந்தன. இத்தனை சம்ஸ்தானங்களின் மேலும் அரசனுடைய பிரதிநிதி என்ற முறையில் வைசிராய் ஆணை செலுத்தி வந்தார்.

* *

இந்தச் சம்ஸ்தானங்களில் பெரும்பாலானவை இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் முளைத்தவை. பதினெட்டுச் சம்ஸ்தானங்கள் மட்டுமே ஔரங்கசீப் காலந் தொட்டு இருந்து வருபவை. அவற்றுள்ளும் சில பழங்கால இந்தியாவிலேயே தோன்றிய பெருமைக்கு உரியவை. ஒன்றிரண்டு சம்ஸ்தானங்கள் ஆறும் நூற்றாண்டில் குப்தர்களின் பேரரசு மறைந்த காலத்திலேயே தோன்றின. பிரதாப்கட், வௌஸ்வதா, டங்கர்பூர், உதயபூர் சம்ஸ்தான பரம்பரைகள் மிகப் பழைய அரச வம்சத்தைச் சார்ந்தவை; சூரிய வம்சத்தின் வழி வந்தவை.

துருக்கியர்களும் ஆப்கானியர்களும் இந்தியாவில் வலி பெற்றிருந்த காலத்தில் சிதோர் ராணுக்கள் அந்நியர் அரசாட்சிக்கு வளைந்து கொடுக்காமல் எதிர்த்து வந்தனர். இந்த ராணுக்களைச் சேர்ந்தவரே அக்பரை எதிர்த்த ராணு பிரதாப்.

இந்த அரசர்கள் தர்ம சாஸ்திரத்தில் சொல்லியபடி அரசாண்டு வந்தார்கள். துருக்கியர்களும் ஆப்கானியர்களும் மொகலாயர்களும் மிகவும் கொடுமை செய்தாலும் தங்களுடைய அரசை அவர்கள் பாதுகாத்து வந்தார்கள்.

மொகலாய சக்கரவர்த்திகள் பிரதிநிதிகளுள் இப்போது இருப்பவர் நிஜாம் ஒருவரே. மற்றச் சம்ஸ்தானதிபதிகளும் எந்தக் காலத்திலும் பிறருக்கு அடங்காத மேலதிகாரம் பெற்றதே இல்லை. ஸிந்தியாக்களும் ஹோல்கர்களும் காயக்வாடுகளும் பிரிட்டிஷாருடைய உதவி இல்லாதிருந்தால் ராஜபுதனத்துச் சம்ஸ்தானங்களை நிர்வகித்திருக்க முடியாது.

ஹிந்து சம்ஸ்தானங்களில் தலைமையான மைசூர் பிரிட்டிஷாரால் 1881-ஆம் வருஷம் திருத்தியமைக்கப்பட்டது. காசி சம்ஸ்தானத்தை 1911-இல் திருத்தியமைத்தார்கள்.

எந்தக் காலத்திலும் இந்தச் சம்ஸ்தானங்களில் ஒன்றாவது சுதந்தரமானதாக இருந்ததில்லை. உதயபுரியும் நேபாளமும் கோல்ஹாபூரும் இதற்கு விலக்கு. 1935-இல் நேபாளம் ஒன்றுதான் சுதந்தர அரசாக இருந்தது.

1935-க்குச் சில காலத்துக்கு முன் நரேந்திர மண்டலத்தின் நிரக்

தரக் கமிட்டியார், கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் சம்ஸ்தானங்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி சமத்துவமும் சர்வ சுதந்தரத்தை அநுபவிக்கும் உரிமையும் உண்டென்று சொன்னார்கள். பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் இந்தியாவில் இரண்டு வேஷம் போட வேண்டியிருந்தது. இங்கே ஏற்பட்ட ஜனநாயக எழுச்சிக்கு விரோதமாகச் சம்ஸ்தானங்களை ஏவிவிடவேண்டியிருந்தது; சம்ஸ்தானாதிபதிகளைத் தன் ஆணைக்குள் அடக்கிவைக்கவும் வேண்டியிருந்தது. ஆகவே, சம்ஸ்தானங்களில் எழும் ஜனநாயக இயக்கங்களை நசுக்க அவற்றின் மன்னர்கள் தங்கள் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் விஷயத்தில் பிரிட்டிஷார் ஊக்கம் அளித்தனர்; அதே சமயத்தில் தங்களுடைய மேலதிகாரத்தையும் அதிகமாக வற்புறுத்தினர். நடைமுறையில் சம்ஸ்தான மக்களைப் பொறுத்த வரையில் தங்களுக்குச் சர்வ சுதந்தரம் உண்டென்று சம்ஸ்தானாதிபதிகள் உரிமை கொண்டாடினர். தங்கள் எஜமானராகிய பிரிட்டிஷாரிடத்தில் விரலைக்கூட அசைக்க முடியவில்லை. லார்டு ரீடிங் 1926 மார்ச்சு மாதம் 26-ஆம் தேதி நிஜாமுக்கு எழுதின கடிதத்தில் இதை ஒளிவு மறைவின்றித் தெரிவித்திருக்கிறார்.

"பிரிட்டிஷ் அரசருடைய ஆணையே இந்தியாவில் யாவற்றுக்கும் மேற்பட்டது. ஆகையால் இந்திய சம்ஸ்தான மன்னர் யாருக்கும், சமமான அந்தஸ்தில் நின்று பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்துகொள்ள உரிமை கிடையாது" என்று எழுதினார். இதே கொள்கைதான் இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தின் மூலம் சட்ட ரீதியில் உருப்பெற்றது. அரசரின் பிரதிநிதியான வைசிராயின் ஆட்சிக்கு அடங்கினவை மாகாணங்கள் என்று அந்தச் சட்டம் வரையறை செய்தது.

* *

சுதந்தரமான தனியுரிமை உடைய நாடு மட்டுமே சர்வ தேச விவகாரத்தில் அங்கம் வகிக்க முடியும். சர்வ தேசச் சட்டப்படி அதன் உரிமையும் கடமையும் தீர்மானிக்கப் பெறுகின்றன. மற்றவர்களுக்கு அடங்கிய அரசுகளோ தனிப்பட்ட வகையைச் சார்ந்தவை. சர்வ தேச சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் சர்வ சுதந்தர நாடொன்றுக்கு அடங்கி இருப்பவை அவை. ஆணை செலுத்தும் நாட்டுக்கும் இத்தகைய சம்ஸ்தானத்துக்கும் சமநிலை இல்லை. முன்னது தன் ஆணையைச் செலுத்தலாம்; அதற்கு அடங்கி நடப்பது பின்னதன் கடமை. இது சட்டபூர்வமான நிலை.

* *

இந்திய சுதந்தரச் சட்டத்தால் இந்திய அரசாட்சி இந்திய மக்களின் கைக்கு வந்தது. ஆனால் சம்ஸ்தானங்களையெல்லாம் அப்படி அப்படியே தான்தோன்றியாக நிற்கும்படியோ இந்திய டொமினியனுக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கும்படியோ விட்டுவிட்டார்கள். இதனால் வெகு நாளாகக் கற்பனை செய்துகொண்டிருந்த ஏகபோக உரிமையைத் தாம் உடனே கைப்பற்றிக்கொள்ளலாமென்று சம்ஸ்தானாதிபதிகள் நினைத்தார்கள். பிரிட்டிஷாருக்குச் சாதகமாகவும் ஜனநாயக முயற்சிகளுக்கு விரோதமாகவும் சம்ஸ்தானாதிபதிகள் இருப்பார்களென்

றும், பிரிட்டிஷாரின் வேலைத்தனத்துக்கு ஏற்ற சிறிய நிலைக்களங்களாகச் சம்ஸ்தானங்கள் இருக்குமென்றும் பிரிட்டிஷ் கன்ஸெர்வெடிவ் கட்சியாரில் பலர் நம்பினார்கள்.

ஆனால் பிரிட்டிஷ் மந்திரி சபை நியாயப்படியே நடந்தது. லார்டு மௌண்ட்பாட்டன் அநுகூலம் செய்தார். சர்தார் வேகத்தோடும் வீரத்தோடும் காரியத்தை நடத்தினார். சம்ஸ்தானாதிபதிகள் ஒன்று சேரச் சக்தி பெறவில்லை; தங்களைப் பாதுகாக்கும் சக்திமான் இல்லாமையால், அதோகதி நேருமோ என்று சிலர் பயந்தனர். கடைசியில் இந்தியாவுக்கு வர இருந்த ஆபத்து மறைந்து மாய்ந்தது.

ஜூனாகட் எதிர்த்தது; உடனே மண்ணைக் கவ்வியது. ஹைதராபாத் எதிர்க்க முயன்றது; தோல்வியுற்றது. இந்தியா பிளவுபடாமல் இணைந்து இறுகி நிற்கிறது. மக்களுக்கே ஆட்சியுரிமை என்பது கடைசியில் நிலைபெற்றது.

விதி

பாக்தாதில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் சாமான் கொள்முதல் செய்யத் தன் வேலைக்காரனைச் சந்தைக்கு அனுப்பினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் அந்த வேலைக்காரன் நடுங்கிக் கொண்டே திரும்பி வந்தான். "எஜமான், சந்தையில் ஓர் ஆள் என்னையே வெறித்து வெறித்துப் பார்ப்பதைக் கண்டேன். கூர்ந்து கவனித்தபோது, அவனே எமதர்மராஜா என்று எனக்குத் தெரிந்துவிட்டது. அவன் பார்த்த பார்வையைக் கண்டபோது, அவன் என்னைப் பிடிக்கவே இந்த ஊருக்கு வந்திருக்கிறான் என்று தோன்றியது. ஆகையால், எனக்கு ஒரு குதிரை கொடுங்கள். அதில் ஏறி நான் சாமரா நகரத்துக்குப் போய்விடுகிறேன். எமதர்மன் ஏமாந்து திரும்பிப் போய்விடுவான்" என்றான்.

வியாபாரி மனமிரங்கி அவ்விதமே ஒரு குதிரையை வேலைக்காரனுக்குக் கொடுத்தான். வேலைக்காரன் போய்விட்டான்.

பின்பு வியாபாரி தானே சந்தைக்குப் போனான். அங்கே எமதர்மனைக் கண்டான். "இன்று காலை என் வேலைக்காரனைப் பயங்கரமாய் உற்று உற்றுப் பார்த்தீராமே; ஏன்?" என்று கேட்டான்.

"பயங்கரமாகவா? இல்லையே! ஆச்சரியத்துடனேயே பார்த்தேன். இன்றிரவு சாமரா நகரத்தில் போய் அவனை நான் பிடித்துக் கொண்டு போக வேண்டுமென்று அவன் தலையில் எழுதியிருக்க, அவன் இங்கே இருக்கிறானே என்று நான் ஆச்சரியம் அடைந்தேன்" என்றான் எமன்.

—ஸமர்ஸெட் மாம்.

க்விஸ்

[நமக்கு மிகவும் தெரிந்த விஷயங்களில்கூடச் சில சமயம் திட்டமான விவரங்கள் ஞாபகம் இருப்பதில்லை. இதோ சில கேள்விகள். எங்கே, உங்கள் கவன சக்தியைச் சோதித்துப் பாருங்கள். பிறகு, 15-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.]

விஞ்ஞானம் :

1. இரண்டு தரம் நோபெல் பரிசு பெற்ற விஞ்ஞானி யார்?

2. மலேரியா பரவுவதற்குக் காரணம் கொசுதான் என்று கண்டுபிடித்தவர் பெயர் என்ன?

3. ஸர் ஸி. வி. ராமனின் ஆராய்ச்சி முக்கியமாக எதைப் பற்றி?

சங்கீதம் :

1. இந்தப் பாட்டுக்களின் சாகித்திய கர்த்தாக்கள் யார்?—(அ) 'நேற்றந்தி நேரத்திலே', (ஆ) 'காலைத்தூக்கி நின்றாடும் தெய்வமே', (இ) 'நவசித்தி பெற்றாலும்.'

2. இந்த வித்வான்கள் யாருடைய சிஷ்யர்?—(அ) அரியக்குடி, (ஆ) செம்மங்குடி, (இ) பல்லடம் சஞ்சீவிராவ்.

3. வட இந்திய சங்கீதத்தையும் முறையாகப் பயின்ற கர்நாடக சங்கீத வித்வான் இருக்கிறாரா?

கவர்னர் யார்?

(1) ஒரிஸ்ஸா, (2) கிழக்குப் பஞ்சாப், (3) மத்திய மாகாணம், (4) பம்பாய்.

பொது :

(1) இந்தியக் கடற்படைத் தலைமைக் கப்பல் எது? இதன் பழைய பெயர் என்ன?

(2) சாதாரண நெருப்புப் பெட்டியில் எத்தனை குச்சி?

(3) சமீபத்தில் புதிதாய் ஏற்பட்ட ரேடியோ நிலையங்கள் எவை எவை?

எப்படி?

சோமு, பாலு, வாசு மூன்று பேர். வாசுவின் மனைவி இறந்து விடவே தன் மருமகளைத் தன்னுடனிருந்து வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்கிறான். சோமுவுக்கு ஒரே பெண். இதன் மத்தியில் பாலு கல்யாணம் செய்து கொண்டவுடன் அவன் மனைவி எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்று சொல்கிறாள். அதன்படியே அந்தப் பரிவாரத்தில் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, தலைக்கு மாதம் 50 ரூபாய் வீதம் போட்டு, செலவு போக மீதியைச் சமமாகப் பகிர்ந்து கொள்வதாக ஏற்பாடு செய்து கொண்டார்கள். ஒரு மாதம் செலவு ரூ. 192 ஆயிற்று. மிஞ்சியதைப் பகிர்ந்ததில் தலைக்கு இரண்டு ரூபாய் முழுசாகக் கிடைத்தது. எப்படி?

குழந்தைகள் குறும்பு

இன்று காலை கோபுவும் கிட்டுவும் சண்டை போட்டார்கள். கோபு தோற்றுப் போய்விட்டான். அதனால் அழுதுகொண்டே அவன் அம்மாவிடம் வந்தான். அம்மா அவனைத் தூக்கி வைத்துக்கொண்டு சமாதானம் சொல்லித் தேற்றினாள். கோபுவின் கோபம் ஆறியதும், "அம்மா! நான்மட்டும் தோற்றுப் போயிராவிட்டால், கிட்டுவை என்ன செய்திருப்பேன் தெரியுமா? காலைவாரி ஒரே தூக்காய்த் தூக்கி வீசி எறிந்திருப்பேன்" என்று கூறினான்.

—கரு. சி. மணிமுத்து, (வலம்புரி)

* *

விமலாவும் ராஜியும் கூடத்திலே 'அம்மா - அப்பா' விளையாட்டு விளையாடினார்கள். ஐந்து நிமிஷத்துக்குள் வீடே இடிந்துபோகும் போல் சத்தம் கேட்டது. "என்னடீ சத்தம்?" என்று கேட்டுக்கொண்டே பட்டம்மா கூடத்துக்கு வந்தாள். "ஒண்ணுமில்லேம்மா! நாங்கள் 'அம்மா - அப்பா' விளையாட்டு விளையாடறோம்" என்றார்கள் குழந்தைகள். அம்மாவுக்கு வெட்கமாகப் போய்விட்டது. "சரி, சரி; போதும், அந்த விளையாட்டு. அதை நிறுத்திவிட்டு வேறு ஏதாவது விளையாடுங்கள்" என்று சொல்லி, உள்ளே போனாள்.

ஐந்து நிமிஷத்தில் மறுபடியும் கூடத்தில் ஒரே சத்தமாக இருந்தது. அம்மா வந்தாள். "நீ கட்டேலே போக! நாசமாப் போக! தரித்திரமே! ஏண்டி! என் உயிரை வாங்கறே? எப்போதான் நோக்குச் சாவு வருமோ, சனியனே!" என்று விமலா பல்லைக் கடித்துக்கொண்டு ராஜியை வைவது காதில் விழுந்தது. "யாரையடி அப்படி வையறே?" என்று கேட்டாள் பட்டம்மா. "இல்லேம்மா! நாங்க 'அம்மா - பொண்ணு' விளையாட்டு விளையாடறோம். நான்தான் அம்மா; அவ என் பொண்ணு" என்றாள் விமலா. பட்டம்மா முகத்தில் ஈயாடவில்லை.

—பங்கஜவல்லி, (பெங்களூர் கண்டோன்மெண்ட்)

ஒரு பெரிய மாம்பழமும் ஒரு சின்ன மாம்பழமும் கிடைத்தன. அண்ணன் சாம்பு அந்த இரண்டையும் தம்பி சுப்புவின் முன் வைத்து, "உன் பங்கை நீயே எடுத்துக்கொள்" என்றான். தம்பி சுப்பு ஆசையோடு, பெரிய மாம்பழத்தை எடுக்கக் கையை நீட்டினான். அண்ணன் காலைப் படீர் என்று உதைத்துக்கொண்டு, "அடே! அக்கிரமம் செய்யாதே. அதைக் கீழே வைத்துவிட்டு, உன் பங்கை எடுத்துக்கொள்" என்றான்.

* *

"ஞாயிற்றுக் கிழமை கடவுள் ஓய்வு எடுத்துக்கொண்ட நாள். அன்று யாரும் எந்த வேலையும் செய்யக்கூடாது; குழந்தைகள் விளையாடவும் கூடாது" என்று சிறுவன் வில்லிக்கு அவன் தாய் சொல்லியிருந்தாள்.

அப்படியிருந்தும், ஞாயிற்றுக் கிழமை, சிறுவன் தன் பொம்மைப் படகை ஒரு தொட்டித் தண்ணீரில் விட்டுக்கொண்டிருந்தான். இதைக் கண்ட தாய், "ஓய்வு நாளில் உல்லாசப் படகு விடுவது நல்ல பையனுக்கு அடையாளமல்ல. ஏன் விடுகிறாய்?" என்று கேட்டாள்.

"இல்லை, அம்மா. இது உல்லாசப் படகு அல்ல; கர்த்தரின் சுவிசேஷத்தைப் பிரசாரம் செய்வதற்காகப் புறப்பட்ட மிஷனரி படகு" என்றான் வில்லி.

'கார்டியன்'

* *

கோவிலுக்குப் போகும்போது, குழந்தை கோவிந்தன், "ஏன் அம்மா, நாம் கோவிலுக்குப் போகணும்?" என்று கேட்டான். "சுவாமியைக் கும்பிட்டுப் பிரார்த்திக்க" என்றாள் தாய். "சுவாமியை நான் என்ன பிரார்த்திக்கிறது?" என்று மறுபடியும் குழந்தை கேட்டான். "'சுவாமி, என்னை நல்ல பையனாகச் செய்' என்று நீ பிரார்த்திக்க வேண்டும்" என்றாள் தாய்.



சுவாமி தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி வரும்போது, "என்ன, உன்னை நல்ல பையனாகச் செய்யும்படி சுவாமியைப் பிரார்த்தித்தாயா?" என்று தாய் கேட்டாள்.

"உம், பிரார்த்தித்தேன். அதோடு உன்னையும் அப்பாவையும் பற்றிக்கூடச் சுவாமி காதிலே இரண்டு வார்த்தை போட்டு வச்சிருக்கேன்" என்றான் குழந்தை.

கலப்பு மணம் சரியா, தவறு? அது மூளையைக் குழப்பும் பிரச்னை. ஆனால், இதோ ஓர் அரிய அநுபவம்.

இந்தியரை மணந்தேன்

ப்ரேடா வேதி

பதினேழு வருஷங்களுக்கு முன்னே ஒரு நாள் சீமை ஆக்ஸ்போர்டு காலேஜ் வகுப்பறைக்கு வெளியிலே ஆணும் பெண்ணுமான இரண்டு மாணவர்கள் சந்தித்தார்கள். இரண்டு வருஷங்களுக்கெல்லாம் அவர்கள் மணம் புரிந்துகொண்டு தம்பதிகளானார்கள். சாதாரணக் கதைதான் என்று சொல்வீர்கள். ஆம்; ஆனல் அந்த மாணவன் இந்தியன், மாணவி இங்கிலீஷ்காரி.

இதனாலே அந்த முதல் சந்திப்பிலிருந்தே அவர்களுடைய உறவு ஒரு பெரிய புரட்சியாகிவிட்டது; மாணவ மாணவிகளும் சரி, புரொபஸர்களும் சரி, இரண்டு கட்சிகளாகப் பிரிந்தார்கள். ஒரு கட்சியார் இந்த உறவை ஆதரித்தார்கள்; மறு கட்சியார் எதிர்த்தார்கள். என்ன இருந்தாலும் இங்கிலீஷ்காரர்கள் அல்லவா; தவிர, ஆக்ஸ்போர்டு அல்லவா? ஆகையால், எதிர்ப்புக்காரர்கள் பகிரங்கமாக ஆட்சேபிக்கவில்லை. ஆனல், "இந்தப் பயல் மாத்திரம் முரட்டுப் பயில்வானாக இராவிட்டால், இவனை நம்முடைய ஆட்கள் ஆற்றிலே போட்டு அமுக்கியிருப்பார்கள்" என்று மட்டில் அவர்கள் ரகசியமாகப் பேசிக்கொண்டார்கள். ஆதரித்தவர்களோ அவர்களிடம் மிக்க அன்பாக நடந்துகொண்டு, மற்ற எந்தக் காதல் ஜோடியையும் போலவே அவர்களையும் தமாஷ் செய்தார்கள்.

குடும்பங்களிலும் இதே மாதிரிதான் இரண்டு போர்முனைகள். பெண்ணின் குடும்பத்தில் தாயும் சகோதரனும் அவளிடம் விசுவாசமாகவே இருந்தார்கள். அவள் தவறு செய்ய மாட்டாள் என்று அவர்களுக்கு நம்பிக்கை; அவளை மாற்றமுடியாது என்று அவர்களுக்குத் தெரியும். அம்மான்களும் அத்தைகளும் ஊராரும் பெண்ணை எதிர்த்தார்கள். ஒரே கட்டுப்பாடாக அவர்கள் எதிர்த்ததால், கடைசியிலே கல்யாணம் வீட்டிலே நடக்க முடியாமல் யுனிவர்ஸிடியிலேயே நடக்க வேண்டியதாயிற்று.

பிள்ளையின் தரப்பிலும் அந்த ஆரம்ப காலத்தில் கடிதங்களின் மூலம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. பிள்ளையின் தாய் தாராள மனசும் விசால இருதயமும் உடையவள். கைம்பெண்ணாகையால் அடுக்களையிலே அடைத்துக் கிடந்து எளிய வாழ்வு வாழ்ந்தாள். என்றாலும், தன் மகனை ஆதரித்தாள். "இத்தனை வருஷம் படித்தவன் நீ. மனைவியைத் தேர்ந்தெடுக்க உனக்குத் தெரியாதிருக்குமா? உன் இஷ்டப்படி செய்" என்று எழுதி, மகனுக்கு ஆசியும் கூறினாள்.

காப்பிரைட்: ஸவுண்ட் (ஆங்கிலம்: நவம்பர் '48), பம்பாய்.

ஆனால், "அந்நியப் பெண் உனக்கு மருமகளாய் வந்து உன்னை என்ன பாடுபடுத்தப்போகிறாளோ?" என்று பிள்ளையின் தாயிடம் ஓர் அத்தை கண்ணீர் விட்டாள். "பிறர் எப்படி நடக்கவேண்டுமென்று விரும்புகிறோமோ, அப்படியே நாமும் நடக்க வேண்டும். ஆகையால்தான் இந்தக் கல்யாணத்தை நான் எதிர்க்கிறேன். நம் நாட்டுப் படித்த பையன்கள் வெளிநாடுகளிலே போய் மணந்துகொண்டால், இங்கே உள்ள படித்த பெண்களின் கதி என்ன?" என்றார் மற்றோர் உறவினர்.

இந்த வாதங்களிலெல்லாம் கொஞ்சம் நியாயம் இருக்கத்தான் இருக்கிறது. என்றாலும், காதல் கொண்ட ஒரு வாலிபனுக்கும் ஓர் இளம் பெண்ணுக்கும் இதெல்லாம் காதில் விழுமா? அவர்கள் மணந்து கொண்டார்கள். ஒரு வருஷத்துக்கெல்லாம் அவர்களுடைய முதல் குழந்தையாக ஒரு மகனும் பிறந்தான்.

அந்த ஆரம்ப நாட்களில் இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகள். அவற்றையெல்லாம் கதை கதையாய்ச் சொல்லலாம். என் கணவன் வீட்டிலே நான் முதல் முதலாகப் பிரவேசித்த சம்பவம், அப்போது என் கழுத்திலே குவிந்த மல்லிகை மாலைகளின் கம் என்ற வாசனை, என் மாமி தன் மகள், மருமகள், பேரன் மூவரையும் எதிர்கொண்டழைக்கக் கூடத்திலே கம்பீரமாய் நடந்து வந்த காட்சி-இவையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகப் பளிச்சென்று இப்போது எனக்கு ஞாபகம் வருகின்றன. குழந்தைகளெல்லாம் ஆச்சரியத்துடன் கண்களை அகல விழித்துக்கொண்டு நின்றன. கிழவிகள் மௌனமாய் அன்புகனிய எங்களை வரவேற்றார்கள். தாயாதி வாலிபர்களும் இளம் பெண்களும் தாங்கள் கற்ற இங்கிலீஷ் பாஷைக்குத் தங்கள் சொந்த வீட்டிலேயே ஏற்பட்ட புதிய பிரயோசனத்தைக் கண்டு பரபரப்படைந்தார்கள். மேளதாளங்கள், விருந்து, சேலைகள், பஞ்சாபி உடைகளெல்லாம் நிறைந்தன.

முதல் வருஷம் மாறுதல் வருஷம்; அங்கியும் குல்லாயும் தரித்திருந்த மாணவி, இந்திய மனைவியாக மாறிப் புதிய உணவு உண்டு, நட்சத்திரங்கள் ஜொலிக்கும் வானத்தைப் பார்த்தவண்ணம் திறந்த மாடியில் படுத்து, கொசுவலை உபயோகிக்கவும் வேறு பாஷை பேசவும் வேறு விதமாய் வாழவும் கற்ற காலம். கடுமையான காரியந்தான். ஆனால், தன்னிச்சையாகவே, ஏதோ வீரச் செயல் புரிவது போன்ற ஒரு குதூகலத்துடனேயே இதை யெல்லாம் செய்தேன்.

சென்ற சில வருஷகாலத்தில் நிகழ்ந்த வேறு நூற்றுக்கணக்கான கல்யாணங்களின் கதையும் சொற்ப மாறுதல்களுடன் இதே போன்றதுதான். பஞ்சாபில் மட்டும் இத்தகைய முந்நூறு கல்யாணங்கள் நடந்திருக்கின்றன. சகல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் ஐக்கிய அமெரிக்காவிலிருந்தும் வந்தவர் மணப் பெண்கள்.

இரண்டாவது உலக யுத்த காலத்தில் மற்றொரு புதிய வழக்கம் தோன்றியது. இந்தியாவுக்கு வந்த அயல் நாட்டு ஸோல்ஜர்கள் இந்தியப் பெண்களை மணந்து கொண்டார்கள். பழைய சரித்திரத்தில் ரண்ஜித் சிங்கின் தளபதிகள் மலைஜாதிப் பெண்களை மணந்து கொண்டார்கள். அவர்களில் ஒருத்தி

யின் சமாதி லாகூர் கூரி பாக் என்னும் இடத்தில் இருக்கிறது. பிரயாணம் கஷ்டமாக இருந்த காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி யின் தூண்களாக விளங்கிய உத்தி யோகஸ்தர்கள் 'சுதேசி' மனைவி களை மணந்து கொண்டார்கள். ஆனால், பின்னால் இந்த வழக்கம் நலிந்தது. இப்போது இது மறு படியும் துளிர்த்திருக்கிறது. இப் படி முதல் முதலாக மணந்து கொண்டவர் எல்வின் பாதிரியாரும் அவருடைய கோண்டு மனைவியும். கல்கத்தாவில் இலா ஸேன் என்ப வரும் அவர் கணவர் ரீட் என்பவரும் இவ்விதம் மணந்துகொண்ட தம் பதிகளே.

என் சொந்த விஷயம் ஒரு புறம் இருக்கட்டும். இந்த மாதிரி கலி யாணங்கள் நன்மை தருமா? என் சொந்த அநுபவத்தையும் வேறு சிலர் அநுபவத்தையும் பார்த் தால், இவை நன்மை தரும் என்றே சொல்வேன். காதல் மணமோ, கட்டாய மணமோ இரண்டு வகை களிலுமே உலகெங்கும் சில மணங்கள் நன்மை தருகின் றன; சில மணங்கள் நன்மை தருவதில்லை. நன்மையும் தீமையும் அவரவரைப் பொறுத்த விஷயம். கலப்பு மணங்களையும் சுயஜாதி மணங்களையும் எடுத்துக் கொண் டால், கலப்பு மணங்களால் விளையும் தீமையின் விகிதா சாரம் மிகவும் குறைவென்றே சொல்ல வேண்டும். ஏனென்றால், கலப்பு மணம் செய்துகொள்ளுகிற ஆணோ பெண்ணோ தன் சமூக ஆதரவை யெல்லாம் துறந்து, சகல அபாயங்களுக்கும் துணிந்து, எல்லார் எதிர்ப்பையும் மீறி மணம் புரிந்து கொள்வதால், அவன் அல்லது அவளுடைய காதலும் நம்பிக்கையும் பலமாயிருப்பது நிச் சயம்.

அதிருக்கட்டும்; இந்த மணங்களை ஆதரிக்கலாமா? இது கொஞ்சம் சிக் கல் நிறைந்த கேள்விதான். இவற்றை நாம் ஆதரிக்காமலிருக்க லாம். ஆனால் உலக நாடுகள் வரவர ஒன்றுடன் ஒன்று நெருங்கிய சம்பந் தம் பெற்று வருகின்றன; அதன் பல னாகக் கலப்பு மணங்கள் தாமாக அதிகரித்துக் கொண்டேதான் போகும். காலம் செல்லச் செல்ல அவை அசாதாரணமாய்த் தோன்றா மல் சகஜமாகிவிடும். உலக நாடுகள் ஒன்றை ஒன்று நன்றாய்ப் புரிந்து கொண்டு அவநம்பிக்கையும் போராட்டமும் தீர்ந்து ஒற்றுமைப் படவும் அவை உதவியாயிருக்கும்.

என் வாழ்க்கையில் நிகழ்ந்த மிக வும் உருக்கமான ஒரு காட்சி எனக்கு ஞாபகம் இருக்கிறது. என் தாயும் என் கணவரின் தாயும் இந்திய மண்ணிலே முதல் முத லிலே சந்தித்தார்கள். ஒருவருக்கு மற்றவர் பாஷை தெரியாது. துபாஷ் வைத்துக்கொண்டே இரு வரும் பேசவேண்டியதாயிற்று. என்றாலும், இருவரும் நெருங்கிய நட்புக்கொண்டார்கள். ஐந்து மாதங்கள் அவர்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள். கடைசியில் பிரியும் போது, இங்கிலீஷ் தாய், "என் பெண்ணை நன்றாய் வைத்துக்கொள் ளும்படி அவளிடம் சொல்லுங்கள்" என்று கூறிக் கண்ணீர் சொரிந்து அழுதுவிட்டாள். இந்தியத் தாயும், "என் சொந்த மகளைப் போலவே அவளும் எனக்கு அருமைக் குழந்தைதான்" என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்து அழுதுவிட் டாள்.

மற்றோர் அபூர்வ அநுபவமும் என் சொந்தத்தில் நிகழ்ந்தது. பதி

ஆறு வருஷங்கள் கழித்து நான் மீண்டும் இங்கிலாந்துக்குச் சென்றேன். புதிதாய்ப் பிறந்த ஒரு வயதுக் குழந்தை என் கையிலே இருந்தது. நான் நேரே போய்ச் சேர்ந்ததும், உறவினர்களின் பழைய தப்பபிப்பிராயங்களெல்லாம் மறைந்தோடி விட்டன. முன்னே என் மணத்தை எதிர்த்த அதே அம்மான்களும் அத்தைகளும் இந்தத் தளர் நடைக் குழந்தையின் வசீகரத்துக்கு முன்னே வலியிழந்து போனார்கள். ஒரு கிழ அத்தை என்னைச் சந்தித்தபோது, "இந்தியாவைப்பற்றி நான் என்ன முட்டாள்தனமான அபிப்பிராயங்களை வைத்துக் கொண்டிருந்தேன்! உன்னைப் பார்த்ததும், அவை யெல்லாம் மாறிவிட்டன" என்று சொன்னாள். ஊர் முழுவதுமே எனக்கும் என் குழந்தைக்கும் கோலாகலமாய் வரவேற்பளித்தது.

க்விஸ் விடை

[9-ஆம் பக்கத்தில் உள்ள கேள்விகளுக்கு விடை]

விஞ்ஞானம்:

(1) மதாம் க்யூரி, (2) ஸர் ரொனல்ட் ராஸ், (3) ஒளிக் கிரணங்களின் இயல்புபற்றி.

சங்கீதம்:

1. (அ) சுப்பராமையர் (ஆ) மாரிமுத்தா பிள்ளை (இ) நீலகண்ட சிவன்.

2. (அ) பூச்சி ஸ்ரீநிவாஸ ஐயங்கார், (ஆ) மகாராஜபுரம் விசுவநாதையர், (இ) சரப சாஸ்திரிகள்.

3. இருக்கிறார் — த்வாரம் வேங்கடசாமி நாயுடு.

கவர்னர்கள்:

1. ஆஸப் அலி, 2. சந்துலால் த்ரிவேதி, 3. மங்கள் தாஸ் பக்வாஸா, 4. ராஜா ஸர் மகராஜ் ஸிங்.

பொது:

(1) எச். எம். ஐ. எஸ். டெல்லி; பழைய பெயர்—கிராப்ஸ்பி.

(2) ஐம்பது.

(3) ஜலந்தர், பாட்னா, கட்டாக், ஷில்லாங், கௌஹாட்டி, நாகபுரி, விஜயவாடா.

எப்படி?

வேறெப்படி! மொத்தம் இருந்தவர்கள் நாலேபேர்தாம். மூன்று ஆண்கள், ஒரு பெண்.— சோமுவின் பெண், பாலுவின் மனைவி, வாசுவின் மருமகள், எல்லாம் அவளே.

குழந்தை பயந்தால், கேலி செய்யாதீர்கள். அவன் பயம் தீர, இந்தத் தாயைப் போல் உதவுங்கள்.

குழந்தையின் பயம்

ரேபா ஓ'நீல்

சிறுவன் பிறந்ததிலிருந்து ஒரு கவலையும் இல்லை. நன்றாய் வளர்ந்து வந்தான். அவனுடைய பிறந்த நாள் அன்றுதான் அவனுக்குப் பயம் என்ற உணர்ச்சி உண்டாயிற்று.

அவனை வளர்ப்பதில் எங்களுக்குக் கொஞ்சமும் சிரமம் தெரியவில்லை. கீழே விழுந்து மோதிக் கொள்வது, காயம் பட்டுக்கொள்வது என்ற பேச்சே அவனிடம் கிடையாது. எவ்வளவு மாதங்கள் வரைக்கும் தாய்ப் பால் சாப்பிட வேண்டுமோ அவ்வளவு மாதங்கள் வரைக்கும் சாப்பிட்டான். அப்புறம் தானாகவே நிறுத்திவிட்டான். ஏற்ற பருவத்தில், கெட்டி ஆகாரம், நல்ல தூக்கம், விளையாட்டு எல்லாம் கிரமப்படி இருந்தன. அவனுடைய பதினைந்தாவது மாதத்தில் அவனுக்கு ஒரு தங்கை பிறந்தாள். சிறுவன் அவளிடம் உயிராயிருந்தான். பதினெட்டாவது மாதத்தில் பேசத் தொடங்கினான். இரண்டே மாதத்தில் அவனுக்கு எல்லா வார்த்தைகளும் வந்துவிட்டன. ஓயாமல் பேசத்தொடங்கிவிட்டான். இரண்டு வயது முடிவதற்குள் அவனுக்கு வாழ்க்கை எவ்வளவோ உற்சாகமான விஷயங்கள் நிரம்பியதாய்த் தோன்றியது. அவனுடைய இரண்டாவது பிறந்த நாள் அன்றுதான் அவனுக்கு முதல் முதல் கஷ்டம் ஏற்பட்டது. அன்றுதான் பயம் என்பதை நேருக்கு நேர் கண்டான்.

அந்தச் சிறிய மரத்துக்கு மேலே வானம் பூமியைத் தொடும் இடத்தில் ஓர் ஏரோப்ளேன் கிர் என்று சத்தமிட்டுக்கொண்டிருந்தது. அந்தச் சத்தத்தில் மரத்தின் இலைகள் எல்லாம் சலசல என்று ஆடி அசைந்தன. வானத்தை அது துளைத்ததுடன் அந்தச் சின்னஞ் சிறு குழந்தையின் வாழ்க்கையிலும் அது குத்தித் துளை இட்டுவிட்டது. நான் வீட்டுக்குள் இருந்தேன். ஏரோப்ளேன் சத்தத்தைக் கேட்டதும் வெளியே வந்து பார்த்தேன். பயத்தில் தரையோடு தரையாக அசையாமல் படுத்துக்கிடக்கும் சிறுவனைக் கண்டேன். பயம் என்றால் சாமான்ய பயமா? அவன் புத்தியே சிதறிவிடும் போலிருந்தது. அதைக் கண்டு எங்கள் மனம் என்ன பாடு பட்டது! விமான நிலையத்துக்கு மூன்று மைல் தூரத்தில் நாங்கள் இருந்தோம். கொஞ்ச காலத்துக்கு அந்த இடத்தை விட்டு வேறு இடம் சென்றுவிடலாம் என்றாலும், சிறுவனுக்காகவே அங்கே தங்கி அவன் பயத்தை ஒழிக்கவேண்டும் என்று எங்களுக்குப் பட்டது. அப்படியே அதை ஒழிப்பதில் நாங்கள் வெற்றி

காப்பிரைட்: பேரண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: செப்டம்பர் '48), சிக்காகோ 39, யு. எஸ். ஏ.

யும் அடைந்தோம். ஒவ்வொரு தரம் ஏரோப்ளேன் பறக்கும் பொழுதும் நாங்கள் அந்த முயற்சியில் பெரும் பாடுபட்டோம்.

சிறுவனுக்கு ஏற்கனவே ஏரோப்ளேன்கள் என்றால் மிகவும் பிடிக்கும். அவன் தினமும் எவ்வளவோ ஏரோப்ளேன்களைப் பார்த்திருக்கிறான். அவை நேரே எங்கள் வீட்டுக் கூரைக்கு மேலேதான் எப்போதும் பறப்பது வழக்கம். ஆனால், தினமும் பார்த்துத் தனக்குப் பழக்கமாயிருந்த அதே ஏரோப்ளேன் தரைக்குச் சமீபத்தில் இன்று திடீரென்று மிகவும் பயங்கரமாக இரைச்சலிடத் தொடங்கியது. 'ஐயோ! இந்த ஏரோப்ளேன் இவ்வளவு பயங்கரமானதா? இதை மிகவும் நல்லது என்று நினைத்திருந்தேனே' என்று சிறுவன் எண்ணிவிட்டான். அன்றுடன் அவனுடைய உற்சாகம், பசி எல்லாம் பறந்தோடிவிட்டன. வெளியே புல் தரையில் புஷ்பச் செடிகளுக்கிடையே இஷ்டப்படி விளையாடுவது, காய்கறிச் செடிகளின் நடுவில் புகுந்து காய்களைப் பறிப்பது, நாய்க்குட்டியுடன் திரிவது போன்ற விளையாட்டெல்லாம் நின்றுவிட்டன. அவன் சொக்காயில் மூத்திரமே பெய்ய மாட்டான் என்ற பெருமையும் போய்விட்டது. இரண்டு வயதான குழந்தை இப்போது தனியே வெளியில் ஓர் அடி எடுத்து வைக்கக்கூட மறுத்ததோடு வீட்டுக்குள் ஒரு நிமிஷம் தனியே இருப்பதற்குங் கூடப் பலத்த ஆக்ஷேபம் செய்யத் தொடங்கிவிட்டான். எப்பொழுது பார்த்தாலும், "என் கையைப் பிடித்துக்கொள், அம்மா! என் கையைப் பிடித்துக்கொள்ளேன்" என்ற கூப்பாடு. அவனுடைய 'ட்ரைஸிகிள்' சக்கரம், ஊஞ்சல் எல்லாம் மூன்று வாரமாகக் கவனிப்பவர் இல்லாமல் கிடந்தன.

"நாள் செல்லச் செல்லப் பயம் எல்லாம் தானாகவே போய்விடும்" என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் அவனைக் கவனிக்கும் பொழுது, அது அவ்வளவு சுலபமாய்த் தள்ளக்கூடிய விஷயம் அல்ல என்று எனக்குத் தோன்றியது. அவனுக்கு முதல் முதல் பயம் எப்படி உண்டாயிற்று என்று யோசித்துப் பார்த்தேன்.

அன்று அவன் பயந்து நடுங்கிய பொழுது, எனக்கு இருந்த கவலையில்கூட, ஓடிப்போய் உடனே அவனைத் தூக்கிக்கொண்டு வந்துவிடக் கூடாதென்று நினைத்தது எனக்கு ஞாபகம் வந்தது. நான் அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டதும், "ஓ" என்று அவன் அலறத் தொடங்கினான். ஏரோப்ளேன் கண்ணுக்கு மறைந்த பிறகுதான் நாங்கள் வீட்டுக்குள் சென்றோம். அப்புறம் ஒரு வாரம் வரையிலும் என் கையை இறுக்கிப் பிடித்துக்கொள்ளாமல், அவன் வாயிற்பக்கம் வரமாட்டான். துணை இல்லாமல் அவனைத் தனியே வெளியில் போகும்படி செய்ய நாங்கள் ஆனமட்டும் பாடுபட்டோம். "நீ பெரியவனாயிற்றே! ஏரோப்ளேன் ஒன்றும் செய்யாது" என்று என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை. என்னோடு வெளியே வரும்பொழுது கூட, ஏரோப்ளேன் சத்தம் ஏதாவது கேட்கிறதா என்ற யோசனையுடன் அவன் வானத்தை அண்ணாந்து பார்ப்பான்.

காலையில் எழுந்திருக்கும் பொழுதே, "இன்று ஏரோப்ளேன் வராதே; இல்லையா, அம்மா?" என்று கேட்டுக்கொண்டே எழுந்திருப்பான். "வராது" என்று

சொல்லிவிடுவது எளிதுதான். என்றாலும் அது தவறு என்று தோன்றிற்று. அவன் இரண்டு வயதுக் குழந்தையே என்றாலும், "ஏரோப்ளேன் வரத்தான் வரும். ஆனால் அதைக் கண்டு பயப்படக் கூடாது'' - இப்படிச் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. நான், "ஏரோப்ளேன் வராது'' என்று சொன்னால், பின்னால் ஏரோப்ளேன் சத்தத்தை அவன் கேட்கும்பொழுது, நான் கூறியது தவறு என்று ஆகிவிடும் அல்லவா? ஆகவே, நான் மிகவும் சாதாரணமாக, "ஓ! இன்று பத்து ஏரோப்ளேன் வந்தாலும் வரும்'' என்று சொல்லி வைப்பேன். உடனே சிறுவன் அவற்றை ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணுவதில் உற்சாகம் கொள்ளுவான். அதனால் அவன் பயமும் சற்றுக் குறையும்.

தூரத்தில் கிர் என்று சத்தம் கேட்டதோ இல்லையோ, உடனே ஓடிப்போய்ப் படுக்கையில் தலையை நட்டுக்கொண்டு கிடப்பான். நான் வீட்டு வேலையை எல்லாம் விட்டு விட்டு எப்பொழுது ஏரோப்ளேன் சத்தம் கேட்கப்போகிறது என்று கவனித்துக் கொண்டிருப்பேன். சத்தம் கேட்டதும் அவனிடம் ஓடிப்போய், "அது ஏரோப்ளேன் தானா? போய்ப் பார்க்கலாம், வா'' என்று சொல்லி அவனை எடுத்துக் கொண்டு ஜன்னலண்டை செல்வேன். எனக்கு எல்லா ஏரோப்ளேன்களும் ஒரே மாதிரியாகத் தான் தோன்றும். ஆனால் சிறுவனுக்குக் காட்டத் தொடங்கியவுடன், எனக்கு ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரிந்தது. "அதோ பார், அதற்கு இரண்டு வால்கள் இருக்கின்றன போல் தோன்றுகிறதே! இந்த ஏரோப்ளேன் மிகவும் சின்னது இல்லையா? பார்த்துச் சொல்'' என்றெல்லாம் நான் கூறுவேன். உடனே அவன் கவனம் எந்த ஏரோப்ளேன் சிறியது, எந்த ஏரோப்ளேன் பெரியது என்று கண்டுபிடிப்பதில் செல்லும்.

இப்பொழுதெல்லாம் நல்ல காற்றுக்காகச் சிறிது நேரம் வெளியே போய்விட்டு வருவோம்; அவ்வளவு தான். நாங்கள் அவனை இஷ்டப்படி வெளியே ஓடி ஆடச் செய்வதை விட்டுச் சிறு குழந்தையைப்போல் சிறிது நேரம் வெளியே வைத்துக் கொண்டிருப்பது, வண்டியில் வைத்துத் தள்ளுவது, இவற்றோடு நிறுத்திக்கொள்ளும்படி ஆயிற்று. எதற்காவது என்னுடன் வெளியில் வரும்பொழுது ஏரோப்ளேன் பறப்பதைக் கண்டுவிட்டான் என்றால், என் ஆடையை இரண்டு கைகளாலும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு விடுவான். ஆகவே, 'அவன் வெளியே போகமாட்டேன் என்றால் சரி' என்று நினைத்து, நானும் அவனை அவன் இஷ்டப்படி விட்டு விட்டேன். அவனுக்கு வாசலில் போகவேண்டும் என்று தோன்றும்பொழுது அவன் சொல்லாமலே நான் அவன் கையைப் பிடித்துக்கொள்வேன். வாசலில் சென்றவுடன் அவன் கையை மெல்ல விட்டுவிட்டு, தோள் மேல் அல்லது தலை மேல் கையை மெதுவாய் வைத்துக்கொண்டிருப்பேன். பிறகு அந்தக் கையினாலேயே அவனுக்கு எதையாவது காட்டிவிட்டு மீண்டும் அவன் கையை மெல்லப் பிடித்துக் கொள்வேன்.

வெளியே இருக்கும்போது நான் அவனைத் தனியே விட்டுப் பரீக்ஷை பார்க்காததால், என்னுடன் போய்

வருவதற்கு அவனுக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. நாள் முழுதும் நானும் அவனும் ஏதேனும் காரியமாய் வாசற்பக்கம் போய் வந்த வண்ணமாக இருப்போம். ஏரோப்ளேன் சத்தத்தைக் கேட்டு அவன் பயப்படுவதற்கு முன்பே, நாய், பூனை, சீமைத் தக்காளிச்செடி இவற்றில் ஏதாவது ஒன்றில் அவன் கவனம் முற்றும் ஈடுபடச் செய்துவிடுவேன். ஒவ்வொரு தடவையும் நானே முந்திக் கொண்டு, "அதோ பார், ஏரோப்ளேன்! - அது கிடக்கிறது. இந்தத் தக்காளிப் பழத்தைப் பார்த்தாயா, எவ்வளவு சிவப்பா யிருக்கிறது!" என்று சொல்வேன்.

மீண்டும் மெதுவாய் வாசற்பக்கம் செல்வதில் அவனுக்கு விருப்பம் உண்டாயிற்று என்றாலும், தனியாய் மாத்திரம் போகமாட்டான். சின்னக் குழந்தையையும் கொண்டுபோக வேண்டியிருந்ததால், இரண்டு குழந்தைகளையும் தள்ளு வண்டியில் நெருக்கி உட்காரவைத்து, வெளியில் அழைத்துச் சென்றேன். அது சிறுவனுக்கு நல்லதாயிற்று. என் கையை விட்டு விட்டு, அவன் வண்டியைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான். அந்த மட்டும் பயத்தை வெல்லுவதில் நாங்கள் ஒருபடி மேலே வந்துவிட்டதாக எனக்குத் தோன்றியது. அதற்குப் பிறகு அவனிடம் நடை வண்டியைக் கொடுத்து, "இதைத் தள்ளிக் கொண்டு போ, பார்க்கலாம்" என்று சொன்னேன். தட்டித் தடுமாறிக் கொண்டு ஏதோ ஒரு விதமாய் அதைத் தள்ளிக்கொண்டு சென்றான். இழந்த சுதந்தரத்தை இந்த விதமாக இரண்டே வாரத்தில் மீண்டும் ஒருவாறு பெற்றுவிட்டான் என்று சொல்லலாம். அந்த நடைவண்டியை விட்டுக்கொண்டு சென்றபொழுது அவன் நடந்தது மிக அரிய காட்சியாக எங்களுக்குத் தோன்றிற்று. அவன் தட்டுத் தடுமாறிக் கொண்டு செல்லும்பொழுது அவனைத் தனியே விடாமல் நானும் கூடவே சென்றேன். முதலில் தனியாய் முன்வாசல் பக்கம் வரைக்கும் சென்று உட்கார அவனுக்குத் தைரியம் வந்தது. அந்தச் சமயம் பார்த்து ஏரோப்ளேன் சத்தம் கேட்டுவிடும். உடனே அவன் ஒரே பயத்துடன் வண்டிப் பிடியைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்வான். இருந்தாலும் அந்த இடத்தை விட்டு மட்டும் ஓடிப் போக மாட்டான். இப்படி நாளுக்கு நாள் அவன் பயம் குறைந்து கொண்டே வந்தது. ஒரு நாள் காலை அவனை 'ட்ரைஸிகிளி'டம் அழைத்துச் சென்று அதை விட்டுப் பார்க்கச் சொன்னேன். அது இன்னும் ஒருபடி மேல்பயிற்சியாகும். ஸைகிளில் தனியாக இருப்பதுடன், தன்னைத்தானே கவனித்துக் கொள்ளவும் வேண்டும் அல்லவா? என்னைப் பிடித்துக்கொள்ளாமல் தானாகவே அதில் ஏறி உட்கார்ந்துகொண்டு உள்ளுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தான். ஆனால் அப்பொழுதெல்லாம் அவன் காது மட்டும் ஏரோப்ளேன் சத்தம் கேட்கிறதா என்று கவனிப்பதிலேயே ஈடுபட்டிருந்தது. வீட்டில் ஏரோப்ளேனைப்பற்றிப் பேசிப் பேசி அவனுக்குப் பழக்கமாயிற்று. "அதுவும் 'டிரக்' வண்டி மாதிரிதான்; சாமான்களை ஏற்றிக்கொண்டு போகிறது. இதோ இந்த ஏரோப்ளேனும் அப்படித்தான். பாட்டிக்கு எழுதினோமே அந்தக் கடிதத்தைக் கொண்டு

போகிறது இந்த ஏரோப்ளேன் என்று நினைக்கிறேன். இப்பொழுது எவ்வளவு ஏரோப்ளேன் போயிற்று எண்ணிப் பார்த்தாயோ? மூன்று, ஒன்பதா? எட்டா, ஆறு? ஏரோப்ளேன் ஓட்டுகிறானே அந்த ஆளை நீ பார்த்தாயோ?'' என்றெல்லாம் கேட்போம்.

இரண்டு பொம்மை ஏரோப்ளேன்கள் வாங்கி அவை எப்படிப் பறக்கின்றன என்பதை அவனுக்கு ஒவ்வோர் அம்சமாக விளக்கிக் காட்டினோம். ஏரோப்ளேன் என்றால் பிரமாதமில்லை என்று அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தது. அவன் தைரியமாய் 'ட்ரைஸிகிளி'ல் உட்கார்ந்திருக்கும் சமயம் பார்த்து, அவன் சிறு தங்கையைக் கொண்டு போய் அவனுக்கு எதிரில் உட்காரவைத்து அவனுக்குத் தரையில் குட்டிக்கரணம் போடக் கற்றுக் கொடுத்தேன். சிறுவனுக்கு மெல்ல மெல்ல அது பழக்கமாயிற்று. ஒரு நாள் ஏரோப்ளேன் பறக்காத சமயம் பார்த்து அவனைத் தோட்டத்துக்கு அழைத்துப்போய், "எங்கே! தங்கச்சி பாப்பா பார்க்கட்டும்! குட்டிக்கரணம் போடு'' என்றேன். அவன் போட்டுக் காண்பித்ததும், ''ஏதோ, அந்த மரத்தண்டை ஓடிப்போய்ப் போடு, பார்க்கலாம்'' என்றெல்லாம் தூண்டினேன்.

இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் கிலி பிடித்துப்போய் எந்தப் புல்தரையில் கவிழ்ந்து படுத்துக் கிடந்தானோ அதே புல் தரையில் சிறுவன் இப்பொழுது மீண்டும் பழைய உற்சாகத்துடன் குட்டிக்கரணம் போட்டுக்கொண்டு உருண்டு புரண்டு விளையாடலானான். எங்கே மறுபடியும் அவன் கிலி திரும்பி வந்துவிடுமோ என்று நான் ஜாக்கிரதையாக நடந்துகொண்டேன்.

ஏரோப்ளேனைப்பற்றிப் பாடம் கற்றுக் கொடுக்கும் ஒரு ஸ்கூலுக்கு மறுநாள் மாலை அவன் தந்தை அவனை அழைத்துச் சென்றார். அங்கே விதம்விதமான வர்ணமுள்ள அழகிய சின்னஞ்சிறு ஏரோப்ளேன்கள் வானத்தில், மேலுங் கீழுமாய்ப் பறப்பதைப் பார்க்க அவனுக்கு இன்னும் தைரியமும் உற்சாகமும் பிறந்தன.

இப்படி ஒரு மாதகாலம் போராடின பிறகு சிறுவன் வெற்றி அடைந்தான். அவனுக்கு ஏற்பட்ட கிலி சாதாரணமானதல்ல. பயம் உள்ளூறப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கும்போது வெளிக்கு ஒன்றுமில்லை என்று அவன் ஒருபோதும் கூறவில்லை.

இதோடு இது நின்றுவிடாது. இதே மாதிரி இன்னும் ஏதாவது பயம் ஏற்படும் என்று எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு பெரிய கிலி ஒருவாறு நீங்கிய பிறகு இனி வரக்கூடிய கிலிகளைப் பற்றி எனக்கு அவ்வளவு கவலை இல்லை. இரண்டே வயதான ஒரு சிறு குழந்தையின் உள்ளத்தில் வேரூன்றியிருந்த நடுக்கத்தை அடியோடு போக்கி விட்டதை நினைக்க எங்களுக்குப் பெருமையாகவே இருக்கிறது.

நம்பிக்கையும் ஆராய்ச்சியும்

ஒரு மனிதனின் உடம்பில் எத்தனை எலும்புகள் இருக்கின்றன என்று நீங்கள் சொன்னால், அதை அவன் நம்பி விடுவான். ஆனால், 'பெயிண்ட் உலரவில்லை. இதைத் தொடாதீர்கள்!' என்று போட்டிருக்கும் போட்டிஸை அவன் நம்பமாட்டான்; ஆராய்ச்சி புரியத் தொடங்கிவிடுவான்!

—'காமெட்'

குதிரைப் பந்தய மன்னர்

★

கிண்டியில் இப்போதுதான் ரேஸ் ஆரம்பித்திருக்கிறது. ஆனால், சீமை ரேஸ் நவம்பர் 20- ஆம் தேதி முடிந்தது. அந்த ரேஸில் முதல் ஸ்தானம் பெற்ற குதிரைச் சொந்தக்காரர் ஆகா கான். இது அவர் 11-ஆம் தடவை பெற்ற கௌரவம்; மொத்தம் 46,393 பவுன் அவர் அதில் பரிசு பெற்றார். 1922-முதல் இது வரைக்கும் 594-ரேஸ்களில் அவர் குதிரைகள் வெற்றி பெற்றன. அவர் 7,27,667 பவுன் பரிசு பெற்றிருக்கிறார். அவருக்கும் எம். வால்டெர்ரா என்பவருக்கும் சொந்தமான 'மை லவ்' என்ற குதிரை இந்த வருஷம் டெர்பி ரேஸில் வெற்றி பெற்றது.

குதிரைப் பந்தய நிபுணர்களில் இன்று உலகத்திலேயே அக்கிரஸ்தானம் வகிப்பவர் ஆகா கான். இருபத்தேழு வருஷமாக இவருக்கு வெற்றிமேல் வெற்றிதான். குதிரைப் பந்தயத்தில் இம்மாதிரியான வெற்றி பெறுகிறவர்கள் மிகவும் அபூர்வம். நம் நாட்டிலுள்ள மற்ற முதலாளிகள் தங்கள் மனம் போனபடி பங்கு மார்க்கெட்டிலும் சூதாட்டத்திலும் பணம் திரட்டிய சமயத்தில், இவர் ஒரு நல்ல விளையாட்டில் பணத்தைப் போட்டு லாபம் சம்பாதித்தார்.

இவர் தம்முடைய சொத்து முழுதையும், தம் மகன் அலய் கானின் சொத்தில் ஒரு பகுதியையும் இங்கிலாந்தில் நடக்கும் குதிரைப் பந்தயத்திலே போட்டார். போட்ட வருஷத்திலேயே, உலகத்தில் யாருக்கும் கிடைக்காத வெற்றி இவருக்குக் கிடைத்தது. 'டைபன்', 'பஹராம்' என்ற இரு குதிரைகள் 2000-கினிப் பரிசை வாங்கிக் கொடுத்தன. 'உதயபுர்', 'மாஸ்கா' என்ற குதிரைகள் ஒக்ஸ் பரிசையும், 'பிர்தௌஸி', 'பஹராம்' முதலிய குதிரைகள் ஸெண்ட் லீஜர் பரிசையும் பெற்றன.

இங்கிலாந்திலே அப்போது குதிரைப் பந்தயப் போட்டி ஓங்கியிருந்த காலம். ஆகா கான் இதில் முழுப் பங்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தார். அசுவ லட்சணங்

மூலம் : நவயுக் (ஹிந்தி: 14-11-'48), டில்லி.

களைக் கற்றுக் கொள்வதற்காக, இங்கிலாந்தில் இருந்த ஜார்ஜ் லாம்ப்டன் என்பவருக்கு இவர் கடிதம் எழுதினர். தமக்கு நிறைய வேலை இருப்பதாகவும், குதிரைகளை மட்டும் வாங்கிக் கொடுப்பதாகவும் அவர் பதில் எழுதினர். 'காஸ்', 'டெரீ வீனு' என்ற இரண்டு குதிரைக் குட்டிகளையும், பந்தயத்துக்கு வேண்டிய சில சாமான்களையும் அவர் வாங்கிக் கொடுத்தார். இதில் 24,520 கினி செலவழிந்தது. இவ்வாறு 1921-இல் லாம்ப்டன் துரை போட்ட பிள்ளையார் சுழி ஆகா கானுக்குப் பிரமாதமான வெற்றியைத் தந்தது. 'மும்தாஜ்மகல்' என்ற குதிரையும் லாம்ப்டன் வாங்கிக் கொடுத்ததுதான். அதன் கால் பூமியிலேயே நிற்காதாம். அது கால் வைத்த வேளையிலிருந்து ஆகா கானின் செல்வம் ஏராளமாக வளர்ந்தது. 1923-இல் இந்தக் குதிரை 6-பர்லாங் தூரத்தை 57.8 ஸெகண்டில் கடந்து புதிய ரெகார்டை ஸ்தாபித்தது. 1835-இல் 'பஹராம்' என்ற குதிரை, ஒரு பெரிய பந்தயத்தில் ஆகா கானுக்கு 31,328 பவுன் சம்பாதித்துக் கொடுத்தது. வாழ்க்கையிலே ஒருவருக்கு 'டெர்பி பரிசு' கிடைத்துவிட்டால், அது யாருக்குமே இல்லாத அதிருஷ்டம். ஆகா கானின் 'மகமூத்' என்ற குதிரை இந்தப் பரிசைப் பெற்று, குதிரைப் பந்தய சரித்திரத்தில் ஒரு தனி அத்தியாயத்தையே உண்டாக்கிவிட்டது.

இங்கிலாந்திலுள்ள குதிரை முதலாளிகள் சங்கத்துக்குத் தலைவராகும் பெருமை 1924-ஆம் வருஷத்திலேயே ஆகா கானுக்குக் கிடைத்துவிட்டது. இவர் ஐந்து தடவை இப்படித் தலைவராக இருந்திருக்கிறார். இந்த வருஷங்கூட இவருக்குத் தலைமைப் பதவி கிடைக்கப் போகிறது. கொஞ்ச நாளைக்கு முன்புதான் ஒரு பந்தயத்தில் இவருக்கு 45,520 பவுன் பரிசு கிடைத்தது.

அசுவ லட்சணங்கள் இவருக்கு நன்ருகத் தெரியும்; குதிரைகளுக்குச் சரியான தீனி போட்டுப் பரிபாலிக்கவும் தெரியும். தம் குதிரைகளை வளர்ப்பதற்காக இவர் இரண்டு பெரிய பண்ணைகளை நிறுவியிருக்கிறார். அயர்லாந்திலுள்ள 'சிகுன்' என்ற பண்ணையின் விஸ்தீர்ணம் 100 ஏகரா. 'மார்லி-லா-வில்லி' என்ற மற்றெரு பண்ணை பாரிஸுக்கு அருகில் இருக்கிறது. குதிரைகளை நன்ருக வளர்த்துச் சரியாக வேலை வாங்குவதுதான் இவருடைய வெற்றியின் ரகசியம்.

மேன்மை வாய்ந்த ஆகா சுல்தான் ஸர் முகம்மத் ஷா - அதாவது ஆகா கான் - இஸ்மாயிலி முஸல்மான்களுக்கு மதத் தலைவராகவும் விளங்குகிருர்.

71 வயதாகியும் இவர் அபரிமிதமான உற்சாகமுள்ளவர்; ஷோக்கான ஆசாமி; தடபுடலான ஆட்டக்காரர். ஐரோப்பா முழுவதிலும் இவர் பல பந்தயங்களில் ஜயித்திருக்கிருர். குதிரைப் பந்தயத்திலே இன்று இவர் உலக சக்கரவர்த்தியாக விளங்குகிருர்.

தோல்வியில்லாத மனிதர்

அநேக மனிதர்கள் எதிலும் தோல்வி அடைவதேயில்லை; ஏனென்ருல், அவர்கள் எதைச் செய்யவும் முயல்வதேயில்லை.

—நார்மன் மாக்இவான்.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள்பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கேள்வி: வேதாந்திக்கும் அரசியல்வாதிக்கும் வித்தியாசம் என்ன?

பதில்: அரசியல்வாதி குழப்பத்தை உண்டாக்குகிறான்: அதிலிருந்து வேதாந்தி அறிவு பெறுகிறான்.

* *

கே: போர்முனைக்கும் வீட்டுக்கும் என்ன வேற்றுமை?

ப: போர்முனையில் ஒரு தடவை சாகிறார்கள்; வீட்டில் தினம் தினம் செத்துப் போகிறோம்.

* *

கே: கணவனை இழந்தவளுக்கும் மனைவியை இழந்தவனுக்கும் என்ன வித்தியாசம்?

ப: கணவனை இழந்தவளுக்கு வாழ்க்கை குறுகுகிறது; மனைவியை இழந்தவனுக்குச் சற்று அதிகமாகிறது. கணவனை இழந்தவள் ஆபத்துக்குட்படுகிறாள்; மனைவியை இழந்தவனே ஆபத்தான பேர்வழியாக இருக்கிறான்.

* *

கே: கண் சிமிட்டுவது கெட்ட செயலா? கெட்ட கலையா?

ப: துணிவான செயலுக்குரிய ரகசியமான கலை.

கே: ஒரு மனிதனுடைய உள்ளத்தை நெருங்க வழி எது?

ப: அந்த உள்ளம் மூளையில் இருக்கிறதா, வயிற்றில் இருக்கிறதா என்பதைப் பொறுத்திருக்கிறது அது.

* *

கே: கடவுளின் வடிவம் எப்படி இருக்கும்?

ப: கடவுளும் சைத்தானும் ஒரே வடிவம் உள்ளவர்களே; நிறம் மாத்திரம் வேறு.

* *

கே: பெண்களிடத்தில் இருக்க வேண்டிய உயர்ந்த குணங்கள் எவை?

ப: மௌனம். மற்றவை தாமே வரும்.

* *

கே: சினிமா டிக்கட் வாங்க, 'க்யூ'வில் நிற்பதனால் படத்தில் கவர்ச்சி குறைந்து போகிறது, என், சரிதானே?

ப: சினிமாவுக்கு உள்ளேதான் ஒரே கலவரமாக இருக்கிறதே. வெளியிலாவது ஒழுங்கும் அமைதியும் இருக்கட்டுமே.

* *

கே: சில படங்களில் நாரதருக்குத் தாடி இருக்கிறது; சில

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: நவம்பர் '48), பம்பாய்.

படங்களில் இல்லே. அவர் என்ன, அடிக்கடி தாடியை வைத்துக் கொள்வதும், சிரைத்துவிடுவதும் வழக்கமோ?

ப: அவர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போய் வந்து கொண்டிருக்கிருரோ என்னவோ!

* *

கே: என்ன வேலே செய்கிறது என்ற விஷயத்தில் பிள்ளே தன் தகப்பஞரைக் கேட்டுத்தான் தீர வேண்டுமோ?

ப: கேட்க வேண்டிய அவசியமே இல்லே. ஆனல் தகப்பஞரிடம் யோசனே கேட்கலாம். அவருடைய நீண்ட அநுபவத்தைப்பிரயோசனப் படுத்திக் கொள்ளலாம். என்ன சங்கடம் நேருமென்பதைத் தகப்பஞர் அறிவிக்கக் கூடும்.

* *

கே: நம் அருமைக் காந்தியின் தலேயை நாணயங்களில் ஏன் போடவில்லே?

ப: சீக்கிரத்தில் போடுவார்கள். ஆனல் அதைக்கொண்டு நம் பை நிறைய நாணயங்கள் வருமென்று நினைக்க வழியில்லே.

* *

கே: உலகத்தில் நல்ல பெண்மணிகள் எவ்வளவு பேர் இருக்கிருர்கள்?

ப: நல்ல மனிதர்கள் எவ்வளவு பேர் இருக்கிருர்களோ அவ்வளவு நல்ல பெண்மணிகளும் இருக்கிருர்கள்.

* *

கே: தமக்குத் தெரியாதவர்களாக இருந்தாலும் கூட வழியிலே போகிற இளநங்கையர்களுக்கு அஞ்சலி செய்கிருர்களே, அந்தப் பேர்வழிகளேப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர்களே என்ன செய்வது?

ப: ஏன்? நீங்கள் காலில் செருப்புப் போடுவதில்லேயா?

* *

கே: மறதிக்கு உதாரணமாக வேடிக்கையான சம்பவம் ஒன்றைச் சொல்லுங்கள்.

ப: ஒரு பட முதலாளி ஒரு சமயம் தம் பனியனென்று நினைத்து ஒருத்தியின் ரவிக்கையைப் போட்டுக் கொண்டார். அவசரத்தில் ஏற்பட்ட உண்மை நிகழ்ச்சி இது. கதை அல்ல.

* *

கே: படித்த மனைவி, படிக்காத மனைவி இருவருக்குள் யார் நாளடைவில் தொந்தரவுக்குக் காரணமாக இருப்பாள்?

ப: படித்தவளாக இருந்தால் ஒருகால் ஏதாவது சொல்லிக் கொடுக்கலாம். படிக்காதவளாஞல் புருஷன் எல்லாவற்றையும் தானே தெரிந்துகொள்ள வேண்டும்.

* *

கே: நல்ல மனைவிக்கு ஒரு வார்த்தை என்கிருர்கள்; அது என்ன வார்த்தை?

ப: அதைத்தான், ஸ்வாமி, அநாதி காலமாக உலகம் தேடிக் கொண்டிருக்கிறது.

* *

கே: தென்னிந்தியப் பத்திரிகைக்காரர்களே நீங்கள் மதிக்கிறீர்களா?

ப: ஆம். அவர்களில் பலர் மிகவும் திறமையாகச் சமாசாரப் பத்திரிகைக்கு எழுதுகிருர்கள். உண்மையில் இந்தியாவிலுள்ள சமாசாரப் பத்திரிகைத் தொழில் தென்னிந்தியாவுக்கு எவ்வளவோ கடன்பட்டிருக்கிறது.

ஜலதோஷ ஆராய்ச்சி

'டி'

பல நாட்களாக வைத்திய சாஸ்திரிகள் அலட்சியம் செய்து வந்த வியாதி ஜலதோஷம். ஆனால், அது அவ்வளவு லேசான வியாதி அல்ல. இளங் குழந்தைகளுக்கும் சரி, வயது முதிர்ந்தவர்களுக்கும் சரி, ஜலதோஷம் ஆபத்தை விளைவிக்கக்கூடியது. தொழிற்சாலைகளில் ஜலதோஷத்தால் பெரிதும் வேலை தடைப்படுகிறது.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபின்பு, ஜலதோஷத்தை ஆராய்வதற்காகப் பல ஆராய்ச்சி நிலையங்கள் தோன்றியிருக்கின்றன. லண்டனில் உள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் இப்பொழுது ஜலதோஷ ஆராய்ச்சியில் முதல் இடம் வகிக்கிறது. ஐக்கியநாடுகள் பலவற்றிலும் அகில உலக ஆரோக்கிய சங்கத்தின் ஆதரவில் டோ. வி. எச். ஆண்ட்ரூஸ் என்பவரின் மேற்பார்வையில் இந்த ஆராய்ச்சி நடந்து வருகிறது. மூக்கையும் வாயையும் பற்றிய பல வியாதிகளை ஆராய்ந்துள்ள நிபுணர் ஆண்ட்ரூஸ். ஜலதோஷம், இன்புளுயன்ஸா இரண்டின் காரணங்களையும் முதல் முதல் நன்றாக ஆராய்ந்து கண்டவரும் ஆண்ட்ரூஸே. இப்பொழுது அவருடைய ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் கீழ் வேலை செய்பவர் உலகெங்கும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் எல்லைக்கு உட்பட்ட இடங்களில் கவனித்த விவரங்களைத் தலைமை ஆராய்ச்சி நிலையத்துக்கு எழுதி அனுப்புகிறார்கள்.

ஒருவனை இன்புளுயன்ஸா ஒன்று அல்லது இரண்டு வருஷத்துக்கு ஒரு முறைதான் பீடித்துத் துன்புறுத்தும். ஆனால், ஜலதோஷம் எந்தக் காலத்திலும் எவனையும் பீடித்துத் துன்புறுத்தும்.

இரண்டாவது உலக யுத்தகாலத்தில் ஹார்வார்ட் வைத்திய கலாசாலையைச் சேர்ந்தவர்களும் அமெரிக்கன் செஞ்சிலுவைச் சங்கத்தாரும் ஸாலிஸ்பரி என்னும் இடத்தில் ஒரு வைத்தியசாலை அமைத்தார்கள். யுத்தத்துக்குப் பிறகு அதைப் பிரிட்டிஷ் வைத்திய இலாகாவிடம் ஒப்படைத்துவிட்டார்கள். ஜலதோஷத்தை ஒழிக்க இங்கேதான் ஆண்ட்ரூஸ் படை திரட்டி வருகிறார். 'சிம்பன்ஸி' என்னும் பயங்கரக் குரங்கைத் தவிர மற்ற மிருகங்களை ஜலதோஷம் பீடிப்பதில்லை. ஆகையால், தமது ஆராய்ச்சிக்குத் தம்முடன் பிறந்த மனிதர்களையே சோதனைப் பிராணிகளாக ஆண்ட்ரூஸ் உபயோகித்து வருகிறார்.

★ ★ ★

'மூக்கு என்னவோ னொண னொண என்கிறது. தானே இரண்டு நாளில் சரியாகப் போய்விடும்' என்று சில சமயம் சொல்லுகிறோமே, அது அவ்வளவு லேசு அல்லவாம்.

★ ★ ★

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 14-11-'48), கள்ளிக்கோட்டை.

கடிதங்கள், கட்டுரைகள், ரேடியோ என்ற பல வழிகளில் வாலிபர்களை அவர் அழைத்தார். பிரமிக்கத் தக்கவாறு ஆயிரக் கணக்கான வாலிபர்கள் முன்வந்தார்கள். அவர்களில் பெரும் பாலோர் மாணவர்கள். ஆனால் அறுநூறு பேரை மட்டுமே டாக்டர் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

அவர்களை ஸாலிஸ்பரியில் ஒரு பாரக்ஸில் அறைக்கு இரண்டு பேராகப் பத்து நாட்கள் அவர் அடைத்து வைத்தார். மருந்து போட்டுச் சுத்தம் செய்த ஆடை உடுத்த டாக்டர்களையும் நர்சுகளையும் தவிர மற்றவர் இந்த நாட்களில் அவர்களை அணுகக் கூடாது. அந்த அறைகளில் ரேடியோ, டெலிபோன், புஸ்தகங்கள், விளையாட்டு வசதிகள் முதலியவை உண்டு. சாதாரணமான சில தின்பண்டங்களைச் செய்துகொள்ளக் கூடிய சௌகரியமும் அந்த அறைகளில் இருக்கும். தெர்மாஸ் பிளாஸ்கில் வைத்த சூடான ஆகாரங்கள் ஒரு கம்பிமூலம் அந்த அறைக்குள் ஒரு நாளைக்கு மூன்று தடவை வரும். தங்களுக்குள் ஒன்றிரண்டு பேர் சேர்ந்து வாலிபர்கள் உலாவச் செல்லலாம். ஆனால் அங்கே மற்ற மனிதர்களோடு கூடிப் பழகுவதோ, வாகனங்களில் ஏறுவதோ, வேறு கட்டிடங்களில் வசிப்பதோ கூடாது. ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் வீதம் அவர்கள் கைச்செலவுக்குப் பணம் கிடைக்கும்.

அவர்கள் அங்கே செய்துவரும் இந்தச் சுகவாசத்தின் பலன் நான்காவது நாள்தான் அவர்களுக்குத் தெரியும். அன்று அவர்களுடைய மூக்கில் ஒருவகைத் திராவகத்தை ஊற்றிவிடுவார்கள். சிலர் மூக்கில் வெறும் உப்பு நீரை ஊற்றுவார்கள்; மற்றும் சிலர் மூக்கில் ஜலதோஷ நீரை ஊற்றுவார்கள். அந்த ஜலதோஷ நீரில் வியாதி அணுக்கள் நிறைந்திருக்கின்றன. அதன் பலன் வெளிப்பட்ட பிறகுதான் எவர்களுக்கு எந்த விதமான திராவகம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை வைத்தியர்கள்கூட அறிய முடியும். இப்படிப் பரீட்சித்ததிலிருந்து சில விஷயங்கள் புலப்பட்டன. குளிர்ச்சிதான் ஜலதோஷத்துக்குக் காரணம் என்ற நம்பிக்கை தவறு என்று ருசுவாயிற்று. ஆனால் சீதோஷ்ண ஸ்திதி திடீரென்று மாறினால், முக்கியமாய் ஜலதோஷம் வருகிறது என்று தெரிந்தது.

ஜலதோஷத்தில் பல ரகம் உண்டு. தன்மையிலும் கடுமையிலும் ருஷ்யன் ஜலதோஷம், அமெரிக்கன் ஜலதோஷம், இந்தியன் ஜலதோஷம் ஒவ்வொன்றும் வெவ்வேறு தரம்.

ஜலதோஷத்தைக் குணப்படுத்த ஊசிபோடவேண்டும் என்று டோ. ஆண்ட்ரூஸ் கருதுகிறார். அதற்கேற்ற மருந்தைக் கண்டுபிடிக்க, ஸாலிஸ்பரியிலே ஒரு பெரிய வைத்தியர் கூட்டம் முயன்று வருகிறது. உங்களுக்கு ஜலதோஷமா? கொஞ்சம் பொறுத்திருங்கள்; இதோ கூடிய சீக்கிரம் ஊசி மருந்து தயாராகி வந்து சேர்ந்துவிடும்.

பிழையைத் திருத்துங்கள்

கீழே வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு பிழை இருக்கும். எழுத்துப் பிழையோ சொல் பிழையோ, வாக்கியப் பிழையோ, விஷயப் பிழையோ இருக்கலாம். அதைக் கண்டுபிடித்துத் திருத்துங்கள். நீங்கள் கண்டுபிடித்தது சரியா இல்லையா என்பதை 70-ஆம் பக்கத்தில் உள்ள விடையைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

(1) வெகு காலமாக ஒரு நொண்டிப் பிச்சைக்கார ஏழை மனிதன் ஒருவன் தினந்தோறும் அந்தச் செல்வருடைய வீட்டைத் தேடி வந்து யாசகம் செய்து கொண்டே வந்தான்.

(2) அவன் இப்படித் தினந்தோறும் வந்து இரப்பதைப் பார்த்துக்கூட அந்தப் பணக்காரருக்கு மனம் இறங்கவில்லை.

(3) "அமெரிக்காவின் தலைநகராகிய நியூ யார்க்கில் பிச்சைக்காரர்களே இல்லை. இந்தியாவில்தான் இந்தப் பாழும் பிச்சைக்காரர்கள் பிராணனை வாங்குகிறார்கள்" என்று அந்தக் கிருபண சிரோமணி சொன்னார்.

(4) அவர் எப்போதுமே தன் பணம் குறையாமல் இருக்குமென்று நினைத்துக் கொண்டிருக்க, அது வந்தவிடம் தேடிக்கொண்டு போய்விட்டது.

(5) நாலா விதத்திலும் பாடுபட்டுத் தேடிய சொத்துப் போய் விட்டதே என்று அவர் அங்கலாய்த்து அழுதார்.

(6) அறுந்த விரலுக்குச் சுண்ணும்பு தராத அவருக்கு இறைவன் போன இடங்களில் வெண்ணையையா தருவான்?

(7) தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற ஔவையார் வாக்கு அந்தப் பணக்கார லோபியினிடம் பலித்தது.

(8) போன இடங்கள் ஒன்றிலாவது அவரிடம் மரியாதை காட்டிப் பேசுவாரையே காண முடியாமற் போயிற்று.

(9) ராமேசுவரத்துக்குப் போய் ஸ்ரீ மீனாட்சியம்பிகையைத் தரிசனம் செய்யலாமென்றெண்ணிப் போனார். அங்கே அவர் பாவத்தைக் கரைக்க முடியுமா?

(10) எல்லையற்ற பாவக் கடலிலே திளைந்து விளையாடிய அவருடைய பணம், மதிப்பு, கர்வம் யாவையும் அழிந்தொழிந்தது என்ற செய்தியை அங்கே உள்ளவர்கள் அறிவார்களா? ஏழைப் பிச்சைக்காரராகத் திண்டாடினார்.

(11) உலகத்தின் கஷ்ட சுகத்தைக் கவனிக்காமல் இருந்த அந்தக் காலத்தில் அவர் கண்ணிற் படாத ஏழை ஜனங்களின் துயரங்கள் இப்போது அவருக்கு நன்றாகத் தெரியவே, அவர் உள்ளம் சின்னாபின்னப் பட்டுச் சிதைந்து குலைந்தது.

(12) தம்முடைய சொந்த நலத்தை மறந்து பிறருக்காக உழைப்பதுவே உயர்ந்த வாழ்வு என்ற உறுதி அவர் உள்ளத்தே தோன்றியது; உலகம் முழுவதும் அன்புக்காக ஏங்குவது போலக் காக்ஷி அளித்தது.

ஜோஸ்யப்படி பிறந்த உலக ரட்சகர்

ப்ரடரிக் எம். லூமிஸ்

இந்தத் திபேத் விஷயம் பெரிய அதிசயமாயிருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டாரே, அந்த வாலஸ் முதல் எத்தனையோ வெள்ளைக்காரர்களுக்குக்கூட இதிலே ஒரு மயக்கம். பெண் வைத்தியத்தில் புகழ் பெற்ற லண்டன் நிபுணரான இந்தக் கட்டுரையாளர் எழுதியிருப்பதையே பாருங்கள். இப்போது பட்டத்துக்கு வந்திருக்கும் 14-ஆவது டலாய் லாமாவின் பிறப்பு எத்தனை பெரிய ஆச்சரியமாய் இருக்கிறது!

பத்து வருஷத்துக்கு முந்தி இருக்கும். ஒரு கனவான் என்னைக் காண வந்தார். அவர் கீழ் நாட்டைச் சேர்ந்தவர். வயது நாற்பதுக்குமேல் இருக்கலாம். விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டவர் என்று தெரிந்தது.

"டாக்டர்! அடுத்த வருஷம் நவம்பர் மாசம் இங்கேதானே இருப்பீர்கள்?" என்று கேட்டார்.

"அடுத்த வருஷமா? பார்த்துக் கொள்ளலாம். அது வரைக்கும் நான் இருப்பேன் என்று என்ன நிச்சயம்?"

"உங்களுக்கு அப்படிப் படலாம். ஆனால் என்னைக் கேட்டால் அடுத்த வருஷம் நீங்கள் இங்கே நிச்சயமாக இருக்கப்போகிறீர்கள். பாருங்கள்."

"எதற்காக இப்படிக் கேட்கிறீர்கள்?"

"அடுத்த வருஷம் நவம்பர் முதல் தேதி விடிகாலை 3-15-க்கு எனக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது. அப்போது நீங்கள்தாம் வயிற்றை ஆபரேஷன் செய்து குழந்தையை எடுக்கவேண்டும். வைத்திய ரீதிப்படி நாளைக் கிட்டத்தட்டக் குறிப்பிட்டு விடலாம். மணிக்கணக்குத் தவறு இருப்பது வேறு விஷயங்களைப் பொறுத்திருக்கிறது."

நான் அப்போது அவரைப் பார்த்த பார்வையின் அர்த்தத்தை அவர் ஊகித்துக் கொண்டார். "பயப்படாதீர்கள்! எனக்குப் பயித்தியம் பிடித்துவிடவில்லை—என் மனைவி இன்னும் கர்ப்பம் தரிக்கவில்லை; இருந்தாலும் நான் சொல்கிறபடி அந்தச் சமயத்தில் எல்லாம் சரியாக இருக்கிறதா இல்லையா, பாருங்கள்— சூரியன், சந்திரன், கிரகநிலைகள் எல்லாம் அப்படியே இருக்கும்."

"ஜோஸ்யமா?"

"அசல் ஜோஸ்யம் என்று சொல்வதற்கில்லை. —இதோ பாருங்கள்: உங்களுக்கு ராசி முதலிய விஷயங்களில் நம்பிக்கை இராததுபோல் எனக்கும் வைத்திய சாஸ்திரத்தில் சில விஷயங்களில் நம்பிக்கை இல்லை" என்று சொல்லிவிட்டுச் சற்று நேரம் சும்மா இருந்தார். பிறகு, "போலிகள் கிளம்பிவிட்டார்கள்; அதனால் விஷயத்தை நிஜமாகவே அறிந்தவர்கள் பாடு கூடத் திண்டாட்டமாகி விட்டது. உங்கள் வைத்தியத் தொழிலில் சில போலிகள் இல்லையா, அதைப் போலத்தான்!" என்றார் அவர்.

"இப்போது விஷயம் அது அல்ல. இன்னும் 15 மாதங்கழித்து வயிற்று ஆபரேஷன் செய்து இன்ன நாளில் இன்ன மணியில் குழந்தை பிறக்கும் என்கிறீர்களே!- அது எப்படி என்றுதான் கேட்கிறேன். பிறக்கப் போவது ஆண் குழந்தை என்று எப்படித் தெரியும்? வயிற்றை ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று ஏன் சொன்னீர்கள்? நாளையும் மணியையும் எப்படிக் கணக்கிட்டுக் குறிக்க முடிந்தது? வைத்திய ரீதிப்படி காரணம் ஏதாவது இருந்தாலொழிய நான் அப்படிப்பட்ட ஆபரேஷன் எதுவும் செய்யவே மாட்டேன்" என்றேன்.

"நானும் உங்களுக்கு அநாவசியமாகத் தொந்தரவு கொடுக்க மாட்டேன். என் மனைவியைப் பரிசோதித்தால் நான் சொன்னது அவசியந்தான் என்று உங்களுக்குத் தெரியும். வைத்தியரீதிப்படி அப்படி நடக்கும் என்பது நமக்குத் தெரிந்த விஷயந்தானே? —அது இருக்கட்டும். இப்போது நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும். வருகிற மார்ச்சு 15-ஆம் தேதி என் மனைவி கர்ப்பந்தரித்து இரண்டு மாதம் ஆகியிருக்கும். அப்போது நீங்கள் சற்றுக் கவனிக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு அவர் புறப்பட எழுந்தார்.

"ஒரு விஷயம் சொல்லுகிறேன்; அப்போதுதான் உங்களுக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை ஏற்படும். நான் பிறந்தது திபேத்தில் ஒரு மலைப் பிராந்தியத்தில். அங்கே நடக்கிற அதிசயங்களைச் சொன்னால் உலகம் நம்பவே நம்பாது. அங்கே உள்ள எங்கள் குருமார்கள் இருபது வருஷத்துக்கு முன்னால் இந்தியா வழியாய் ரகசியமாக என்னை இங்கே படிக்க அனுப்பினார்கள்: மறுபடியும் எப்படியோ ஸச்வான் வழியாக அங்கே திரும்பிப் போய்ச் சேர்ந்தேன். அந்தக் கதையைக் கேட்டால் நம்பக்கூட மாட்டீர்கள். அதை இப்போது சொல்லக் கூடாது. இந்தக் காரியம் பூர்த்தியாகட்டும்; அப்புறம் பார்க்கலாம்" என்று கூறி வணக்கம் செலுத்திவிட்டுப் போய்விட்டார். நான் ஒன்றும் தோன்றாமல் வாயடைத்துக் கிடந்தேன்.

மறுபடியும் அந்த மனுஷரைப் பார்ப்பேன் என்று நான் எண்ணவில்லை. அந்த விஷயத்தையேகூட மறந்துவிடப் பார்த்தேன். ஆனால் அவர் குறித்த அதே தினத்தில் அவருடைய மனைவி என்னைக் காண வந்தாள். சற்றே மாநிறம்; லட்சணமாக இருந்தாள். அவரைப் போலில்லாமல் சிரித்த முகமாக இருந்தாள்.

அவர் சொன்னது போலவே இருந்தது அவள் உடல்நிலை. அவள் விஷயத்தில் சாதாரண பிரசவம் சாத்தியமல்ல என்றும் தெரிந்தது. நான் சொன்னதையெல்லாம் பொறுமையுடன் கேட்டாள். அன்று

முதல் என்றைக்கு வா என்றாலும் தவறாமல் வந்து தேக ஸ்திதியைப் பரீட்சித்துக் கொண்டு போவாள். அவள் யாரோடும் பழகுவதில்லை; ஆனாலும் அவள் நல்ல மாதிரியாக இருந்தது எங்கள் ஆஸ்பத்திரியில் எல்லோருக்கும் பிடித்திருந்தது. அவளைப் பற்றி அறிய ஆவல் கொண்டு அவள் பிறந்த ஊர், பெயர் இவற்றை விசாரித்தேன். ஆனால் அவள், "குழந்தை பிரசவமானதும் என் புருஷரே உங்களுக்குச் சொல்வார்" என்று மரியாதையாகவே பதில் சொல்லித் தட்டிக் கழித்தாள்.

என் கணக்குப்படி பிரசவத்துக்கு அவள் புருஷர் குறிப்பிட்ட நாள் தாண்டி இரண்டு வாரம் போகும் என்று தோன்றியது. அந்த நாளும் நெருங்கியது. உடனே ஆபரேஷன் செய்துவிட வேண்டும் என்ற ஓர் எண்ணம் சதா என்னை வாட்டி வந்தது; ஆனாலும் அதை அடக்கப் பார்த்தேன். என்னோடுகூட இருந்த டாக்டரிடம், "டலாய் லாமாவே வந்தாலும் சரி, கிரகங்களே பெயர்ந்து வந்தாலும் சரி, நான் யாருக்கும் அடங்கி நடக்கப் போவதில்லை. இரண்டு நாள் முன்னதாகவே ஆபரேஷன் செய்துவிடப் போகிறேன்" என்றேன். இருந்தாலும் எனக்கே அது சரி என்று படவில்லை.

அக்டோபர் 31- ஆம் தேதி அவள் வந்தாள். பரிசோதித்துப் பார்த்தேன். சீக்கிரத்தில் ஆபரேஷன் செய்யும்படி அப்படிச் சிக்கல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நான் இதை அவளிடம் சொன்னதும் அவள் முகம் வாடிவிட்டது. அப்போதுதான், மறுநாள் நவம்பர் 1-ஆம் தேதி என்பது என் ஞாபகத்துக்கு வந்தது. நான் அவளுக்கு விஷயத்தை விளக்கிச் சொன்னேன். "எனக்கு ஆபரேஷன் செய்யச் சம்மதந்தான்; ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் செய்தால் ஆபத்தாயிற்றே" என்றேன். அவளும் புரிந்துகொண்டு பழையபடி சிரித்த முகத்தோடு புறப்பட்டுச் சென்றாள்.

இரவு 8-30 மணி இருக்கும். வயிற்றை என்னவோ செய்கிறது என்று அவளிடமிருந்து செய்தி வந்தது. நான் அவளை ஆஸ்பத்திரிக்குப் போகச் சொன்னேன். நான் அங்கே போய் அவள் உடல்நிலையைப் பரீட்சித்தேன். மத்தியான்னம் பார்த்ததற்கும் இப்போதைக்கும் எவ்வளவு மாறுதல்! என்றாலும் எனக்கு நிச்சயப்படவில்லை. எதற்கும் நான் ஆஸ்பத்திரியிலேயே இருப்பது நல்லது என்று தீர்மானித்தேன்.

விடிகாலை மணி 2-30 இருக்கும். என்னைக் கூப்பிட்டனுப்பினார்கள். அப்போது ஜோசியம், கிரகம் ஒன்றையும் நான் நினைக்கவில்லை. அவளைக் கவனித்துச் சீக்கிரம் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற ஓர் எண்ணந்தான் என் மனத்தில்.

உடனே என்னோடு வேலை செய்யும் டாக்டரைக் கூப்பிட்டேன். வயிற்று ஆபரேஷன் செய்யத் தயாராக இருக்கும்படி சொன்னேன். மடமடவென்று ஆஸ்பத்திரி சிப்பந்திகள் முன்னேற்பாடுகளெல்

லாம் செய்து முடித்தார்கள். அந்த ஸ்திரீ தனக்கு மயக்கம் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டாள்; குழந்தை பிறக்கும்போது தான் அதை நேரே பார்க்கவேண்டு மென்று அவளுக்கு ஆசை.

அவள் இஷ்டப்படியே மயக்கமும் வராமல் நோவும் தெரியாதபடி அவளுக்கு ஒரு மருந்து கொடுத்தோம். அப்போது மணி 3-10. ஏதோ நாடகத்தில் நடிக்கப்போகிறவன் மாதிரி காத்திருந்தேன். வயிற்று ஆபரேஷன் சுலபமானது தான். அந்த ஸ்திரீ என்னையும் கடிகாரத்தையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

வெளியிலே அவள் புருஷன் காத்துக் கொண்டிருப்பதும் எனக்குத் தெரியும். கத்தியை வயிற்றில் வைக்கும்போது எல்லோரும் மூச்சுப் பேச்சில்லாமல் கவனித்துக் கொண்டிருந்தார்கள். சரியாக மணி 3-15. குழந்தை பிரசவமாயிற்று; ஆண் குழந்தைதான்!

மேஜைமேல் கவிழ்த்துப் போட்டிருந்த குழந்தையை நிமிர்த்தினேன். என்னைப் பார்த்துப் புன் சிரிப்புச் சிரித்தது, அந்தக் குழந்தை. எத்தனையோ குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன்; இப்படிப் பிறந்து 15 நிமிஷத்துக்குள் எந்தக் குழந்தையும் சிரித்துப் பார்த்ததில்லை!

என் மனத்தை விட்டு ஒரு பெரிய பாரம் நீங்கின மாதிரி இருந்தது. 'இந்தக் குழந்தைக்குக் கூட இப்படி நடக்கப் போகிறதென்று ஒருவேளை தெரிந்திருக்குமோ?' என்று ஆச்சரியப் பட்டேன். ஆபரேஷன் உடையைக்கூடக் கழற்றாமல் குழந்தையின் தந்தையைக் காணச் சென்றேன். அவர் எனக்கு நன்றி கூறி, "பார்த்தீர்களா?" என்றார்.

பார்ப்பதா? — விஷயமே பெரிய அதிசயமாகத்தான் இருந்தது.

அதற்குப் பிறகு கொஞ்ச நாள் மற்றப் பிரசவ அலுவல்களைக் கவனிக்கவேண்டியிருந்தது. பிறகு ஒரு நாள் அந்தக் கனவான் பரக்கப் பரக்க என்னிடம் வந்தார்.

"நாங்கள் சீக்கிரமே புறப்பட்டுப் போகிறோம். இருந்தாலும் உங்களிடம் சொல்லிவிட்டுப் போகவேண்டாமா? விஷயத்தைப் புரிந்து கொண்டு எங்களுக்கு ஒத்தாசையாக இருந்தீர்களே; அதை மறந்துவிட முடியுமா? ஊருக்குப் போனதும் எங்கள் குழந்தைக்கு நல்ல தசை அடிக்கப்போகிறது. நாங்கள் திரும்பி வர ஒரு வருஷம் ஆகலாம்; 20 வருஷம் ஆனாலும் ஆகலாம். பின்னால் எப்போதாவது சில அதிசய சமாசாரங்கள் கேள்விப்படுவீர்கள். பையன் பிறந்த நாள், மணி இவைகளை மட்டும் மறக்காதீர்கள்; சொல்லிவைத்தேன்" என்றார்.

* *

இது நடந்து சுமார் பத்து வருஷம் ஆகியிருக்கும். போன வருஷம் நவம்பர் 1-ஆம் தேதி. என் குமாஸ்தா என்னிடம் வந்தார். "குரலைப் பார்த்தால் யாரோ புது ஆசாமி போல் இருக்கிறது. உங்களோடு டெலிபோனில் பேச வேண்டுமாம்; பெயரைக் கேட்டால் சொல்லமாட்டேன் என்கிறார். இன்றைக்கே உங்களைப் பார்த்தாக வேண்டுமாம். 'இன்று டாக்டருக்கு வேறு அலுவல் இருக்கிறதே; எப்படி முடியும்?' என்றேன். அவர், 'காலெண்டரைப் பார்த்தால் டாக்டரே புரிந்து கொள்வார்' என்றார்."

"சரி; ஆபீஸ் வேலையெல்லாம் முடிந்ததும் சாயந்தரம் 5 மணிக்கு அவரை வரச் சொல்லுங்கள்" என்றேன். சாயந்தரம் அப்படியே வந்தார். இவர் பழைய ஆசாமி அல்ல! ஆனால் இவர் பேச்சும் நிறமும் மட்டில் அவரை நினைப்பூட்டின.

"நேராக லாஸாவிலிருந்து வருகிறேன். ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ?" என்று தாழ்ந்த குரலில் கேட்டார்.

"ஆஹா! ஞாபகம் இல்லாமல் என்ன?— சொல்லுங்கள்; என்ன செய்யவேண்டும்?"

"பெரிய இடத்தில் கல்யாணம் என்றால் எங்கள் தேசத்தில் முன்னால் ஜாதகம் ஒத்துக் கொள்கிறதா என்று பார்ப்பது வழக்கம். இப்படி ஒத்துப்போன ஓர் இடத்துத் தம்பதிகளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கும் என்று ஜாதகரீதிப்படி தெரிந்தது; எங்கள் தெய்வ வாக்கும் அப்படித்தான். அந்தக் குழந்தை 1938 நவம்பர் 1-ஆம் தேதி விடிகாலை 3-15க்குப் பிறந்திருந்தால் விசேஷமாம். 500 வருஷத்துக்கு முன்னால் எங்கள் முன்னோர்களிடையே ஒரு மகான் இருந்தார். அவரே இந்தக் குழந்தையாகப் பிறந்திருக்க வேண்டும். அந்த மகானுக்கு முன்னே 'சமாதானப் பிரியர்' என்று பெயர். இப்போது இவர் 'மத்தியஸ்தர்' என்று பெயரெடுப்பாராம். எங்களுக்கு இதெல்லாம் புரியாவிட்டாலும் நாங்கள் இந்தக் கட்டுத்திட்டங்களை மீறுவதில்லை. பின்னால் அனைத்தும் தெய்வவாக்குப்படியே நடக்கிறது; அதுதான் அதிசயம்.

"இப்போது, பாருங்கள்: எங்களுக்குப் பக்கத்திலேயே ருஷியாவுக்கும் சீனாவுக்கும் சண்டை நடக்கிறது. உங்கள் கைப்பட இப்படிப் பிரசவம் ஆன ஒருவரே இந்த மாதிரி பெயர் எடுக்கப் போகிறார். அவரே உலகத்தை ரட்சிக்கப் பேர்வதாக லாமாவின் நெருங்கிய சிஷ்யர்களாகிய நாங்கள் நம்புகிறோம். மேலே போகப் போகத் தெரியும்; பார்க்கலாம். அவர் எங்கே பிறந்தார்,எப்படிப் பிறந்தார் என்ற விஷயம் எனக்கும் அவருடைய பெற்றோர்களுக்கும் 14-ஆம் டலாய் லாமா அவர்களுக்குந்தான் தெரியும். பொது ஜனங்களோ அவர் எங்கோ இமாலய மலைச் சிகரத்தில் பிறந்தார் என்று எண்ணிக்கொண் டிருக்கிறார்கள். அவர் பிறந்தபோது இடி இடித்தது என்றும் அவர் கையை அமர்த்தினதும் இடியும் புயலும் அடங்கிவிட்டன என்றும் அவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். இப்போதே ஜனங்கள் அவரைப் போற்றி வணங்குகிறார்கள்."

இப்படிச் சொல்லிவிட்டு அவர் புறப்பட்டுப் போக எழுந்தார். "என் காரியம் முடிந்துவிட்டது. போகப் போக இன்னும் எவ்வளவோ விஷயம் கேள்விப்படப் போகிறீர்கள், பாருங்கள். போய் வருகிறேன்" என்று வணங்கி விடை பெற்றுக் கொண்டார்.

போகும்போது அவர் ஏதோ விசித்திரமான சமிக்ஞை செய்து விட்டுப் போனார். இதே மாதிரி சமிக்ஞையை முன்னே பார்த்திருப்பதாக உடனே ஞாபகம் வந்தது. அதற்குள் அவர் போய்விட்டார்.

பல கலைப்பொக்கிஷங்கள் மறைந்து போயின. அவை மறைந்தாலும் அவற்றின் பெயர் மறைவதில்லை. அப்படிப்பட்ட ஒன்று—

மறைந்த மயிலாசனம்

கொப்பத ராமஸ்வாமி ஐயங்கார்

அக்பர் சக்கரவர்த்தி தம் காலத்தில் எல்லாரையும்விடப் பணம் படைத்தவராக விளங்கினார். அவருடைய பேரராகிய ஷாஜஹான் தாத்தாவையும் ஒரு படி மீறிவிட்டார். ஷாஜஹான் பூலோக குபேரனென்றே புகழ் பெற்றார். அவர் ஆக்ராவில் இரண்டு பெரிய நிலவறைகள் கட்டி, அவற்றில் தமது ஆஸ்தி முழுவதையும் பத்திரப்படுத்தி வைத்திருந்ததாகச் சொல்வார்கள்.

விலைமதிப்பற்ற ஓர் அழகிய சிம்மாசனத்தை நிர்மிக்கவேண்டுமென்ற ஆவல் ஷாஜஹானுக்கு உண்டாயிற்று. பாதுஷா நினைத்தார்; உத்தரவிட்டார். நவரத்தினங்களும் வந்து குவிந்தன. பொக்கிஷ அதிகாரி வந்து பார்வையிட்டான். ஐயாயிரம் 'நிஷ்கங்கள்' எடையும், எண்பது லட்சம் ரூபாய் மதிப்பும் உள்ள ரத்தினங்களைப் பொறுக்கி எடுத்தான். இந்த நவரத்தினங்களுடன் லட்சம் தோலாவுக்கு மேலேயே பொன்னோடு சேர்த்து மயிலாசனத்தைக் கட்டியதாகச் சரித்திராசிரியர்கள் சொல்லுகிறார்கள். மயிலின் உட்புறம் முழுவதும் ஸ்படிகம்போன்ற பீங்கானால் உருவாயிற்று. மேல் கவசத்திலே நவரத்தினங்களைப் பதித்தார்கள். அதை நிறுத்தப் பத்தரை மாற்றுப் பொன்னும் மணிகளும் இழைத்த பன்னிரண்டு கம்பங்கள் நாட்டினார்கள். ஒவ்வொரு கம்பத்தின் மேலும் ரத்தினங்களால் செதுக்கிய இரண்டிரண்டு மயில் அமைத்தார்கள். இந்த இரண்டு மயில்களுக்கும் இடையே ஒரு பூங்கொடி. எப்படிப்பட்ட பூங்கொடி? வைரமும் ரத்தினமும் பச்சையும் வைத்திழைத்துச் சுடர்விடும் பூங்கொடி!

மயிலாசனத்தின் மீது ஏற மூன்று படிகள் அமைத்தார்கள். இவற்றின் இருபுறமும் ரத்தினங்களைச் செதுக்கினார்கள். மயிலாசனத்தின் நாலுபுறத்திலும் நான்கு பலகைகளை இசைத்தார்கள். இவற்றில் ஷாஜஹான் கையை வைத்துக்கொள்ளும் பலகை பத்து லட்சம் ரூபாய் பெறும். மயிலாசனத்தில் செதுக்கியிருக்கும் நவரத்தினங்களில், ஒரே ஒரு கோமேதகம் மட்டும் லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புடையது.

இந்தக் கோமேதகத்தைக் குறித்து ஒரு கதை சொல்கிறார்கள். இது முதலில் ஷா அப்பாஸின் சொத்தாக இருந்தது. பிறகு ஜம்பிள்பேக் என்பவன் கைக்கு வந்தது. அவன் இதை ஜஹாங்கீருக்குப் பரிசாகக் கொடுத்தான். கடைசியில் ஜஹாங்கீரின் பிள்ளை

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம்: 18-7-'48), பெங்களூர்.

யாகிய ஷாஜஹானிடம் இது வந்து சேர்ந்தது. தட்சிண யுத்தத்தின் வெற்றிச் சின்னமாக மயிலாசனத்தை அமைத்து, அதில் இந்த ஒப்பற்ற ரத்தினத்துக்கு ஷாஜஹான் முக்கிய ஸ்தானம் கொடுத்துவிட்டார்.

இதில் இன்னொரு விசேஷம். இந்த ரத்தினத்துக்குமேலே வரிசையாக சாஹேப்கிரண் தைமூர், மீர்ஜா ஷருக், உலூப் பேக், ஷா அப்பாஸ், ஜஹாங்கீர் ஆகியவர் பெயர்களையும் கடைசியில் ஷாஜஹானின் பெயரையும் செதுக்கிவிட்டார்கள்.

இந்தியாவுக்கு யாத்திரை வந்த பிரெஞ்சு வைர வியாபாரி டவெர்ணியர், 1655 - இல் இந்த மயிலாசனத்தைக் கண்டு திக்பிரமை அடைந்துவிட்டான். 'இதை நிர்மிக்க வேண்டுமென்ற உத்தேசம் ஷாஜஹானுக்கு எப்படிப் பிறந்தது? இதன் உம்மிசத்துக்கு எத்தனை தங்கம் செலவாகியிருக்கவேண்டும்? தங்கத்தில் புதைத்த இந்த ரத்தினங்களின் அமைப்பு எப்படிப்பட்டது? இதை ஜோடித்து இழைத்த சிற்பிகள் எத்தனை கலைத்திறன் படைத்திருக்கவேண்டும்?' என்று எண்ணி அவன் மலைத்துப்போனான். இதே காலத்தில் இந்த மயிலாசனத்தைப் பார்வையிட்ட பெர்னியர் என்னும் ஆராய்ச்சியாளன் ருசிகரமான இந்தச் செய்தியை வெளியிடுகிறான்: "இது மிகவும் திறமைசாலியான அயல்நாட்டுச் சிற்பியின் வேலை. அந்தச் சிற்பி லாங்கேஜ் பிராந்தியவாசி என்று இப்போது தெரியவருகிறது. அவன் பல ஐரோப்பிய அரசர்களுக்குப் போலி வைரங்களைக் கொடுத்து, அவர்களை ஏமாற்றிக் கொள்ளையடித்திருக்கிறான். அவனுடைய அதிருஷ்டவசமாக அவனுக்கு மொகலாய தர்பாரில் இடம் கிடைத்துவிட்டது. மயிலாசனம் செய்யும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்."

இந்த மயிலாசனத்துக்காக ஷாஜஹான் நூறு லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறார். இதை நிர்மிக்க ஏழு வருஷகாலம் பிடித்திருக்கிறது. 1635 - இல் வருஷப்பிறப்பன்று பெரிய உற்சவத்தின் இடையில் ஷாஜஹான் மயிலாசனம் ஏறினார். இது ஆக்ராவில் பாதுஷாவின் தர்பாரில் பதினாறு வருஷம் ஸ்திரவாசம் செய்தது. பிறகு இதை டில்லிக்குக் கொண்டுபோய் 'ஷாமகலி'ல் வைத்தார்கள். ஷாஜஹானுக்குப் பிந்திய சக்கரவர்த்திகள் மயிலாசனத்தை விசேஷ காலங்களில் மட்டுமே உபயோகித்தார்கள்.

ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, 1736 - இல் நாதிர்ஷா இந்தியாவின் மீது படையெடுத்தான். இந்த மயிலாசனத்துடன் வேறு ஆறு சிம்மாசனங்களையும் கொள்ளையடித்துக்கொண்டு பாரசீகத்துக்குத் திரும்பிவிட்டான். அவன் மயிலாசனத்தின் சிருஷ்டித்திறனை வியந்ததால், தன் தேசத்துக்குத் திரும்பியதும் ஆஸ்தானச் சிற்பிகளைக் கொண்டு இதே மாதிரி ஒரு நகல் ஆசனம் செய்வித்தான். இதற்குப் பிறகு மயிலாசனத்தின் சரித்திரம் என்னவாயிற்று என்று தெரியவில்லை.

கர்ஸான் பிரபு வெகுதூரம் ஆராய்ந்தபின், "ஷாஜஹானின் காலத்து மயிலாசனத்தின் சுவடே தெரியவில்லை" என்று எழுதியிருக்கிறார். மற்றோர் ஆராய்ச்சியாளர், "அழியும் நிலையில் இருந்த மயிலாசனம் ஷாஜஹானின் பேரனாகிய ஷாருக் என்பவனிடம் பெருமை

வாய்ந்த ராஜபவனத்தில் இருப்ப தாகக் கேள்வி. அழிந்த பாகத்தைச் சீர்திருத்திப் புதிய பாணியில் புதுப் பித்திருக்கிறார்கள். அது இப்போ தும் 'தெஹ்ரான்' கட்டிடச் சித்திர சாலையில் இருக்கிறது'' என்று சொல்லுகிறார்.

சரித்திரப் பெருமை வாய்ந்த மயிலாசனம் டில்லி அரண்மனைக்கு அழகு செய்துகொண் டிருந்தது; ஒளியைக் கொடுத்தது. மயிலாசனத் தில் புதைத்த வைரங்களில் ஒன்று விலைமதிப்பற்றது; உலகப் புகழ் பெற்றது. அதைப் பத்திரப்படுத் தவே ஷாஜஹான் தமது அரண்மனைக்குக் கட்டுதிட்டமான காவல் விதித்திருந்தார்.

புகழ்வாய்ந்த இந்த மயிலாசனத் தைக் காப்பாற்ற, பிரம்மாண்டமான மாளிகை! அந்த மாளிகைக்கு இர வும் பகலும் கண்மூடாத வீரர்களின் காவல்!

கண்ணைக் கவரும் இந்த மயிலாசனத்தை இன்று பார்ப்போ மென்றால், இதை எங்கும் காணோம். முன்னே இது இருந்த இடத்தில் உணர்ச்சியைக் கிளப்பும் நிர்மானுஷ்யமான ஒரு சலவைக் கல் மண்டபத்தைத்தான் இன்று பார்க்கலாம். மயிலாசனம் மாய மாய் மறைந்துவிட்டது. அந்த 'மயில்' இருந்த மாளிகை மட்டும் உரு மாறாமல் பெருங்காயச் சிமிழ் போல் இன்றைக்கும் நின்று கண் குளிரக் காட்சி அளிக்கிறது.

சங்கீதத்தின் சக்தி

சென்னை மேல்சபையின் உபதலைவர் ஸ்ரீ வேங்கடசாமி நாயுடு செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர். காங்கிரஸில் சேரு முன், ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தவர். அவர் என்னிடம் சொன் னது இது:

காங்கிரஸ் சட்டசபை மெம்பர்கள் சத்தியாக்கிரகம் செய் தார்களே, அப்போது நாயுடுவின் வீட்டில் ஏகப்பட்ட கலவரம். ''சிறை செல்லுவேன்'' என்கிறார் வேங்கடசாமி. ''கூடாது'' என்கிறார்கள் குடும்பத்தார்.

இந்நிலையில், நாயுடுகாருவின் வீட்டுக்கு நடிகர் அனந்த நாராயணன் வந்தார். க்ஷேமம் விசாரித்துவிட்டு, அழகான தொண்டையில் அற்புதமான சில தேசிய கீதங்களை மிக்க உருக்கமாகவும் ஆவேசத்தோடும் பாடினார். பின்பு விடைபெற் றுச் சென்றார். இதன் பிறகு, நாயுடுகாருவின் வீட்டில் உள்ள முக்கியஸ்தர்கள் யாவரும் ஆளுக்கு ஒரு பூமாலையைக் கொண்டு வந்து வேங்கடசாமி நாயுடுவுக்குப் போட்டு, ''நீங்கள் சிறை சென்று வாருங்கள்'' என்று வாழ்த்தினார்கள்.

—வ. ரா. 'கலையும் கலைவளர்ச்சியும்.'

குழந்தைகளின் விளையாட்டிலே பிறந்தது ஓர் அரிய வைத்தியக் கருவி. அதைக் கண்டுபிடித்தவரின் கதையும் உருக்கமானது.

விளையாட்டில் பிறந்த கருவி

மோகன்

டாக்டர்களைப்பற்றி நினைக்கும் போது நமக்கு உடனே அவர்களுடைய 'ஸ்டெதாஸ்கோப்' கருவி ஞாபகத்துக்கு வந்துவிடுகிறது. அதுதானே அவர்களுக்கு லக்ஷணம்! அதைக் கண்டுபிடித்த லென்னெக் ஒரு பிரெஞ்சு வைத்தியர். ஆனால் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுத எவரும் ஏனோ அக்கறை கொள்ளவில்லை. நான் பல இடங்களில் சிரமப்பட்டுத் தேடிய பின், கடைசியாக ரூத் பாக்ஸ் என்பவர் எழுதிய 'வைத்திய நிபுணர்கள்' என்ற நூலில்தான் லென்னெக்கைப் பற்றிய தகவல்கள் எனக்குக் கிடைத்தன.

லென்னெக் கி. பி. 1787-ஆம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு வக்கீல்; சற்று ஊதாரி. அவசரப்பட்டு இரண்டாம் முறை விவாகம் செய்து கொண்டார். லென்னெக்குக்கு ஒரு மாமா இருந்தார். அவர் நாண்டீஸ் நகரத்தில் வைத்தியத் தொழில் நடத்தி வந்தார். ஆரம்பத்திலிருந்தே மாமாவுக்கு மருமகன் விஷயத்தில் சற்று அக்கறை உண்டு. தந்தையின் கெட்ட பழக்கம் மகனுக்கும் படிந்துவிடப்போகிறதே என்று அஞ்சி மாமா தம்மிடமே மருமகனை வைத்துக்கொண்டார். வைத்தியத் துறையில் லென்னெக்கைப் பழக்க வேண்டும் என்று எண்ணினார். லென்னெக்குக்கும் அது பிடித்திருந்தது. ஆனாலும் இப்படிக் கிராமாந்தரத்தில் வைத்தியத் தொழில் கற்பது இவருக்குத் திருப்திப் படவில்லை. பாரிஸ் நகரில் போய்ப் படிக்க விரும்பினார். மாமாவுக்கும் அப்படி அனுப்ப வேண்டும் என்றுதான் எண்ணம். அதற்குப் பணம் வேண்டுமே? லென்னெக்கின் தந்தைக்கோ சொத்து ஒன்றும் இல்லை. ஆனாலும் மகனின் பட்டணச் செலவுக்காக எப்படியோ 600 பிராங்கு சேர்த்தனுப்பினார். அதை எடுத்துக்கொண்டு லென்னெக் பாதசாரியாகவே பாரிசுக்குப் புறப்பட்டார்.

அங்கே ஜீன் கோர்விசார்ட் என்னும் பிரபல வைத்தியரின் கலைக் கழகத்தில் லென்னெக் சேர்ந்தார்.

காப்பிரைட்: பீபிள்ஸ் ஹெல்த் (ஆங்கிலம்: நவம்பர் '48), சென்னை.

காட்டுப்புறத்திலிருந்து வந்த ஒல்லியான இந்த வாலிபரை மற்ற மாணவர்கள் மதிக்கவே இல்லை. தங்களைவிட இவர் படிப்பில் கெட்டிக்காரர் என்று தெரிந்ததும் இவரிடம் அவர்களுடைய வெறுப்பு அதிகமாயிற்று. இப்படிப் படித்துக்கொண்டிருக்கும்போதுதான், வாழ்க்கையில் முதல் முதலாக இவருக்கு வெற்றி கிடைத்தது. அந்தக் கலைக் கழகத்திலுள்ள மாணவர்கள் ஏதோ நோயாளியின் வியாதியைக் குறித்துத் தங்களுக்குள் சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள். லென்னெக்கின் சக பாடியான புருஸே 'அந்த நோயாளிக்கு நியுமோனியா கண்டிருக்கிறது' என்று வாதித்தான். லென்னெக் அவனைக் கண்டித்து அது 'எபிமா' என்னும் நோயே என்று பிடிவாதமாகச் சொன்னார். இந்த விவாதத்தின் பயனாக இருவருக்கும் கைகலப்பு நேரும்போலிருந்தது. ஆனால் நல்ல வேளையாகக் கோர்விசார்ட் அங்கே வந்து நோயாளியைப் பரிசோதித்துப் பார்த்ததில் லென்னெக் சொன்னதே சரி என்று ஊர்ஜிதமாயிற்று. புருஸேயின் முகம் தொங்கி விட்டது. லென்னெக் பிரபல வைத்தியரானதற்கு இது ஒரு நல்ல அறிகுறி என்றே கூறவேண்டும்.

1802-இல் தமது 21-ஆம் வயதில் இவர் 'பெரிடோனைட்ஸ்' என்ற நோயைக் குறித்து ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டார். வைத்தியர்கள் அந்த நோயின் தன்மையை அறிய இயலாமல் அதுவரைக்கும் திகைத்து வந்தார்கள். அந்தத் திகைப்பைத் தீர்த்து வைத்த இந்தக் கட்டுரையால் இவருக்குப் பெயரும் புகழும் கிடைத்தபோதிலும் பணம் கிடைக்கவில்லை. மார்பு சம்பந்தமான நோய்களை ஆராய்வதில் இவர் அதிகச் சிரத்தை செலுத்தி வந்தார். சுவாச கோச சம்பந்தமான நோய்களைப் பற்றிய ஆராய்ச்சியில் மார்பைத் தட்டிப் பார்த்துச் சத்தத்தின் மூலம் நோயை அறியும் முறை அந்தக் காலத்தில் மிகவும் முக்கியமாயிருந்தது. இந்த முறையை முதல்முதலாகக் கைக்கொண்டவர் ஈன்புருக்கெர். கோர்விசார்ட்டும் இந்த முறையையே பின்பற்றினார். லென்னெக்குக்கு இது அவ்வளவு சரி என்று படவில்லை. ஒரு நோயாளியின் இருதயத் துடிப்பைக் கூர்ந்து கவனித்தால் மார்பு சம்பந்தமான நோய்களை ஆராய்வதில் அது மிகவும் பயன்படும் என்று இவர் கருதினார்.



1816-ஆம் ஆண்டில் ஒரு நாள் நெக்கெர் ஆஸ்பத்திரியில் லென்னெக் வேலை பார்த்துக் கொண்டிருக்கையில், இருதயக் கோளாறு சம்பந்தமாக ஒரு பெண்ணைப் பரிசோதிக்க நேர்ந்தது.

அவளோ இளம் பெண். அதோடு சற்றுப் பருமன். அந்த நோயாளியின் மார்பில் காதை வைத்துக் கேட்பதென்றால் இவருக்குத் துணிவு எப்படி வரும்? இருந்தாலும் அதைத் தவிர வேறு வழியில்லை. "நான் அப்படிக் காது வைத்துக் கேட்டாலும் ஒன்றும் கேட்கப்போவதில்லை. இந்தப் பெண்பிள்ளைகள் ஏனோ இப்படிப் பருத்துப்போகிறார்கள்!" என்று முணுமுணுத்துக் கொண்டார். நோயாளியை அப்படியே விட்டு விட்டு வெளியே உலாவச் சென்றார். அங்கே சிறுவர்கள் ஏதோ விளையாடிக் கொண்டிருந்தார்கள். நீண்டு கனத்த இரும்புக் கம்பி ஒன்றின் ஒரு கோடியில் குண்டூசியால் ஒரு சிறுவன் கிறிக்கொண்டிருந்தான். மற்றவர்கள் மறு கோடியில் நின்றபடி அந்தச் சத்தத்தைக் கம்பி வழியாகக் கேட்டு ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள். கனத்த பொருள் ஒன்றின் வழியே ஒலி ஊடுருவிச் சென்று உரக்கக் கேட்கும் இந்த வேடிக்கையைக் கண்டதும் டாக்டரின் மூளையில் ஏதோ யோசனை தோன்றியது. அவர் நேராக ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து காகிதம் ஒன்றைக் குழாய் போல் சுருட்டி ஒரு கோடியை அந்த நோயாளிப் பெண்ணின் மார்பில் வைத்து மறு கோடியில் காது வைத்து அவளுடைய இருதயத் துடிப்பைக் கவனித்தார். இதிலும் அவருக்கு வெற்றியே கிடைத்தது.

வெவ்வேறு நோய்களுக்கு ஏற்றபடி வேறு வேறான துடிப்புச் சத்தம் கேட்பதை இதன் மூலம் அறிந்துகொண்டார். உள்ளே தக்கபடி துவாரம் அமைத்துச் சீர் திருத்திய மரக் குழாய் ஒன்று தயாரித்தார். தாம் கண்டுபிடித்த அந்தக் கருவிக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று அவர் யோசித்துக் கொண்டிருக்கையில் அவருடைய மாமா 'தோராஸ்கோப்' என்ற பெயரைக் குறிப்பிட்டார். ஆனால் லென்னெக்குக்கு அதைவிட 'ஸ்டெதாஸ்கோப்' என்ற பெயர் பொருத்தமாகப் பட்டது. 'ஸ்டெதாஸ்' என்றால் கிரேக்க பாஷையில் மார்பு என்று அர்த்தம். இப்படித் தாம் கண்டுபிடித்த கருவியைப் பற்றிய விவரத்தைப் பின்னால் ஒரு புத்தகத்தில் எழுதி வெளியிட்டார். கடைகளில் ஸ்டெதாஸ்கோப் ஒன்று 16 பிராங்கு வீதம் விற்பனையாயிற்று. இருந்தாலும் அவ்வளவு விரைவில் இந்தக் கருவி பிராபல்யம் அடைந்து விடவில்லை. ஒருவர் ஏதாவதொன்றைப் புதிதாகக் கண்டுபிடித்தால் ஆரம்பத்தில் அதற்கு எதிர்ப்பு இருப்பது சகஜமே. ஆயினும் லென்னெக்கின் கருத்துக்களை அவருடைய நோயாளிகளுள் பிரபலஸ்தரான சிலர் ஆதரித்துப் பரப்பத் தொடங்கினார்கள். ராஜாங்க உத்தியோகஸ்தர்களிடையே அவருக்குச் செல்வாக்கு ஏற்பட்டது. பணம் வந்து குவிய ஆரம்பித்தது.

கடைசிவரை இவருக்கு எதிரியாக இருந்தவர் இவருடைய பழைய சகபாடி விக்டர் புரூஸேயே. எப்படியாவது லென்னெக்கையும் அவருடைய கருத்துக்களையும் அழித்தே தீருவது என்று புரூஸே கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார். எல்லா நோய்களுக்கும் எரிச்சலே காரணம் என்ற கருத்தை புரூஸே வெளியிட்டார்; அதற்கு ரத்தப் போக்குத் தான் தகுந்த சிகிச்சை என்றும் குறிப்பிட்டார். லென்னெக்கின் கருத்துக்கள் பரவினால் புரூஸே

யின் வைத்தியத் தொழிலில் மண் விழும். அதனாலேதான் புரூஸே இப்படி லென்னெக்கின் கருத்துக்களை அடியோடு நசுக்கப் பார்த்தார். இருவரும் ஒருவர்க் கொருவர் எதிர்ப்பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள். ஆனால் புரூஸே சிறந்த பிரசங்கியானதால் அவரே ஜயித்தார். பெரும்பாலோர் லென் னெக்கின் கருத்துக்களைப் பொருட் படுத்தவில்லை. இதனால் லென்னெக் மனமும் உடலும் உடைந்துபோய் 1824-இல் பாரிஸ் நகரை விட்டுப் புறப்பட்டுத் தம் ஊருக்குப் போனார். ஆயினும் அதே வருஷம் டிசம்பர் மாதம் அவருக்கு விவாகமாயிற்று. மீண்டும் பாரிசுக்கு வந்து அங்கே இருப்பதென்று தீர்மானித்தார். ஆனால் இனி அதிக நாள் தாம் ஜீவித்திருக்கப் போவதில்லை என்பதைத் தாமே உணர்ந்து 1826 மே மாதத்தில் மறுபடி பிரிட் டனிக்குத் திரும்பினார். மனைவிக் கும் இது கவலை தந்தது. அவள் அஞ்சியபடி விரைவிலேயே லென் னெக் மரணமடைந்தார்.

லென்னெக் கண்டுபிடித்த அந்த மரக் குழாய்பற்றி அவர் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் புரூஸேயின் கட்சியினர்க்குமிடையே பல ஆண்டு கள் விவாதம் நடந்தது. கடைசி யாக லென்னெக்கின் கருத்தே சரியானதென்று முடிவு செய்தார் கள். செத்த பிறகு அவருடைய கொள்கையை மெச்சி என்ன பலன்? இப்போதுள்ள 'ஸ்டெதாஸ் கோப்' நன்றாகச் சீர்திருத்தப் பெற் றிருக்கிறது. இருந்தாலும் அதைக் கண்டுபிடித்த பெருமை லென்னெக் கைத்தான் சாரும்.

சரியான அதிகாரிகள்

பிரிட்டிஷ் போலீஸில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி வகித்த ஒருவர் சொன்னது இது: "போலீஸ் அதிகாரிகள் மூன்று வகை: மகாநாணயமாகவும் சிறிதும் திறமையற்றவர் களாகவும் இருப்பவர் முதல்வகை; இவர்களை நான் ஏற்கமாட் டேன். மிகவும் திறமையுள்ளவர்களாகவும் நாணயமற்றவர்க ளாகவும் இருப்பவர் இரண்டாவதுவகை; இவர்களை எனக்குப் பிடிக்காது. போதுமான அளவு நாணயமும் போதுமான அளவு திறமையும் உள்ளவர் மூன்றுவதுவகை; இவர்களைத்தான் எனக்குப் பிடிக்கிறது.

— மனோகர்லால், 'காரவான்'

நல்ல புஸ்தகம்

நல்ல உணர்ச்சிகள் உள்ளதெல்லாம் நல்ல புஸ்தகம் ஆகி விடாது. கெட்ட உணர்ச்சிகள் உள்ளது பற்றியோ கேட்க வேண்டியதில்லை.

— எல்ஸா ட்ரியோலெட்.

பரிசுத்த பம்பாய்

கமல் மஜூம்தார்



உங்கள் வாழ்விலே பரிசுத்தமும் சிந்தனையிலே ஆரோக்கியமும் வேண்டுமா? வேண்டுமானால் பம்பாய்க்கு வாருங்கள். இப்போதல்ல; ஒரு வருஷத்துக்குப் பிறகு வாருங்கள். இங்கே பொது மக்களுக்கே முற்றும் சொந்தமான சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. உங்கள் ஆத்மாவிலும் உடம்பிலும் படிந்திருக்கக்கூடிய 'ஒட்டடை'களை அடித்து இலவசமாய் உங்களைச் சுத்தம் செய்துவிடத் தக்க ஏற்பாடுகளையெல்லாம் அது இப்போது செய்து வருகிறது. வாருங்கள், வாருங்கள் பம்பாய்க்கு.

காமக் குரோதங்களாகிய சிலந்திகள் உங்கள் மனத்திலே கூடு கட்டியிருக்கின்றன; வேசை இல்லம், லாகிரி, புகையிலை, டீ, காபி முதலிய தீமைகள் உங்கள் உடலைக் கெடுத்திருக்கின்றன.

இந்தப் பாவங்களையெல்லாம் கழுவி இங்கே நீங்கள் பரிசுத்தம் அடையலாம். வாருங்கள் பம்பாய்க்கு. நிர்வாணம், மோட்சம், முக்தி இவற்றில் எது வேண்டுமோ அதை நீங்கள் அடைய உங்களுக்கு இங்கே முஸ்தீப்புச் செய்துவைக்கப்படும். பம்பாய்க்கு வந்ததுமே உங்களுக்கு நிர்வாணமோ, முக்தியோ, மோட்சமோ கிடைக்க முக்காலே மூன்று வீசம் சான்ஸ் இருக்கிறது. இப்போது இங்கே எல்லாம் பரீட்சார்த்த நிலையிலே இருக்கிறது. ஆகவே ஒரு வருஷம் கழித்து வாருங்கள். அப்போது உங்களை வரவேற்கச் சகலமும் சித்தமாகிவிடும். பம்பாய் நீங்கள் கனவு காணும் பம்பாயாக - நீங்கள் என்ன, யோகிகளெல்லாங்கூடக் கனவு காணும் பம்பாயாக - இருக்கும். அதிலே லாகிரி, புகையிலை, டீ, காபி, தாம்பூலம் எதுவும் இராது; ரெயிலிலே தாங்காத கூட்டமும் இராது. எப்படி! இதெல்லாம் ஜோராக இல்லையா?

இல்லை, இப்போதே வர வேண்டும் என்றாலும் உங்கள் இஷ்டம்; நீங்கள் குஷாலாய் வரலாம். ரெயில்வே ஸ்டேஷனிலேயே உங்களுக்கு வரவேற்புக் கிடைக்கும். நகரப் போலீஸ்காரர் வரவேற்பார்கள். உங்கள் மூட்டை

நகரத்தைப் பரிசுத்தம் செய்யப் பம்பாய் சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை பலிக்குமோ பலிக்காதோ, நமக்குத் தெரியாது. ஆனால், இந்தக் கட்டுரை படிக்க ரசமாயிருக்கிறது.

காப்பிரைட் : பேகம் (ஆங்கிலம் : 7-10-'48), பம்பாய்.

மூடிச்சுகளிலே நாட்டுச் சாராயமோ உணவுத் தானியங்களோ இருக்கின்றனவா என்று அவர்கள் சோதித்துப் பார்த்துவிடுவார்கள். இங்கே உணவுத் தானியங்கள் இப்போது 'ரேஷன்' செய்யப்படுகின்றன. ஏனென்றால், நீங்கள் அளவுக்கு மேல் தின்று உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாதல்லவா? அதற்காகத்தான். வாரத்துக்கு ஒரு முறையோ, மாதத்துக்கு ஒரு முறையோ உங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படி அமெரிக்கத் தங்கச் சோளம், பிரேஜில் வெள்ளி அரிசி, ஆஸ்திரேலியக் குதிரைக் கோதுமை எல்லாம் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். நீங்கள் விரும்பினால் ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் உங்களுக்குச் சர்க்காரின் 'ஸ்பெஷல்' தண்ணீர்ப் பால் கொண்டு வந்து கொடுப்பார்கள். மற்றொரு வஸ்துவும் உங்களுக்கு இதே போல் கிடைக்கும். அதை 'நீரா' என்று சர்க்கார் சொல்லுகிறார்கள். ஆனால் அது உண்மையிலே பானகம் போல் தித்திக்கிறது. நீங்கள் மதுபானம் செய்து பழக்கமுள்ளவராக இருந்தால், அந்நியச் சாராயங்களைக் குடித்துத் தான் தாகசாந்தி செய்துகொள்ள வேண்டும். அவை புதன், வெள்ளி, ஞாயிறு மூன்றும் போக, வாரத்தின் மீதி நான்கு நாட்களிலும் பகிரங்க மார்க்கட்டில் எந்நேரமும் கிடைக்கும். புதன், வெள்ளி, ஞாயிறுகளில் வேண்டுமென்றால், கள்ள மார்க்கட்டில்தான் வாங்கிக் கொள்ள வேண்டும். நாட்டுக் கள் மட்டில் கண்டிப்பாய்க் கிடைக்காது. மது ஒழிப்பில் முதல் நடவடிக்கையாக அதை நம் சர்க்கார் அடியோடு தடுத்திருக்கிறது.

இந்தியாவின் வேறு எந்த நகரத்தையும் விட, பம்பாய் நகரம் இப்போது மிகவும் பளிச்சென்று துலங்குகிறது, பார்த்தீர்களா? ஏனென்றால் அதன் தெருக்களிலிருந்தெல்லாம் வேசைகளை விரட்டிவிட்டார்கள். உண்மைதான். தெருக்களை விட்டு அந்த வேசைகள் இப்போது கௌரவமான ஸ்தலங்களுக்கு ஓடிவிட்டார்கள். அங்கே உங்களை அவர்கள் சந்திப்பார்கள். ஜாக்கிரதை! என்னவாவது உளறிவிடாதீர்கள். உளறினால் பொது ஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழே நீங்கள் சிறையில் கிடக்க நேரும்.

டீ, காபி பானங்களுக்கு நீங்கள் அடிமையாயிருந்தால், பம்பாய் நகரந்தான் அந்தத் துர்ப்பழக்கத்தை ஒழித்துக்கொள்ள ஏற்ற இடம். இந்தப் பானங்களுக்குச் சர்க்கார் அடியோடு தடை விதிக்கவில்லை. சிறுகச் சிறுக இவற்றைத் தொலைக்க ஏற்ற நடவடிக்கைகளையே கைக்கொண்டிருக்கிறது. டீயோ காபியோ குடிக்கவேண்டும் என்ற ஆசைப் பிசாசு உங்களைப் பீடித்தால், இந்த டீ அல்லது காபிக் கிடங்கு ஒன்றில் நீங்கள் நுழையலாம். ஆனால், இங்கே ஒரு வாய் குடித்ததும் நீங்களாகவே வெளியேறி விடுவீர்கள். இந்த விஷ பானங்களில் மக்களுக்கு வெறுப்பு உண்டாக்க வேண்டாமா? அதற்காகவே, இந்த டீ, காபிக் கிடங்குகள் சுத்தமான பாலை உபயோகிக்கக் கூடாதென்று நம் சர்க்கார் தடை விதித்திருக்கிறது. பொடிப் பாலைத் தான் இந்தக் கடைகள் உபயோகிக்கலாம். அந்தப் பால் கலந்த டீ, காபியைக் குடித்தால், அது நாக்கைக் கெடுத்துவிடுகிறது. இந்த டீ, காபிக் கிடங்குகள் ஒழிவதற்கு இதுவே முதற் படி. இந்தக்

கிடங்குகள் அடியோடு ஒழிந்ததும், இவை இருந்த இடத்திலே நீரா ஓட்டல்கள் வந்துவிடும். ஆஹா! என்ன அற்புதம் பார்த்தீர்களா!

இந்த அழுக்குப் பிடித்த 'சுதேசி' களின் வெற்றிலை போடும் பழக்கம் உங்களுக்கு உண்டா? உண்டானால், அதையும் நீங்கள் பம்பாயிலே தொலைத்து முழுகலாம். இந்த விஷயத்திலும் சிறுகச் சிறுக வெறுப்பு உண்டாக்கும் நடவடிக்கையைத்தான் நமது சர்க்கார் தற்போது கைக்கொண்டிருக்கிறது. வெற்றிலை பாக்குக் கடைகளைச் சகல ரெயில்வே ஸ்டேஷன்களிலிருந்தும் விரட்டி விட்டார்கள். நமது நவாப் சர்க்காரின் ஞானமே ஞானம்! இது நீண்ட காலம் நமக்கு நற்பழக்க வழக்கங்களைப் போதித்துக்கொண் டிருக்குமாறு அல்லாதான் இதைக் காப்பாற்றவேண்டும்!

சினிமா பார்க்கப் போனீர்களானால், இங்கே காணக்கிடைப்பது போல் ஒழுக்க சுத்தமான படங்களை உலகில் வேறே எங்கும் நீங்கள் காணமுடியாது. குடியின் ஞாபகமே உங்களுக்கு வராதபடி மதுபானக் காட்சிகளை நறுக்கி விடுகிறார்கள். கடைசியாகப் பிறந்திருக்கும் 'பர்மான்'படி, அந்நியப் படங்களின் முத்தக் காட்சிகள், கட்டித் தழுவும் காட்சிகளைக்கூட வெட்டி எறிந்துவிடுகிறார்கள். உங்கள் காம உணர்ச்சியை ஒழிக்கவே இந்த 'பர்மான்' பிறந்திருக்கிறது. சினிமாக்கலை குலைகிறதே என்று நீங்கள் வருந்தலாம். மோட்ச சாம்ராஜ்யமே நமது ஒரே லட்சியமாக இருக்கும்போது, கலையைப்பற்றி நமக்கென்ன கவலை? சினிமா சற்று நிற்கும் இடை நேரத்தில் ஒரு சிகரெட்டாவது குடிக்கலாம் என்று எடுத்துக் கொளுத்தினீர்களோ, போலீஸ்காரன் வந்து பிடித்துக் கொள்வான். உஷார்! சிகரெட் புகை துளி வீசினாலும் உயர் குடும்பப் பெண்கள் அப்படியே மூர்ச்சை போட்டுவிடுவார்கள். ஆகையால்தான் இந்தத் தடை. சிகரெட்டை அடியோடு ஒழிக்க இது முதற்படி.

ஜனங்களின் ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் நம் காவலர்கள் இத்தனையும் செய்ததோடு திருப்தி அடையவில்லை. உடலுக்கும் மனத்துக்கும் சரியான உணவு கொடுத்தால் போதுமா? தேகாப்பியாசமும் தேவை இல்லையா? அவர்கள் மூளையில் பளிச்சென்று ஒரு யோசனை உதயமாயிற்று. ஜனங்கள் எதற்காக டிராம், பஸ், ரெயில் வண்டிகளில் செல்லவேண்டும்? அவர்கள் ஏன் நடந்தே தினந்தோறும் ஆபீசுக்குச் செல்லக் கூடாது? சென்றால், அவர்களுக்குத் தேக வலிவு ஏற்படும் அல்லவா? ஆகையால், முதலில் பஸ்களில் பரீட்சை ஆரம்பமாயிற்று. பஸ்களில் அதிகக் கூட்டம் கூடாது என்று உத்தரவு பிறந்தது. அது போதாதென்று கண்டார்கள். அடுத்தபடியாக, டிராம்களில் அதிகக் கூட்டம் கூடாதென்று உத்தரவு போட்டார்கள். இனிமேல் ரெயில் வண்டிகளிலும் அதிகக் கூட்டம் கூடாதென்று சில தினங்களில் உத்தரவு போட்டு விடுவார்கள் என்றே நமக்குத் தோன்றுகிறது. அப்போது, சரியான பலன் கிடைத்துவிடும்; ஜனங்கள் நடந்தே தீர வேண்டும். அற்புதம்! அற்புதம்!

எல்லாம் சரி; நாம் இங்கே நிறுத்திக்கொள்ள வேண்டியதுதான். இல்லாவிட்டால், நமக்கும் ஏதாவது அபாயம்......

"பாம்பாட்டிகள் நிறைந்த அதிசய நாடா நம் நாடு? இன்னமும் அந்நியர் இப்படியே நினைத்துக்கொண்டிருக்க விடலாமா?

வெளிநாட்டில் நமது பிரசாரம்

ஆர். என். பரீக்

ஒரு பண்டம் விலையாக வேண்டு மானால் தொடர்ந்து விளம்பரம் செய்ய வேண்டும். விளம்பரம் இல்லாமல் நல்ல சரக்குக்கூட வியாபாரம் ஆகாமல் போகலாம். அகில தேச விஷயத்திலும் இது பொருந்தும். ஒரு நாட்டில் என்ன நடக்கிறதென்ற உண்மையை மற்ற நாடுகளில் பரப்புவதற்குத் தக்க முறைகள் இல்லாவிட்டால் மிகவும் நியாயமான விவகாரம் ஒன்றைத் தவருக எண்ணும்படி ஆகிவிடும். நியாயமற்ற ஒன்றை யாவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பது உண்மைதான். ஆனலும் சரியான படி செய்திகளை நல்ல வகையில் பரப்பாததனுல் ஒரு விஷயம் பிறரால் கவனிக்கப் படாமலே போய் விடலாம். ஒரு நாட்டின் விவகாரம் நியாயமானலும் இல்லாவிட்டாலும் பிரசாரம் அதற்குப் பலம் கொடுக்கிறது.

வேறு நாடுகளில் உள்ள பல மக்களுக்கு அநேகமாக இந்தியாவிலுள்ள நிலையைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இந்தப் பெரிய தேசத்தின் இயற்கை, மனநிலை, கொள்கை இவைகளைப்பற்றி அவர்களுக்குச் சொல்வாரே இல்லை. நம்முடைய பழம் பெருநாட்டின் தத்துவம், கலைப்பண்பு, நாகரிகம், சரித்திரம் ஆகியவைகளைப்பற்றியும் அவர்கள் அறிந்தது ஒன்றும் இல்லை. விஷயம் இப்படி இருக்கும்போது, அவர்களோடு நேரடியான தொடர்புடைய விஷயங்களைத் தவிர, இந்நாட்டுக் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும்பற்றி உண்மையான சிரத்தை அவர்களுக்கு உண்டாக நியாயம் இல்லையே.

மகாராஜாக்களும், சாதுக்களும், பாம்பாட்டிகளும் நிறைந்த அதிசய நாடு என்றுதான் இந்தியாவைப்பற்றித் தெரிந்துகொண் டிருக்கிறுர்கள். ஆகாசத்தில் கயிற்றை எறிந்து நிற்கவைக்கும் ஜாலம் இந்த நாட்டுக்கே உரிய தொழிலென்று நினைக்கிறுர்கள். 'ஒருவரை யொருவர் அடித்துக்கொள்ளும் ஹிந்து முஸ்லிம் என்ற இரண்டு வகுப்பினர் இங்கே இருக்கிறுர்கள்; இவர்களையன்றி வேறு சிலர் உண்டு; அவர்கள் தீண்டாதவர்கள்.' இந்தியாவைப்பற்றி வெளிநாடுகளில் காட்டப்படும் சித்திரம் மிகத் தவறுனது. அதிகாரிகளும் சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் பேர்வழிகளும் ஒரே மாதிரியாக இந்தியாவைப்பற்றித் தவறுன செய்திகளைப் பரப்புகிறுர்கள். இந்தியாவைப்பற்றிச் சித்திரங்களடங்கிய புத்தகங்கள் இருக்கின்றன. அநேகமாகத் தெருவில் நடமாடும் பிச்சைக்காரரையும், பாம்

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: நவம்பர் '48), சென்னை.

பாட்டிகளையும், கௌபீனதாரிகளான யோகிகளையும், கூச்சல் போடும் சாதுக்களையும் இவர்களைப் போன்ற வேறு சிலரையுமே அந்தப் புத்தகங்களில் காட்டியிருக்கிறார்கள். அத்தகைய காட்சிகள் இங்கே இல்லையென்று சொல்ல வரவில்லை. அவைகளே இந்தியா, அத்தகைய நிலைகளே இந்தியாவில் நிரம்பிக் கிடக்கின்றன என்று எவராவது நியாயமாகச் சொல்ல முடியுமா? இயற்கைக் காட்சிகளின் எழில், அமைதியான கிராம வாழ்க்கை, சாந்தி பெற்ற சமுதாயத்தைச் சிருஷ்டிக்கப் பாடுபடும் தலைவர்களின் அற்புத முயற்சிகள் முதலிய எத்தனையோ காட்சிகளை எடுக்கலாமே. அவற்றை வேண்டுமென்றே காட்டுவதில்லை; அப்படிக் காட்டினாலும் எங்கோ மூலையில் ஆயிரத்தோடு ஆயிரத்தொன்றாக வெளியிடுகிறார்கள்.

1947-ஆம் வருஷம் ஏப்ரல்மாதம் 21-ஆம் தேதி வெளியான 'லைப்' என்ற பிரசித்தி பெற்ற பத்திரிகையில் இந்திய சம்ஸ்தானாதிபதிகளைப் பற்றி நீண்ட கட்டுரை ஒன்று வெளியாயிற்று. யானைகள், வேட்டையில் கொல்லப்பட்ட மிருகங்கள், ஆசை நாயகிகள் இவர்களுடைய படங்களோடு இருந்தது அது. சம்ஸ்தானாதிபதிகளில் முதல் வரிசையில் இருக்கும் அரசர்களைப்பற்றி ஒரு புள்ளி விவரக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அது வருமாறு:

பெரிய சம்ஸ்தானாதிபதிகளான இந்த 85 பேர்கள் சராசரி 11 பட்டங்களை உடையவர்கள்; மூன்று வகை உடைகள் அணிகிறார்கள்; 5·8 மனைவிகளையோ காமக்கிழத்திகளையோ உடையவர்கள்; 12·6 குழந்தைகளைப் பெறுகிறார்கள்; அழகான அரண்மனைகளில் வாழ்கிறார்கள்; 54 வயசில் இறக்கிறார்கள்; 9·2 யானைகள் இருக்கின்றன; 22·5 புலிகளைக் கொல்கிறார்கள்; தமக்காகத் தனியாகச் செய்யப்பட்ட 2·8 விசேஷ ரெயில் பெட்டிகளை வைத்திருக்கிறார்கள்; 3·4 ரோல்ஸ் ராய்ஸ் கார்கள் இருக்கின்றன. காஷ்மீரத்து நாட்டியப் பெண்களையும், அமெரிக்க நர்ஸுகளையும், பிரெஞ்சுப் பாடகிகளையும், ஹங்கரி தேசத்துப் பாட்டுக்காரிகளையும் அடிக்கடி விரும்புகிறார்கள்.

பல பத்திரிகைகள் இந்தியாவில் ஏற்படும் வகுப்புக் கலகங்களைப் பற்றி நீண்ட வர்ணனைகளையும் பயங்கரமான கதைகளையும் வெளியிட்டன. குறிப்பிட்ட ஓர் அபிப்பிராயத்துக்குச் சாதகமாக மிகைப்படுத்தியும் திரித்தும் மாற்றியும் அந்தச் செய்திகளை வெளியிட்டார்கள். முக்கியமான செய்திகளுக்கு இந்தப் பத்திரிகைகளில் இடம் கிடைப்பதில்லை; வகுப்புக் கலகங்களைப்பற்றிய விஷயங்களுக்கோ பத்திபத்தியாக இடம் தருகிறார்கள்.

பிரிட்டிஷ் பத்திரிகைகளும் இப்படித்தான். அந்தப் பத்திரிகைகளைப் பற்றி 'நியூ ஸ்டேட்ஸ்மன்' தன் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியது:

'பஞ்சாபில் நடைபெறும் ஒவ்வொரு கொடிய சம்பவமும் அந்த மாகாணத்து நிர்வாகத்தின் இயல்பையே தெரிவிக்கும். அப்படியிருக்க அவற்றை மிகைப்படுத்தி நாடு முழுவதுமே கலகலத்துப் போனதாகத் தோற்றும்படி திரித்துக் கூறுகிறார்கள். இந்தியாவுக்குச் சுதந்தரம் கொடுத்தது தவறு என்று

அற்பத்தனமாகச் சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுவது நியாயம் அன்று. இந்தியா மீண்டும் பிறந்திருக்கிறது. அதன் விளைவுகளே இந்த நிகழ்ச்சிகள். ஆனால் இவை 1943-இல் ஏற்பட்ட வங்காளப் பஞ்சத்தைக் காட்டிலும் எவ்வளவோ சாமான்யமானவை. அப்போது 15,90,000 பேர் இறந்தார்கள்; அதைப் பற்றிப் பிரிட்டனில் செய்திகளே அதிகமாக இல்லை.'

ஸெயிண்ட் லூயி போஸ்ட் டிஸ்பாட்ச் என்ற பத்திரிகை சில காலத்துக்கு முன் பின்வரும் செய்தியை வெளியிட்டது:

'புதுடெல்லி, மே. 22—. இந்தியாவின் நாலு திசைகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான சந்நியாசிகள் புது டெல்லிக்குப் போகும் பாதையில் நிழலற்ற ரோடுகளில் கூட்டங் கூட்டமாகத் திரண்டு வருகிறார்கள். தங்களுடைய சநாதனமான மதத்துக்கு ஆபத்து வந்துவிட்டதென்று தெரிந்து குகைகளிலும் காடுகளிலும் இருந்தவர்கள் அவ்விடங்களிலிருந்து புறப்பட்டுவிட்டார்கள்.'

ஈரானியப் பத்திரிகைகள் சில, விஷமத்தனமுள்ள ஆத்திரத்தைக் கிளப்பும் தலைப்புடன் செய்திகளைத் திரித்துப் படங்களுடன் வெளியிடுகின்றன. முஸ்லிமல்லாதவர்களைப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று எழுதுகின்றன. இதைப் பற்றி அறிக்கை ஒன்றும் வெளியாவதில்லை. ஆனால் மிகவும் விஷமத்தனமான பொய்ப் பிரசாரம் திட்டம் அமைத்துக்கொண்டு மத்தியக் கிழக்கு நாடுகளில் நடைபெற்று வருவதாகவே தெரிகிறது.

இரண்டாவது, வெளிநாடுகளுக்குப் போகும் மக்களில் பெரும்பாலோர் இந்த நாட்டின் நன்மைக்குகந்த காரியத்துக்காகப் போவதில்லை; தங்கள் சொந்தக் காரியங்களுக்காகவே போகிறார்கள். மகாராஜாக்களும் ஜாகீர்தார்களும் குதிரைப் பந்தயத்துக்காகவோ ஏதாவது போகப் பொருளுக்காகவோ போகிறார்கள். இங்கிருந்து போகும் அதிகாரிகளோ இன்னதுதான் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் வகுத்த வரையறையோடு போகிறார்கள். வியாபாரிகள் எப்படியாவது அதிகமான லாபம் சம்பாதிக்கும் வழி தேடுகிறார்கள். மாணாக்கர்களுக்கோ போதிய பயிற்சி இல்லை. ஆகவே வெளிநாட்டார் கவனத்தில் இந்தியாவைப்பற்றியும் இங்குள்ள ஜனங்களைப் பற்றியும் ஒன்றும் படிவதில்லை. அதற்கு மாறாக, சில விசித்திரமான வதந்திகள் அவர்களிடம் பரவியிருக்கின்றன. காந்தி, டாகுர் இவர்களையன்றி வேறு விஷயம் ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது; அதுகூட மிகவும் சொற்பந்தான் தெரியும். இவைகளைக் கொண்டு இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன. முதலாவதாக, வெளிநாடுகளில் இந்தியாவைப்பற்றி வேரூன்றியிருக்கும் தவறான செய்திகளையும், பைத்தியக்கார வதந்திகளையும் போக்கவேண்டும். குறிப்பிட்ட ஒன்றைப் பற்றிக் கவனிக்கச் செய்வதோ, ஒரு குறிப்பிட்ட விஷயத்தை நம்பச் செய்வதோ, ஒரு குறிப்பிட்ட லட்சியத்தைக் கடைப்பிடிக்க வழி காட்டுவதோ எளிது. ஆனால் முன்னாலே பதிந்துள்ள எண்ணத்தைப் போக்குவதோ, நம்பிக்கையையும் வீண் கற்பனையையும் ஒழிப்பதோ கஷ்டமானது. பொய்க் கதைகளையும் கற்பனைச் செய்திகளையும் ஒட்டி உண்மையை நிலைநிறுத்த நாம் முயலவேண்டும்.

எல்லா நாடுகளிலும் உள்ள மக்கள் இந்தியாவின் சால்பு, நாகரிகம், தத்துவம், பழைய சரித்திரம் ஆகியவற்றைப்பற்றித் தெரிந்து கொள்ளச் செய்யவேண்டும். அதோடு புதிய வளம்பெற்ற நாட்டைச் சிருஷ்டிக்க இந்தியாவில் ஏற்பட்டுள்ள கொள்கைகள், திட்டங்கள், செயல் முறைகள் - இவற்றைப் பற்றிய உண்மையான சித்திரத்தையும் அவர்களுக்குக் காட்ட வேண்டும்.

ஐ. நா.வின் பாதுகாப்புச் சபையில் காஷ்மீர் விவகாரத்தில் நாம் பெற்ற தோல்விக்கு முக்கியமான காரணம், செய்தி பரப்புவதற்கேற்ற கருவிகள் இல்லாமையும் தவறான முறைகளுமேயாம். இந்தத் தோல்வியிலிருந்தே வெளிநாடுகளில் தக்கபடி பிரசாரம் செய்ய வேண்டியது எவ்வளவு முக்கியமானதென்று விளங்கும்.

வெளிநாடுகளில் செய்தி பரப்பும் துறையில் பின்வரும் முறைகளை மேற்கொள்ளலாம்:

(அ) பிரசங்கங்கள்.

(ஆ) வார மாத பக்ஷப் பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள் இவற்றை வெளியிடுதல்.

(இ) அறிக்கைகள், சுற்றறிக்கைகள்.

(ஈ) பிறநாட்டுப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளையும் விசேஷப் பகுதிகளையும் தந்து வெளியிடச் செய்தல்.

(உ) சினிமாப்படம், டாகுமெண்டரி படம், செய்திச் சுருள்.

(ஊ) ரேடியோப் பிரசங்கங்கள்.

இவற்றில் சில, சில நாடுகளில் அதிகப் பலனைத் தரும். அந்த அந்த நாட்டு நிலைக்கு ஏற்ப அது இருக்கும். அநுபவத்தினால் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் இது. ஐக்கிய அமெரிக்காவில் அச்சிட்ட புத்தகங்களைவிடப் பிரசங்கங்களும் செய்திப்படங்களும் அவற்றைப் போன்றவைகளும் அதிகப் பலனைத் தரும். இதற்காக நம்மிடமுள்ள சிறந்த பிரசங்கிகளையும், வாத நிபுணர்களையும் அனுப்பலாம். அமெரிக்காவுக்கும் பிற நாடுகளுக்கும் இந்தக் காரியத்திற்காக அனுப்புவதற்கு ராதாகிருஷ்ணனையும், ஸர் சி. பி. ராமசாமி ஐயரையும் போன்றவர்கள் ஏற்றவர்கள். நம் நாட்டில் பிறந்தவர் ஒருவர் மேற்கத்திய யுனிவர்ஸிடியில் கௌரவிக்கப் பெறுகிறார் என்பது இந்தியாவின் மதிப்பை உயர்த்துவதுதான். ஆனால் அத்தகைய அறிவாளிகளை நம்முடைய தேச நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்வதில்லை என்பது வெட்கப்படக்கூடிய விஷயம்.

மௌலானா அபுல் கலாம் ஆஜாத், டாக்டர் ஜாகிர் ஹுஸேன் போன்றவர்கள் மத்தியக் கீழ்நாடுகளுக்குப் போய் இருவகை நாடுகளுக்குமிடையே கலைப்பிணைப்பை உண்டாக்கலாம்.

பிற நாட்டுப் பிரசாரம் என்பது ஒரு கலை; ஒரு சாஸ்திரம். அதில் தேர்ச்சி பெறுவதற்குத் தனித் திறமை வேண்டும். செய்தியைப் பரப்புவது இழிந்த பிரசாரமாக மாறக்கூடாது. பிரசாரம், செய்தி பரப்புதல், சமாசாரம் அறிவித்தல் என்ற மூன்றும் வெவ்வேறு. இவற்றிடையே உள்ள வேறுபாடு நுண்ணியதானாலும் அதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஒரே விஷயத்தைப் பல முறைகளால் தெரிவிக்கலாம். சந்தர்ப்பத்துக்கும், நோக்கத்துக்கும், யாரை உத்தேசித்து வெளியிடுகிறோமோ அந்த மக்களுக்கும்

ஏற்ற வகையில் அந்த முறை அமைய வேண்டும். தவருன முறையில் செய்தியைப் பரப்புவது, சும்மா இருப்பதைவிடக் கெடுதியைத் தரும்.

நாட்டுக்கு ஏற்ற பொது மொழியில் புத்தகங்களை வெளியிடவேண்டும். சீனுவிலும் ஆப்கானிஸ்தானத்திலும் இங்கிலீஷ் புத்தகங்களையே வெளியிடுவதில் பயன் இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டு மொழிகளில் வெளியீடுகளை வெளியிட்டுப் பிறகு ஆங்கிலப் புத்தகங்களையும் வெளியிடுவது உபகாரமாக இருக்கும் என்பது உண்மைதான். அந்த அந்த நாட்டு மொழியில் வல்லவர்கள் கிடைக்காதவரையில் இங்கிலீஷ் உதவும். ஆனுல் நாட்டு மொழிகளில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும். எல்லா நாடுகளிலும் விநியோகிப்பதற்கேற்ற பொது வெளியீடுகளும் இருக்கவேண்டும். அதோடு, அந்த அந்த நாட்டு மக்களின் மன இயல்புக்கேற்ற தனிப்பட்ட புத்தகங்களும் வேண்டும். அந்த நாட்டு ஜனங்களின் மனசை இழுக்கும் வகையில் அவை அமைந்திருக்கவேண்டும். ஏதாவது தவருன அபிப்பிராயங்கள் அங்கே உலவினுல், உண்மையான செய்திகளை எடுத்துக் காட்டி அந்த அபிப்பிராயங்களைப் போக்குவதற்கு அவை பயன்படவேண்டும்.

இத்தகைய புத்தகங்களை இந்தியாவில் வெளியிடுவதா, அல்லது வெளிநாட்டில் உள்ள இந்திய ஸ்தானிகர்கள் வெளியிடுவதா என்ற விஷயம் முக்கியமானது. வார அறிக்கை, அவ்வப்போது வெளியாகும் செய்திகள் போன்றவற்றை அங்கங்கேயுள்ள ஸ்தானிகர்களே வெளியிடலாம். தனியே ஓர் இலாகாவை நியமித்து அதைக் கொண்டு மாதப்பத்திரிகை, கால்வருஷ வெளியீடுகள், புத்தகங்கள் இவற்றை இந்தியாவிலேயே அச்சிடலாம்.

நவீன உலகத்தில் அறிவைப் பரப்பவும், சீர்திருத்த உணர்ச்சியை ஊட்டவும் சினிமாவுக்கு அதிக வசதி உண்டு. ஐக்கிய அமெரிக்காவில் வாரந்தோறும் 90 கோடிபேர் சினிமாவுக்குப் போகிருர்கள். நம் நாட்டில் சினிமாத்தொழில் இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. உள்நாட்டிலே காட்டுவதற்கு ஏற்ற நல்ல படம் வருஷத்துக்கொன்ருே, இரண்டு வருஷத்துக்கு ஒன்ருே தான் வருகிறது. இந்த நிலையில் வெளிநாட்டார் பாராட்டும் படம் வருவதைப்பற்றி என்ன சொல்வது? அரசாங்கமே வெளிநாட்டில் காட்டுவதற்குரிய படங்களையும் செய்திச் சுருள்களையும் உற்பத்தி செய்ய வேண்டும்.

செய்தி பரப்புவதற்கு உதவியாக நிற்கும் மற்றெரு கருவி வானெலி. வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களை, இந்தியாவைப்பற்றி ரேடியோ மூலம் பிரசங்கங்கள் செய்யும் படி ஏற்பாடு செய்யவேண்டும். அமெரிக்காவில் உள்ள வானெலி நிலயங்களை எளிதில் பயன்படுத்திக் கொள்ளலாம். அகில இந்திய ரேடியோவிலும் வெளிநாட்டினருக்காக விசேஷ நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப வேண்டும். பேச்சுக்கள், விவாதம், டிராமா — எதுவானுலும் சரி; அவற்றைத் தேர்ந்தெடுத்து ஒலி பரப்பவேண்டும். அவை கேட்பவருக்குச் சுவாரசியமாக இருப்பதோடு நம் நோக்கத்தையும் போகிற போக்கிலே புலப்படுத்தவேண்டும்.



பரமஹம்ஸர்

பகைவரும் நண்பரும் : ஒரு சாது தம் சிஷ்யர்களோடு வீதிவழியே போய்க்கொண்டிருந்தார். வீதியில் ஏதோ கலகம். யாரோ முரடன் சாதுவைத் தாக்கினான். அவர் அடி தாங்காமல் மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்தார். சிஷ்யர்கள் பரபரப்புடன் அவரைத் தூக்கிச் சென்று ஒரு திண்ணையில் படுக்க வைத்து ஆசுவாசப்படுத்தினார்கள்.

சாது மெல்லக் கண்ணைத் திறந்தார். ஒரு மாணாக்கன் சாதுவினிடம் குனிந்து, "ஸ்வாமி, என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டான். சாது புன்னகை பூத்தபடியே, "நன்றாகத் தெரிகிறதப்பா. என்னை யார் அடித்தானோ அவன் தான்" என்றார். எல்லாருமே இறைவனின் அம்சந்தான்.



யார் கெட்டிக்காரன்? இரண்டு நண்பர்கள் ஒரு மாந்தோப்புக்குப் போனார்கள். மாமரங்களில் கனிகள் குலுங்கின. ஒருவன் அந்த மரங்களின் அழகைப் பார்த்தான். என்ன என்ன ஜாதி மரங்கள் இருக்கின்றன என்று கூர்ந்து கவனித்தான். அவற்றுக்குள்ளே இருக்கும் வேறுபாடுகள் என்ன என்ற ஆராய்ச்சியில் இறங்கினான். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இப்படி அவன் ஈடுபட்டிருந்தான்.

மற்றொருவனோ நேரே தோட்டத்துக் காவல்காரனிடம் போனான். அவனுடைய க்ஷேமத்தை விசாரித்து இனிமையாகப் பேசினான். அவனுடைய அன்பைப் பெற்று இரண்டு பழங்களையும் அவன் கொடுக்க வாங்கிக் கொண்டு தின்று மகிழ்ந்தான்.

கடவுளைப் பற்றிய ஆராய்ச்சியிலும் சமய ஆராய்ச்சியிலும் வீணாகப் பொழுதைப் போக்கிவிட்டுப் பக்தியோ அநுபவமோ இல்லாமல் இருக்கும் பேர்வழி முதலில் கூறிய ஆராய்ச்சிக்காரனுக்கு ஒப்பாவான். கடவுளை நம்பிப் பக்தி செய்து இன்பத்தை அநுபவத்தில் உணர்கிறவன் இரண்டாவது மனிதனைப் போன்றவன். இந்த இருவரிலும் யார் கெட்டிக்காரன்?

வாழ்வும் வாக்கும்

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

வேஷத்திலும் நன்மை: ஒரு தீர்த்தக்கரையில் பிச்சைக்காரர்களும் சாதுக்களும் இருந்தார்கள். ஸ்நானத்துக்கு வருகிறவர்கள் அங்கிருந்த சாதுக்களுக்குக் காணிக்கை செலுத்தி வழி பட்டார்கள்.

இந்தக் காட்சியை ஒரு திருடன் பார்த்தான். "நாமும் ஒரு சாதுவைப் போல இங்கே இருந்தால் நமக்கு எத்தனையோ பண்டங்கள் கிடைக்கும். நகைகள் அணிந்த பெண் எவளாவது வந்தால் ஏமாற்றி அழைத்துச் சென்று நகைகளைப் பறித்துக் கொள்ளலாம்" என்று எண்ணினான். உடனே தலையை வளர்த்து மேலே முடிந்துகொண்டான். திருநீறு ருத்திராட்சம் அணிந்தான். கண்ணை மூடிக்கொண்டு தீர்த்தக்கரையில் அமர்ந்தான்.

அவன் காலிலும் பலர் வந்து விழுந்தார்கள். தேங்காய் பழம் கொண்டுவந்து வைத்தார்கள். "இப்படிப் போலி மதிப்பு வைக்கிறார்களே, உண்மையாகவே நாம் மௌனமாகக் கண்ணை மூடி இருந்தால் இன்னும் அதிக மதிப்பு உண்டாகுமே" என்று நினைத்தான். அப்பியாசம் பண்ணினான். மனம் ஒருமைப்பட்டது. அவனையறியாமலே அவனுக்கு ஒரு குதூகலம் உண்டாயிற்று. "இந்த அளவிலே இப்படி இன்பம் இருக்கிறதே. தவத்தைச் சரியாக நிறைவேற்றினால் நிச்சயமாகப் பெரிய இன்பம் உண்டு" என்ற நம்பிக்கை உண்டாயிற்று. வைராக்கியம் முற்றியது. கடைசியில் அவன் உண்மை ஞானி ஆகிவிட்டான்.



குற்றம் புரியும் விலங்குகள்

பி. கே. ஸேன்

நாயோடு வருவார்கள் குறத்தியும் குறவனும்; குரங்கோடு வருவான் குரங்காட்டி; புருவைத் தேடி வருவான் வாலிபன். இத்தனை பேரிடமும் ஜாக்கிரதையாக இருங்கள் என்கிறார் கல்கத்தா போலீஸ் டெபுடி கமிஷனரான இந்தக் கட்டுரையாளர்.

திருடர்களுக்கும் கொலைபாதகர்களுக்கும் கெட்டிக்காரத் தோழர்கள் தாம் பேருதவி புரிகிறார்கள். மனிதர்களைவிட மிருகங்களே அவர்களுக்குச் சிறந்த தோழர்களாயிருக்கின்றன. இது என்னவோ நம்பமுடியாத கற்பனைபோல் உங்களுக்குத் தோன்றலாம். ஆனால், கற்பனை எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும், அடிப்படையான ஆதாரமில்லாமல் அது எழ முடியாது. சம்பவம், உண்மை, கற்பனை இவை மூன்றுக்கும் நிச்சயமான ஒரு தொடர்பு இருக்கிறது.

'பழிக்குப் பழி' என்ற ஒரு கதையை மாப்பஸாங் எழுதியிருக்கிறார். ஏதோ ஆதாரம் வைத்துக் கொண்டுதான் அதை அவர் எழுதியிருக்கவேண்டும். பலமிழந்து நோஞ்சலாய்க் கிடக்கும் திக்கற்ற ஒரு கிழவியின் மகனை ஓர் ஆள் கொலை செய்துவிடுகிறான். அந்த ஆளை அவள் பழிக்குப் பழி வாங்குகிறாள். எப்படி? ஒரு பொம்மை தயாரிக்கிறாள். அந்தப் பொம்மையின் குரல்வளையைக் கௌவிக் குதறித் துண்டு துண்டாய்க் கிழித்தெறியும்படி, ஒரு வேட்டை நாயைச் சிறுகச் சிறுகப் பழக்குகிறாள். பயிற்சி பூர்த்தியாகிறது. தன் ஒரே குழந்தையைக் கொன்ற கொலைகாரன் மீது, நாயைக் கிழவி பிறகு ஏவி விடுகிறாள். பசியால் வெறி பிடித்த இந்தப் பிரம்மாண்டமான மூர்க்க நாய், அந்த ஆளைக் கௌவிக் கிழித்துவிடுகிறது!

மனிதன் குற்றம் செய்தால், சுதந்தரமாய்ச் சிந்தித்தே செய்கிறான். தன் செயலின் பலாபலன்களைப்பற்றி அவன் யோசிப்பான். கடைசி நேரத்திலே, குற்றத்தைச் செய்யாமல் நின்றாலும் நின்றுவிடுவான். மிருகமோ இப்படி அல்ல. அதற்குப் பயிற்சி அளித்த மனிதன் அதைத் தூண்டிவிட்டால் போதும்; உடனே அது எவ்வித யோசனையும் இல்லாமல், இயந்திரத்தைப் போலச் செயல் புரிகிறது. அதைத் தூண்டிவிட்ட பிறகு, தடுத்து நிறுத்துவதே சாத்தியமில்லை. திருடர்களும் கொலைகாரர்

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 7-11-'48), கல்கத்தா.

களும் மிருகங்களை இரண்டு விதங்களில் உபயோகிக்கிறார்கள்: தங்கள் காரியத்துக்கு உடந்தையாகத் துணை புரிய அவற்றை உபயோகிப்பது ஒரு விதம்; தங்களுக்குப் பதில் அவையே குற்றத்தைப் புரிந்து விடும்படி உபயோகிப்பது மறு விதம்.

வீடுகளில் காவல் புரியும் ஆண் நாயை வாயடக்குவதற்காகப் பெண் நாயைப் பல திருடர்கள் உபயோகிக்கிறார்கள். பெண்நாய் கர்ப்பம் தரிக்கக்கூடிய பருவ மாதங்களில், இதை அப்படி உபயோகிக்கிறார்கள். இதன் காம வெறியைத் தூண்டி விட்டுப் பூர்த்தியாகாத நிலையில் இதை வெளியே இழுத்துச் செல்கிறார்கள். எந்த வீட்டுக்குச் செல்ல வேண்டுமோ அந்த வீட்டை நோக்கிக் காற்றடிக்கும் திசையிலே இந்தப் பெண்நாயைக் கொண்டு போய் நிறுத்துகிறார்கள். வீட்டிலே காவல் புரியும் ஆண்நாய் இதை மோப்பம் பிடித்து, உடனே வாயடைத்துப் போய்விடுகிறது. இந்தப் பெண்நாயின் மூலம் காவல் நாயை மயக்கி வெளியே இழுத்துத் திருடர்கள் கொலை செய்து விடுவதும் உண்டு என்று டாக்டர் கிராஸ் என்பவர் கூறுகிறார். நம் நாட்டிலும் சரி, மேல்நாடுகளிலும் சரி, நாடோடிக் குற்றவாளிகள் பெரும்பாலும் பெண்நாய்களை வளர்க்கிறார்கள். வீடுகளிலே காவல் புரியும் ஆண்நாய்களை மயக்கி இழுப்பதற்காகவே இந்தப் பெண்நாய்கள்.

கல்கத்தாவில் ஒரு வாலிபத் திருடன் ரசமான ஒரு முறையைக் கையாண்டான். தன் காரியத்துக்கு உதவியாக ஒரு நாய்க்குட்டியை அவன் வளர்த்தான். 1944-ஜூன் மாதத் தொடக்கத்தில் ஒரு நாள் காலையில், வட கல்கத்தாவில் ஒரு கனவான் தமது மூன்றடுக்கு மாடி வீட்டின் கீழ் அறை ஒன்றில் உட்கார்ந்து தினப்பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். அப்போது திடீரென்று ஒரு பையன், ஒரு நாய்க்குட்டியைப் பிடிக்கத் துரத்திக் கொண்டு ஓடி வந்தான். நாய்க் குட்டி இவர் வீட்டுக்குள்ளே ஓடி வந்தது. பையனும் அதை விரட்டிக் கொண்டே உள்ளே நுழைந்தான். நாய்க்குட்டி ஊளையிட்டுக்கொண்டே இவரைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது; பிறகு திடுதிப்பென்று ஒரே ஓட்டமாய் ஓடி இவர் வீட்டு மாடியில் ஏறிவிட்டது. கனவானுக்கு ஒன்றும் புரியவில்லை; ஒரே குழப்பம். இந்த நிலையில் பையன் வெகு ஆவலோடு கன



வானைப் பார்த்து, "கொஞ்சம் தயவு செய்யுங்கள். மாடியிலே போய் என் நாய்க்குட்டியைப் பிடித்துக்கொண்டு செல்கிறேன்" என்று கெஞ்சினான். கனவான் ஏதும் சந்தேகம் கொள்ளவில்லை. "போ, சனியன் பிடித்த உன் நாய்க்குட்டியைப் பிடித்துக் கொண்டு போ" என்று அநுமதி கொடுத்தார். கொஞ்சம் தாமதித்தால் வீட்டை நாய்க்குட்டி என்ன நிர்த்தூளி செய்துவிடுமோ என்று அவருக்குப் பயம். பையன் மாடிக்குப் போய்ச் சில நிமிஷ நேரத்தில் நாய்க்குட்டியைத் தூக்கிக்கொண்டு

சந்தோஷப் புன்சிரிப்புடன் திரும்பி வந்தான். கனவானிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியேறினன். சிறிது நேரம் கழித்துப் பார்த்தால், கனவானின் தங்க ரிஸ்ட்வாட்சு, பார்க்கர் பவுண்டன் பேனு இரண்டையும் காணேம். இரண்டாவது மாடியில் மேஜை மீது கிடந்த அந்த இரண்டு வஸ்துக்களையும் பையன் அடித்துக்கொண்டு போய் விட்டான். வேறு இரண்டு வீடுகளிலும் இதே மாதிரி திருட்டு நடந்திருக்கிறது. இதைப்போலவே சில வாலிபத் திருடர்கள் புருவைப் பழக்குகிருர்கள். அவர்கள் புருவைப் பறக்க விடுவார்கள். அது யார் வீட்டு மாடியிலாவது போய் உட்காரும். பையன்கள் அதைப் பிடிக்கவரும் சாக்கில் அந்த வீட்டுக்குள் நுழைந்து ஏதாவது நகை நட்டுகளைத் திருடிச் சென்று விடுவார்கள்.

இவற்றையெல்லாம்விடக் குரங்குகளைப் பழக்குவதுதான் மிகவும் வெற்றிகரமான முறை. அவை மனிதர்களைப் போலவே மிகவும் புத்திசாலிகள். காசி, பிருந்தாவனம் முதலிய இடங்களுக்குச் சென்றவர்களுக்கு, குரங்குகளின் திருட்டு நன்ருய்த் தெரியும். வீட்டுக் கூரையிலே துணியை உலர்த்திவிட்டுப் போனுல், நீங்கள் திரும்பி வருவதற்குள்ளே குரங்குகள் அதை அபகரித்துக் கொண்டு போய் விடும். வாழைப்பழம், மிட்டாய் முதலிய தின்பண்டங்களை லஞ்சம் கொடுத்தால்தான் உங்கள் துணி உங்களுக்குத் திரும்பி வரும். ஜன்னல்களை யெல்லாம் மூடிக் கதவைப் பூட்டி வைத்த அறையில் உள்ள பண்டங்கள்கூடப் பத்திரமாயிருப்பதில்லை. குரங்குகளின் இந்தக் குறும்பு உங்களுக்கு வேடிக்கையாகத் தோன்றலாம். ஆனுல், அவற்றின் இந்த இயற்கையை மனிதன் மேலும் பக்குவப்படுத்திக் கூர்மை செய்து, கொடிய குற்றங்களைப் புரியப் பயன் படுத்திக்கொண்டால், அந்த அநியாயத்தைத் தாங்க முடியாது. பிரான்ஸில் சிம்பன்ஸி என்ற மனிதக் குரங்கை ஒரு வெறியன் வளர்த்தானும். அந்தக் குரங்கை ஏவி, அழகிய பெண்கள் பலரைக் கொன்றுவிட்டானும். இந்த விவரங்களைப் பிரெஞ்சுப் போலீஸ்காரர்களே சொல்லுகிருர்கள். கொலை நடந்த இடத்தில் தென்பட்ட விரல் அடையாளங்கள் அனைத்தும் விசித்திரமாக இருந்தன. கடைசியிலே ஆராய்ந்து பார்த்தால் அத்தனையும் ஒரு குரங்கின் விரல் அடையாளங்கள்!



நல்லவேளையாக நம் நாட்டிலே குரங்குகள் இப்படிப்பட்ட கொடுங் குற்றங்களை இது வரைக்கும் புரியவில்லை. ஆனுல், சற்று லேசான வேறு குற்றங்களைப் புரிய அவற்றை நம் நாட்டுத் திருடர்களும் பழக்கியிருக்கிருர்கள். கொஞ்ச காலத்

துக்கு ஒரு தடவை கல்கத்தாவுக்குச் சில குரங்காட்டிகள் வருகிறார்கள். சிறிதும் சந்தேகிக்காத பொது ஜனங்களிடமிருந்து பொருள்களைத் திருடத் தங்கள் குரங்குகளை அவர்கள் உபயோகிக்கிறார்கள். இப்படிப் பல திருட்டுக்கள் சென்ற வருஷம் கல்கத்தாவில் நடந்திருக்கின்றன. முதலில் நடந்த திருட்டுக்களில் பறிகொடுத்தவர் அத்தனை பேரும் துரதிருஷ்டவசமாக அயல்நாட்டு ஐரோப்பிய ஸ்தானிகர்கள்! அந்த ஐரோப்பியர்கள் கிராண்ட் ஹோட்டலை விட்டு விட்டு வெளியே வருவார்கள். அங்கே சில சிறுவர்களும் பெரிய ஆள்களும் கூட்டமாக நிற்கக் காண்பார்கள். அந்தக் கூட்டத்தில் சில குரங்குகளும் இருக்கும். ஐரோப்பியர்களைச் சில சிறுவர்கள் மறித்துக்கொண்டு பிச்சை கேட்பார்கள். சிறுவர்களுக்குத் தப்ப ஐரோப்பியர்கள் முயன்று கொண்டே இருக்கும்போது, திடுதிப்பென்று ஐரோப்பியர்களுடைய தோள்மீது சில குரங்குகள் வந்து குதிக்கும். அவற்றை விரட்ட இவர்கள் கைகால்களை அசைத்துக்கொண்டு துள்ளுவார்கள். குரங்குகள் கீழே குதிக்கும். ஆனால், அப்படிக் குதிக்கும்போதே ஐரோப்பியர்களின் சட்டை ஜேபியிலே கைவிட்டு, மணிபர்ஸ், பாக்கெட் நோட்புக் முதலியவற்றை எடுத்துக்கொண்டு போய்விடும். இந்தக் கட்டத்தில் கூட்டமும் கரைந்து மறைந்துவிடும். ஆனால் இம்மாதிரி நடந்த மூன்று தடவைகளில், குரங்குகள் தாம் கைப்பற்றிய வஸ்துக்களைத் தம் எஜமான்களிடம் பிறகு சமர்ப்பிக்கக் காத்திராமல் அந்தக் கணத்திலேயே சமர்ப்பித்து விட்டன; இரண்டு வாரத்துக்கு முன்பு சௌரிங்கியில் ஒரு கனவான் தம் காரில் போய்க்கொண்டிருக்கையில் இப்படித்தான் குரங்குக்குத் தம் பொருளைப் பறிகொடுத்து விட்டார்.

நண்பர்கள் குரங்குகளிடம் - முக்கியமாகப் பெரிய ஹோட்டல்களின் முன்பு செல்லும்போது - ஜாக்கிரதையாக இருப்பது நலம். போன வருஷம் என் நண்பர் ஜான்ஸன் - பிரசித்திபெற்ற டென்னிஸ் ஆட்டக்காரர் - தமது மணிபர்ஸை, பார்க் ஸ்ட்ரீட் லேட்ஸ் ஹோட்டல் முன்பு இழந்து போயிருப்பார். நல்ல வேளையாக இந்த எச்சரிக்கையே அவரைக் காப்பாற்றியது. நாய்க்குட்டி, குரங்கு, புரு முதலிய பிராணிகளிடம் அன்பு காட்டுவது ஆனந்தந்தான். ஆனால், அவை உங்களைப் புண் படுத்திப் பரிதாப நிலையில் வைத்து விடும் என்பதை மறவாதீர்கள். அப்போது நீங்கள் ஆனந்தச் சிரிப்புச் சிரிக்க முடியாது. சுற்றிலும் உள்ளவர்கள் தாம் உங்களைப் பார்த்துச் சிரிப்பார்கள், அங்கலாய்ப்பார்கள். நீங்களோ ஒன்றும் செய்ய முடியாமல் வீண் ஆத்திரமும் துக்கமுமே அடைவீர்கள்.

மலிந்த சரக்கு

இந்தக் காலத்தில் மகா மலிவாகக் கிடைப்பது ஒரே ஒரு சரக்கு. அதுதான் புத்திமதி.

'டாட்டென்ஹாம் விட்னெஸ்'

வென்ற பட்டாபி



டாக்டர் பட்டாபி சீதாராமையா, ஆந்திர மாகாணத்தில் மசூலிப்பட்டணம் ஜில்லாவில் பிறந்தவர். இவர் பிறந்த தேதி 1880 நவம்பர், 24. மாணவராக இருந்த காலத்திலிருந்தே காங்கிரஸில் சேர்ந்து தொண்டாற்றினார். மக்களுக்குத் தொண்டு செய்யும் நோக்கத்தோடு, 1916 - ஸெப்டம்பரில் இவர் தமது டாக்டர் தொழிலைத் துறந்தார். அந்த வருஷத்திலிருந்தே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராக இருந்துவருகிறார்.

ஆந்திர ஜாதீய கலாசாலையை இவர் முன்னுக்குக் கொண்டுவந்தார். 'தேசியக் கல்வி', 'இந்திய நாட்டுத் தேசியம்' முதலிய பல நூல்களை எழுதி, காந்தீயம், சமூக இயல், அரசியல் ஆகிய விஷயங்களில் தமக்குள்ள திறமையை இவர் வெளிப்படுத்தினார். காங்கிரஸ் மகாசபையின் பொன் விழாவின்போது இவர் காங்கிரஸ் சரித்திரத்தை விரிவாக எழுதினார். சமஸ்தான மக்களுக்கு ஒப்பற்ற தொண்டுகள் செய்திருக்கிறார்.

1939 - இல் இவருக்கும் சுபாஷ் போஸுக்கும் காங்கிரஸ் தலைமைக்காகப் போட்டி நடந்தது. இந்தத் தேர்தல் சரித்திரப் பிரசித்தி பெற்றது. இவருடைய தோல்வியை மகாத்மா காந்தி தமது தோல்வி என்று சொன்னார். சுபாஷ் போஸ் ராஜீநாமாச் செய்த பிறகுங்கூட இவருக்குத் தலைவராகும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

1936 - இலிருந்தே இவர் காங்கிரஸ் தலைவராவதற்கு விரும்பினார். இவ்வளவு நீண்ட காலம் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டு நாட்டின் நலனுக்காக உழைத்திருக்கும் பட்டாபி சீதாராமையா, சுதந்தர இந்தியாவில் காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு முதல் முதல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார். நாட்டில் பல சிக்கல்கள் சூழ்ந்திருக்கும் இந்த நிலையில் இவர் தகுந்த வழிகாட்டியாக விளங்குவார்.

ஆதாரம்: கர்மவீர் (ஹிந்தி: 30-10-'48). கண்ட்வா.

தோற்ற டண்டன்

அநேக வருஷங்களுக்குப் பிறகு நடந்தது காங்கிரஸ் தேர்தல். அதுவும் சுதந்தர இந்தியாவில் முதல் தேர்தல். அதில் வென்ருர் ஆந்திரர் பட்டாபி சீதாராமையா. போட்டியிட்ட டண்டன் தோல்வி யுற்ருர், சொற்ப ஓட்டுகளால்.

புருஷோத்தமதாஸ் டண்டன் எப்போதும் பாரத நாட்டுப் பண்பாட்டைப் பலமாக ஆதரிப்பவர். நம் நாட்டு முஸ்லிம்களுங்கூட இந்தப் பண்பாட்டைப் பின்பற்ற வேண்டும் என்று இவர் சொல்லுகிருர். இவர் கர்மவீரர்; உண்மை நெறியிலே தமது வாழ்க்கைப் பாதையை வகுத்துக்கொண்ட யோகி.

மாணவராக இருந்த காலத்திலிருந்தே இவர் அரசியலில் ஈடுபட்டார். 1921 - இல் ஒத்துழையாமை இயக்கத்தில் இவர் தமது வக்கீல் தொழிலைத் துறந்தார். அதற்குப் பிறகு, காங்கிரஸ் தலைவர்களின் முன்னணியில் நின்று, இடைவிடாமல் செயலாற்றியிருக்கிருர்.

இவரும் சிறந்த காங்கிரஸ் தேசபக்தரே; அல்ல என்று யாரும் சொல்ல முடியாது. ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக்கு இவர் தலைவர்; ஐ. மா. சட்டசபைக்கும் தலைவர்; காங்கிரஸ் சார்பில் அரசியல் நிர்ணய சபையின் அங்கத்தினர்.

கொள்கை யளவிலே இவர் என்றுமே காந்தியவாதியாக இருந்ததில்லை. 1934 - இல் பம்பாயில் காங்கிரஸ் மகாசபை கூடியபோது, காங்கிரஸின் லட்சியங்களிலும் நோக்கங்களிலும் சத்தியத்தையும் அஹிம்சையையும் புகுத்த மகாத்மா காந்தி முயன்ருர். அப்பொழுது அரசியல் நீதியை ஆதாரமாகக் கொண்டு டண்டன் அவருடைய கொள்கையை எதிர்த்தார். மகாத்மா தமது தோல்வியை ஒப்புக்கொண்டு நாலணு அங்கத்தினர் பதவியைக்கூட விட்டுவிட்டார். தமது ஒப்பற்ற தியாகத்திஞலும் தவத்திஞலும் டண்டன் 'ராஜரிஷி' என்று அழைக்கப்படுகிருர். ஐக்கிய மாகாணத்து மக்களுக்கு அவரிடம் உள்ளூறப் பயபக்தி உண்டு.

லாலா லாஜபத் ராய் ஸ்தாபித்த 'பீபிள்ஸ் ஸொஸைட்டி'க்கு இவர் தலைவர். ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனத்தை ஒழுங்குபடுத்திக் கட்டுப்பாடான ஸ்தாபனமாக்கி அதை முன்னுக்குக் கொண்டுவந்த முழுப் பெருமையும் இவரைச் சார்ந்தது. ஹிந்தியே அகில இந்திய பாஷையாக இருக்க வேண்டும் என்பது இவருடைய கொள்கை. இந்த விஷயத்தில் இவருக்கும் மகாத்மாவுக்கும் அபிப்பிராய பேதம் பலமாக இருந்தது. அரசியல் நிர்ணய சபையில் அடுத்தபடி வரப்போகிற தேசிய பாஷை விவாதத்தில் இவருடைய இந்தக் கொள்கை வற்புறுத்தப்படும் என்று தெரிகிறது.

ஆதாரம்: தேச தூத் (ஹிந்தி: 24-10-'48), அலாகாபாத்.

யாத்திரைக்காரர்களுக்குச் சத்திரம், சாவடி நடத்துவது நமது பழைய வழக்கம். படைவீரர்களுக்கு அப்படித் தங்கும் இடம் வேண்டாமா?

ராணுவ மடம்

அரசாங்கத்தார் பட்டாளங்களின் சௌகரியத்துக்காகச் செய்த ஏற்பாடுகளில் 'ரெஸ்டு காம்ப்' ஒன்று. 'ரெஸ்டு காம்ப்', 'ரிஸெப்ஷன் காம்ப்', 'ட்ரான்ஸிட் காம்ப்' என்று பலவிதமாக இதைச் சொல்லுகிறார்கள். சாதாரணமாக எல்லோரும் 'ரெஸ்ட் காம்ப்' என்றே வழங்குகிறார்கள். நாம் இதைப் படைவீரர் சத்திரம் என்றோ, ராணுவ மடம் என்றோ சொல்லலாம். தூரப் பிரயாணம் செய்யவேண்டிய படை வீரரைத் தருவித்து, சரியான சமயத்தில் அவர்கள் போகவேண்டிய இடத்துக்கு அவர்களை அனுப்ப ஏற்பாடு செய்வது இந்த மடத்தினர் கடமை.

45 நாள் ரஜாவில் வீட்டுக்குப் போகும் சிப்பாயை வழியில் ஏதாவது ராணுவ மடத்தில் தங்கும்படி நிறுத்திக்கொண்டால், அவன் அங்கே தங்கிய காலம் ரஜாவில் சேர்வதில்லை. அந்தக் காலத்தையும் சேர்த்து வீட்டில் இருந்துவிட்டு வரலாம். ராணுவ மடத்தில் தங்கிய எந்தச் சிப்பாயும், ரெயிலில் இடம் கிடைக்காதோ, ரெயில் தப்பிவிடுமோ என்று பயப்படவேண்டியதே இல்லை. அந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு மடத்தின் அதிகாரிகளைச் சேர்ந்தது.

பெரிய மைதானங்களில் அடித்த கூடாரமே இந்த மடம். கூடாரத்துக்கு உள்ளேயே ஸ்நானபானங்களுக்கும் சாப்பாட்டுக்கும் வசதி உண்டு. கக்கூஸ்களும் உள்ளேயே இருக்கின்றன. போகும் சிப்பாய்களையும் வரும் சிப்பாய்களையும் கணக்கெடுக்கும் காரியாலயம், பண்டங்கள் விற்கும் கடை, எல்லாத் தீனிகளும் சரசமான விலைக்குக் கிடைக்கும் சாப்பாட்டு விடுதி, உடற் பயிற்சிக் கூடம் இந்த எல்லாம் கூடாரத்துக்கு உள்ளேயே அமைந்திருக்கும். சென்ற மகா யுத்த காலத்தில் உலகம் முழுவதும் பெரிய பட்டணங்களிலும் வேறு பல இடங்களிலும் நூற்றுக்கணக்கான ராணுவ மடங்கள் இருந்தன. இவற்றைப்பற்றி எல்லாச் சிப்பாய்களுக்கும் தெரிந்திருக்கும். இவற்றில் வசிக்காத சிப்பாய்கள் நூற்றுக்குப் பதினைந்து பேருக்கு மேல் இருக்கமாட்டார்கள்.

ரங்கூனுக்குப் பக்கத்தில், ஒரு படையில் இருக்கும் ஒரு சிப்பாயை டில்லியை அடுத்த வேறொரு படைக்கு அனுப்பவேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அவனை ரங்கூனில் இருக்கும் ராணுவ

காப்பிரைட்: ஆனந்தவாணி (தெலுங்கு: 25-9-'48), சென்னை.

மடத்துக்கு முதலில் அனுப்புவார்கள். அங்கே இருக்கும் அதிகாரிகள் தங்கள் பொறுப்பில் அவனைக் கப்பல் ஏற்றிக் கல்கத்தாவுக்கு அனுப்புவார்கள். கப்பலிலிருந்து இறங்கியவுடன் கரையில் உள்ள அதிகாரிகள் அவனைக் கல்கத்தாவில் இருக்கும் ஒரு ராணுவ மடத்துக்கு அனுப்புவார்கள். அங்கே இருப்பவர்கள் டில்லியில் இருக்கும் ராணுவ மடத்துக்கு அனுப்புவார்கள். டில்லி மடத்துக்குப் போன பின், அவனுக்கு விடுதலை கிடைக்கும். அங்கிருந்து அவன் தானாகவே தன் படைக்குப் போய்விடுவான்.

ரஜாவில் வீட்டுக்குப் போகிறவர்கள், வீட்டிலிருந்து மறுபடியும் படைக்கு வருகிறவர்கள், ஒரு படையிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் வேறொரு படைக்கு மாறுகிறவர்கள், வைத்தியசாலையிலிருந்து விடுதலை பெற்றுத் தங்கள் படைக்குத் திரும்புகிறவர்கள் இந்த எல்லாரும் ராணுவ மடங்களில் தங்கித்தான் போவார்கள். கப்பல் பிரயாணம் நேர்ந்தால், முந்நூறு நானூறு பேர் சேர்ந்த ஒரு முழுப் படையானாலும் சரி; ஒரே ஒரு வீரனாக இருந்தாலும் சரி; கண்டிப்பாக இந்த ராணுவ மடத்தின் சுகத்தை அநுபவித்துத் தான் தீரவேண்டும். தான் போக வேண்டிய இடத்துக்குப் போக முடியாமல் வழி தவறியவன், இங்கே வந்து அதிகாரிகளிடம் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்; அவர்கள் அவன் போகவேண்டிய இடத்தை ஆராய்ந்து கண்டுபிடித்து அனுப்பிவிடுவார்கள்.

ராணுவ மடத்தில் ஆள் எண்ணிக்கை திடீரென்று அதிகரிக்கும்; திடீரென்று குறையும். இன்று மாலையில் இருநூறு பேர் இருந்த இடத்தில் நாளைக் காலையில் இரண்டாயிரம் பேர் ஜே ஜே என்று நிறைந்து விடுவார்கள்; அடுத்த நாளே ஐந்நூறு பேர் ஆகிவிடலாம்.

இந்த மடங்களுக்கு வரும் சிப்பாய்களிடம் அதிகமாக வேலை வாங்க மாட்டார்கள். சிப்பாய் ஒவ்வொருவனும் தனக்குக் கொடுத்த ஜாகையைத் தானே சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும்; பண்டசாலையிலிருந்து சமையல் கட்டுக்குச் சாமான்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். இந்த வேலைகளுக்குக்கூட இங்கே டிமிக்கி கொடுப்பவர்கள் உண்டு; ஆனாலும் அவர்கள்மேல் நடவடிக்கை எடுப்பதில்லை.

இந்த மடத்தில் இருக்கும் வரையில் சிப்பாய்களுக்குச் சுயேச்சை அதிகம். நினைத்த சமயத்தில் ஊரெல்லாம் சுற்றி வரலாம். முதலில் சில ராணுவ மடங்களில் சிப்பாய்களிடம் இடுப்பொடிய வேலை வாங்கி வந்தார்கள். தலைமை உத்தியோகஸ்தர்களிடம் புகார் செய்த பின்பு அந்தத் தொல்லை ஒழிந்தது.

சென்னை ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருக்கும் ராணுவ மடம் மிகவும் சௌகரியமானதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், நான் பார்த்ததில்லை. டில்லிச் செங்கோட்டைக்கு அருகே இருக்கும் ராணுவ மடத்தைப் பார்த்தபோது, அதைப் போன்ற கோரமான மடம் வேறு எங்கேயும் இருக்க முடியாது என்று நினைத்தேன். கல்கத்தா 78-ஆம் நம்பர் ராணுவ மடத்தில் சப்ளை செய்த சுசிருசியான சாப்பாட்டைப்போல், நான் என்

ராணுவ வாழ்க்கையிலேயே எங்கும் கண்டதில்லை. ரங்கூன் 68-ஆம் நம்பர் மடத்தில் டீ மிக நன்றாக இருக்கும்.

உலகத்தில் எல்லா இடங்களி லும் பரவியிருக்கும் கள்ள மார்க் கெட் இந்த ராணுவ மடங்களிலும் நுழைந்திருக்கிறது. வெகு காலம் சண்டையில் கஷ்டப்பட்டு விடுமுறையில் உற்சாகத்துடன் ஊருக்குக் கிளம்பிய சிப்பாயைச் சில சமயம் இந்த ராணுவ மடத்தில் மாதக் கணக்கில் நிறுத்திவிடுவார் கள். ஆனால் ஆஸ்பத்திரியில் வியாதி யாகப் படுத்திருந்து மறுபடியும் சண்டைக்குத் திரும்பும் துப்பாக்கி வீரன் இங்கே சில நாள் ஆயாசம் தீரத் தங்கிவிட்டுப் போகலா மென்று ஆசையுடன் வருவான்; வந்த மறுநாளே அவனைப் படைக்கு அனுப்பிவிடுவதும் உண்டு.

1944-ஆம் வருஷக் கடைசியில் அஸ்ஸாம் மாகாணத்தில் கௌஹாத்தி என்னும் ரெயில்வே ஸ்டேஷனில் ஓர் இளைஞனைச் சந் தித்தேன். அவன் இந்த ராணுவ மடங்களில் தான் பெற்ற ருசிகர மான அநுபவத்தை என்னிடம் வர்ணித்தான். அவன் பஞ்சாபில் ஒரு டெப்போவில் இருந்தானாம். அங்கேயிருந்து அஸ்ஸாமில் இருக் கும் ஒரு படைக்கு அவனை அனுப்பி னார்கள். வழியில் கயா ராணுவ மடத்துக்கு வந்தான். அங்கே சுமார் பதினைந்து நாட்கள் தங்கிய பிறகும், அவன் குறிப்பிட்ட படை இருக்கும் இடம் அந்த அதிகாரிகளுக்குத் தெரியவில்லை. அதனால் அவனை அஸ்ஸாமைச் சேர்ந்த கோமில்லா மடத்துக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கேயும் அவன் போகவேண்டிய படை எவருக்கும் தெரியவில்லை. அதனால், ஒவ்வொரு மடமாக 'எனக்கு வேண்டாம் பூசணிக்காய்' என்ற மாதிரி அவனை மாற்றி மாற்றி அனுப்பிக் கொண்டே யிருந்தார்கள். வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் உள்ள பல மடங்க ளில் இப்படியே ஒன்றரை வருஷ காலம் அவன் சுக வாசம் செய் தான். சில மடங்களுக்கே திரும்பத் திரும்ப இரண்டு மூன்று முறை போனதும் உண்டு. நான் பார்த்த போது ஒரு ராணுவ மடத்தி லிருந்து விடுதலை பெற்றுத் தொண் ணூறு மைல் தூரத்தில் உள்ள தன் படைக்குப் போவதாகச் சொன்னான். "இவர்கள் எத்தனை மடங்களுக்கு என்னைத் தூக்கினால் என்ன! எனக்கொன்றும் நஷ்ட மில்லை. எனக்கு என் சம்பளம் வந்துவிடுகிறது. அது போதும்" என்று அவன் சொன்னான். அவ னுடைய மாதச் சம்பளம் இருநூறு ரூபாய்க்கும் அதிகம். பட்டாளத்தில் சேர்ந்து இரண்டு வருஷங்களுக்கு மேலே ஆன பின்பும், அரசாங்கம் அவனிடம் வேலை வாங்க முடிய வில்லை!

ரங்கூன் ராணுவ மடத்தில் நடந்த ஒரு வேடிக்கைச் சம்ப வமும் குறிப்பிடத் தகுந்தது. கல்கத்தா ராணுவ ஆஸ்பத்திரியி லிருந்து பர்மாவில் இருக்கும் ஒரு படைக்குப் போகவேண்டிய ஒரு சிப்பாய், ரங்கூனைச் சேர்ந்த ராணுவ மடத்துக்குப் போனான். ஒரு மாதத்துக்கு மேலாக அங்கே தங்கியுங்கூட அதிகாரிகள் தன்னை அனுப்பாததால் ஒரு நாள் அவன் அதிகாரியிடம் விண்ணப்பித்துக் கொண்டான்.

அதற்கு அதிகாரி, "இதோ பார்; உன் படை இருக்கும் இடம் எங்க ளுக்குத் தெரியவில்லை. தேடிக் கொண்டிருக்கிறோம். தெரிந்த

வுடனே உன்னே அனுப்பிவிடுகி ரேம்'' என்ருர்.

சிப்பாய், ''என் படை மாந் தளேக்குப் பக்கத்தில் இருப்ப தாகக் கேள்விப்பட்டேன்'' என்ருன்.

உடனே அதிகாரி சற்று யோசித்து அவனே மாலே மூன்று மணி சுமாருக்கு வரச் சொன்னுர்.

அப்படியே மாலேயில் அவன் அதிகாரியைச் சந்தித்தான். சிப் பாய்க்கு அதிகாரி 15 நாள் சாப் பாட்டுக்கு வேண்டிய பண்டங்களே யும் முக்கியமாக வேண்டிய காகி தங்களேயும் கொடுத்தார். சிப்பாய் ஸல்யூட் அடித்துவிட்டுப் புறப் பட்டான். அதிகாரி அவனேக் கூப் பிட்டு, ''மாந்தளேயில் அந்தப் படை இல்லாவிட்டால் சீக்கிரத்திலேயே இங்கே திரும்பிவந்துவிடு'' என்று உத்தரவிட்டார்.

மாந்தளேயில் தன் படை இல்லவே இல்லே என்பது அந்தச் சிப்பாய்க்கு முன்பே தெரியும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள நினைத்த அவன் பர்மாவில் பார்க்க வேண்டிய விசேஷமான இடங்களேயெல்லாம் பார்த்தான். தன் சொந்தக்காரர்களேயும் பார்த் தான். மெல்லப் பதினேந்து இருபது நாட்களில் தீர்த்த யாத்தி ரையை முடித்துக்கொண்டு பழைய மடத்துக்கே வந்து சேர்ந்தான். மாந்தளேயில் தன் படை இருப்ப தாகத் தெரியவில்லே என்று அதி காரியிடம் விண்ணப்பித்தான்.

வேறு வழி இல்லாததால் அவனே அங்கேயே வைத்துக் கொண்டார்கள். ஒரு மாதம் சென்ற பின் மடத்தின் தலேவர் சிப்பாயை அழைத்து, ''உன் படை இன்னும் பத்து நாளில் இங்கே வருகிறது. அந்தப் படையும் இங்கே யுள்ள படையும் சேர்ந்து இந்தியா வுக்குத் திரும்பப் போகின்றன'' என்று தெரிவித்தார்.

அவ்விதமே தன் படை வந்த தும் அதில் சேர்ந்துகொண்டு அவன் தன் தாய்நாடு திரும்பினுன்.

படைவீரர் தங்கும் இந்த ராணுவ மடங்களில் இப்படிப் பல வேடிக் கைகள் நடப்பதுண்டு.

காசு கரையுமா?

பற்பல 'ஆஸிட்' களின் குணதிசயங்களேயும் மாணவர் களுக்கு விளக்கிக்கொண் டிருந்தார் கெமிஸ்ட்ரி புரொபஸர்.

''இப்போது பாருங்கள். இதோ இந்த வெள்ளிக்காசை, இந்தக் கண்ணுடிக் குவளேயில் உள்ள 'ஆஸிட்'டில் போடப் போகிறேன். காசு கரையுமா?''

''கரையாது, ஸார்'' என்று சட்டென்று சொன்னுன் ஒரு மாணவன்.

''ஏன் கரையாது? அப்படியானுல், வகுப்பில் உள்ள மற்ற மாணவர்களுக்கு நீயே அதன் காரணத்தை விளக்கிச் சொல்'' என்ருர் புரொபஸர்.

''ஏனென்ருல், அது கரையுமானுல், அதை நீங்கள் இந்த 'ஆஸிட்'டில் போட மாட்டீர்கள்'' என்று மாணவன் சொன்னுன்.

—'பொலிடிக்கன்.' (கோபன்ஹேகென்)

உன்னத இலக்கியம் உலகெலாம் பரவும் என்பதற்கு, நம் மகாகவி காளிதாசனின் சகுந்தலை நாடகம் ஒரு சான்ருகும்.

ஹங்கரியில் சகுந்தலை

வி. கே. மதுர்

சகுந்தலை-துஷ்யந்தன் கதை மகாபாரதத்தில் காணப்படுகிறது. அதை ஆதாரமாகக் கொண்டு 'அபிஜ்ஞான சாகுந்தலம்' என்ற நாடகத்தை மகாகவி காளிதாசன் எழுதினன். இந்தக் கதை இந்திய இலக்கியத்திலேயே மிகவும் பிரசித்தம். ராமாயணம், நள-தமயந்தி கதை இவற்றைப் போலவே சகுந்தலையின் கதையும் பாரத நாட்டின் மேதையை விளக்கும் உன்னத சிருஷ்டி. அது வெகு காலமாக நம் நாட்டு மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து வந்திருக்கிறது; வெளிநாடுகளிலும் பரவியிருக்கிறது. வெகு தூரத்தில் இருக்கும் ஹங்கரி நாட்டுக்கும் இந்தக் கதை சென்றிருக்கிறது. அங்கே நாடோடி ஜனங்கள் சிலர் வாழ்ந்து வருகிருர்கள். அவர்கள் பாடியும் ஆடியும் உல்லாசமாகப் பொழுது போக்குபவர்கள். சகுந்தலையின் கதையை ஒட்டிய நாடோடிப் பாடல் ஒன்று அங்கே உண்டு. கி. பி. 1458-இல் மத்தியாஸ் கோர்வினஸ் ஹூன்யாதி என்று ஓர் அரசன் இருந்தான். அவனது இளம் பிராயத்தில் நடந்ததாக இந்தக் கதை வழங்கி வருகிறது. இதை வைத்துக்கொண்டு மிஹிலி வாரோஸ்மார்த்தி என்பவர் பிரபலமான கவிதை ஒன்று எழுதியிருக்கிருர். கதை இதுதான்:

“அரசன் வேட்டையாடச் செல்லுகிருன். ஒரு மானைப் பார்த்ததும் அதைத் துரத்திக் கொண்டே காட்டில் நுழைகிருன். இளம் பெண் ஒருத்தி ஒரு வண்ணத்துப் பூச்சியைப் பிடிக்க ஓடி வருகிருள். அவளைப் பார்த்தவுடன் அரசன் மானை மறந்து அந்த அழகியைத் தொடர்ந்து செல்லுகிருன். அவள் வண்ணத்துப் பூச்சியைப் பிடிக்கும் அதே சமயம் அரசனும் அவளை அணைத்துக் கொண்டு முத்தமிடுகிருன். பிறகு அவள் அரசனைத் தன் தந்தையின் வீட்டுக்கு அழைத்துச் செல்லுகிருள். ஆனாலும் அவன் அந்த நாட்டு அரசன் என்று அவளுக்குத் தெரியாது.

“அரசன் அங்கே தங்கிச் சில நாள் காட்டின் அழகை ரசித்துக் கொண்டே அவளோடு உல்லாசமாகப் பொழுது போக்குகிருன். ஆனாலும் எத்தனை நாள் அப்படிக் காலந் தள்ள முடியும்? அரசாங்க அலுவல்கள் இல்லையா? அவற்றைக் கவனிக்க நாட்டுக்குத் திரும்பிச் செல்லுகிருன். லோங்கா என்ற அந்த அழகியிடம் விடை பெற்றுக்கொள்ளும்போது, தலைநகரமான புடாபெஸ்டுக்கு வரும்படி அவளை அழைக்கிருன். அவளும் அவள் தந்தையும் எப்போது விரும்பினாலும் சரி, ராஜ சபைக்கு வந்தால் தன்னைக் காணலாம் என்று சொல்லிவிட்டுப் போகி

காப்பிரைட் : மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம் : நவம்பர் '48), கல்கத்தா.

ளுன். லோங்கா அரசனை ஓர் அழகிய வேட்டுவன் என்று எண்ணி, அவனிடம் மயல் கொண்டிருந்தாள்.

"பின்னுல் ஒரு நாள் அவள் தன் தந்தையிடம் போய்த் தன்னை ராஜ சபைக்கு அழைத்துச் செல்லும்படி வேண்டுகிருள். அவரும் சம்மதிக்கிருர். பிறகு இருவரும் புறப்பட்டுத் தலைநகரை அடைகிருர்கள். அதே சமயம் அவர்களுக்கு எதிரே அரசன் மத்தியாஸே ஒரு குதிரைமீது பவனி வருகிருன். குடிகள் எல்லோரும் அவனுக்கு மரியாதை செலுத்துகிருர்கள். காட்டில் தங்கள் விருந்தாளியாக வந்து தங்கின வேடன் வேறு யாரும் அல்ல, அரசனே என்ற விஷயம் அப்போதுதான் மகளுக்கும் தந்தைக்கும் தெரிகிறது. அரசனை ஏழை அணுக முடியுமா? லோங்கா அப்படியே மூர்ச்சையாகி விடுகிருள். அரசனைப் பேட்டி காண முடியவில்லை. தந்தை அவளைத் தாங்கிக் கொண்டு மறுபடியும் காட்டுக்கே திரும்புகிருர். இலையுதிர்காலம் வருகிறது; பறவைகள் வேறிடம் தேடிச் செல்கின்றன. அழகி லோங்காவும் இந்த உலகத்தை விட்டு நீங்கி, தான் ஓடி விளையாடிய அந்தக் காட்டு மரங்களின் கீழேயே நித்திய சாந்தி அடைகிருள்." இது எச். டார்னேட் கோனெர் எழுதிய 'ஹங்கரி' என்ற புத்தகத்திலிருந்து எடுத்தது.

இந்த நாடோடிக் கதை மொத்தத்தில் சகுந்தலையின் சரித்திரத்தையே அடிப்படையாகக் கொண்டது என்பதில் சந்தேகமில்லை. ஆனுல், ஒரு விஷயத்தில் மாறுபாடு இருக்கிறது. நம் சகுந்தலையின் கதை இப்படித் துன்பத்தில் முடியவில்லை. கதையின் மற்ற விவரங்களையெல்லாம் மகாபாரதக் கதையைவிடக் காளிதாசனின் 'அபிஜ்ஞான சாகுந்தல'த்தை ஒட்டியே ஹங்கரியக் கவி எழுதியிருக்கிருர்.

இந்தச் 'சாகுந்தல'க் கதை எப்படி இங்கிருந்து ஹங்கரிக்குப் போயிற்று? கி. பி. 14, 15-ஆம் நூற்ருண்டுகளில் இங்கிருந்து சில நாடோடி ஜாதியார் புறப்பட்டு ஐரோப்பாவுக்குப் போய்ப் பல இடங்களில் குடியேறினுர்கள். அப்போது அவர்களே இந்தக் கதையையும் அங்கே பரப்பியிருக்கலாம். ஹங்கரி, ருமேனியா இந்த இரண்டு நாட்டினரும் அந்த இந்திய நாடோடிகளிடமிருந்து அவர்களின் அபூர்வமான பழக்க வழக்கங்களையும் ஆடல் பாடல்களையும் நடையுடை பாவனைகளையும் கற்றுக்கொண்டிருப்பார்கள். குட்டிக் குதிரைமேலும் மாட்டு வண்டியிலும் நிதானமாக நாடு விட்டு நாடு சென்ற இந்தப் பூர்விக இந்திய மக்கள், நம் புராணக் கதைகளையும் கூடவே கொண்டு போனது ஓர் அதிசயம் அல்ல. இந்த விஷயத்தைச் சற்று ஆராய்வோமானுல், நம்முடன் தொடர்பு இல்லாத வெளிநாட்டு மக்களிடையே நம் பூர்விகக் கலாசாரத்தின் சில அம்சங்கள் சற்று உருமாறி வழங்குவதை நாம் காணலாம்.

காலமும் வாழ்வும்

இறந்த காலத்தை விட்டு வருங்காலத்தைப்பற்றியே நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஏனென்ருல், நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்நாளின் மீதிப் பகுதியை வருங்காலத்திலேயே கழிக்கப் போகிறோம். —'வைடன் நியூஸ்'

இந்தக் காலத்துக் கொள்ளைக்காரர் மக்களை மிரட்டுகிறார்கள். அந்தக் காலத்திலே......

நவாபை மிரட்டிய கொள்ளைக்காரர்

குமுதநாத் மல்லிக்

வங்காள தேசம் எவ்வளவோ இன்னல் அநுபவித்திருக்கிறது. அதன் நீர் வளமும் நில வளமுமே இதற்குக் காரணம். கி. பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் மகாராஷ்டிரத்திலிருந்து 'வர்க்கிகள்' என்னும் ஒரு கொள்ளைக் கூட்டத்தார் வங்காளத்தில் வந்து செய்த உபத்திரவம் கொஞ்ச நஞ்சமல்ல. அப்போதுதான் ஆங்கிலேயர் வியாபார நிமித்தம் கல்கத்தாவுக்கு வந்திருந்தார்கள். அவர்கள் இந்தக் கொள்ளைக் கூட்டத்தாரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அந்த நகரின் கிழக்கு, வடக்கு, தெற்குப் பக்கங்களில் தோண்டிவைத்த அகழிகளை இன்றும் காணலாம்.

நவாபு ஆலிவர்த்தியின் ஆட்சிக் காலத்தில்தான் வர்க்கிகள் தொல்லை அதிகமாக இருந்தது. பல தடவை அவர்களோடு அவன் சண்டையிட்டுத் தோற்றான். கடைசியாக, அவர்களுக்குச் 'சௌத்' (ராஜாங்க வருமானத்தில் கால்பங்கு) தருவதாக ஒப்புக்கொண்டு அவர்களை ஒரு விதமாக நாட்டை விட்டுக் கிளப்பினான். எப்போதாவது அதைக் கொடுக்கத் தவறினால் குடிகள்பாடு ஆபத்துத்தான். மறுபடியும் வர்க்கிகள் ஈவிரக்கம் இல்லாமல் கொள்ளையும் கொலையும் புரிய ஆரம்பித்துவிடுவார்கள்; ஊரைக் கொளுத்தவும் பெண்களைக் கற்பழிக்கவுங்கூடத் தயங்கமாட்டார்கள். இப்போதும் கிராமாந்தரங்களில் குழந்தைகள் தூங்காமல் தொந்தரவு செய்தால்,

"கொள்ளைக்கார வர்க்கி அதோ!
கண்ணை மூடு, குழந்தாய்!
கிள்ளை வந்து பயிரை அழிக்கக்
கிஸ்தி எப்படித் தருவோம்?"

என்று பழைய பாட்டைப் பாடித் தாலாட்டுவது வழக்கம்.

வர்த்தமான், நதியா ஜில்லாக்களில்தான் அவர்கள் அதிகக் கொடுமை இழைத்தார்கள். அந்த நாளில் ஹூக்ளி அவர்கள் பிரதான வாசஸ்தலம். நவாபு ஆலிவர்த்தி ஒரிஸ்ஸாவை ஜயித்து விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்போது, 'கொள்ளைக்காரத் தலைவனான ரகுஜி போன்ஸ்லேயின் சேனாதிபதி பாஸ்கர பண்டிதன் 40,000-பேர் அடங்கிய குதிரைப் பட்டாளத்துடன் வங்காளத்தைச் சூறையாட வருகிறான்' என்ற செய்தி அவனுக்கு எட்டியது. உடனே, அவர்களைத் தடுத்து நிறுத்த ஏற்பாடுகள் செய்தான். வர்த்தமானுக்கு அருகில் இரண்டு சேனைகளும் சந்திப்பதற்குள் அந்த நகரை வர்க்கிகள் சுடுகாடாக்கி விட்டார்கள். இருவருக்கும் சண்டை மூண்டது. எவ்வளவு தொகை கொடுப்பதாகச் சொல்லியும் கொள்ளைக்காரர்கள் கேட்கவே யில்லை. ஆகையால், நவாபு போரில்

மூலம்: தௌசாதி (வங்காளம்: 1948 ஆண்டு மலர்), கல்கத்தா.

மும்முரமாக ஈடுபட்டான். பாஸ்கர பண்டிதன் இனிமேல் காலங்கடத்தினல் தோற்றுவிடுவோம் என்று அறிந்துகொண்டான். திடீரென்று பின் வாங்குவதுபோல் பாசாங்கு செய்தான். நவாபின் சைனியம் சற்று ஏமாந்திருந்த சமயம் முன்னேக்கிப் பாய்ந்தான். அதற்குமேல் நவாபு என்ன செய்வது?

வர்க்கிகள் நேராகக் காடோவா போய்ச் சேர்ந்தார்கள். அங்கே இருந்த தானியக் களஞ்சியத்தைப் பிடித்துக்கொண்டார்கள். மழைக் காலம் நெருங்கவே பாஸ்கர பண்டிதன் அங்கேயே தங்குவதென்று தீர்மானித்தான். அங்கிருந்தபடியே வர்க்கிகள் அக்கம் பக்கம் உள்ள இடங்களில் கொள்ளையடித்து ஒரு கோட்டையைக்கூடப் பிடித்துக்கொண்டார்கள். குடிமக்கள் பயந்து பல திக்குகளிலும் சிதறி ஓடி ஒளிந்தார்கள். இப்படியே மேற்கு வங்காளத்திலுள்ள பல ஜில்லாக்களைச் சுடுகாடாக்கி விட்டார்கள். அப்போதுதான் ஆங்கிலேயர் நவாபின் அநுமதி பெற்றுக் கல்கத்தாவில் உள்ள தங்கள் கோட்டையைப் பலப்படுத்திக் கொண்டார்கள்.

நவாபு முதலில் ஏமாந்தாலும் பின்னல் சும்மா இருக்கவில்லை. காடோவாவை முற்றுகையிட்டான். 1742 - இல் கொள்ளைக்காரர்களை விரட்டி யடித்தான். பாஸ்கர பண்டிதனும் அவர்களோடு ஓட்டம் பிடித்தான்.

1743 - இல் கொள்ளைக்காரத் தலைவன் ரகுஜி தானே பெருத்த சேனையுடன் வங்காளத்தைச் சூறையாட வந்துவிட்டான். அதே சமயம் மொகல் பாதுஷாவின் அநுமதியுடன் பாலாஜி ராவ் என்ற மராட்டியனும் பாக்கியாக நின்ற 'சௌத்' வசூலிக்க, பிஹார் வழியே முர்ஷிதாபாத் வந்து சேர்ந்தான். வழக்கம்போல் அவன் சேனையில் இருந்தவர்களும் கொள்ளையில் ஈடுபட்டார்கள். இப்படி இரண்டு பக்கத்திலிருந்தும் தாக்குதல் ஏற்படவே நவாபு உடனே பாலாஜியிடம் பாக்கியைச் செலுத்தி அவனுக்கு ஏராளமான காணிக்கைகளையும் கொடுத்தான். அப்போது அவர்களுக்குள் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி நவாபுக்குப் பாலாஜி ஒத்தாசை செய்ய வேண்டும். இதைக் கேட்டதும் ரகுஜி ஓட்டம் பிடித்தான்.

அடுத்த வருஷமும் ரகுஜி சும்மா இருக்கவில்லை; பாஸ்கர பண்டிதன் தலைமையில் வர்க்கிகளை மறுபடியும் வங்காளத்துக்கு அனுப்பி வைத்தான். ஆனல் இந்தத் தடவை நவாபு எப்படியோ தந்திரமாகப் பாஸ்கரனைத் தன் கூடாரத்துக்கு வரவழைத்துக் கொன்றுவிட்டான். வர்க்கிக் கூட்டம் சிதறுண்டு ஓடியது. இதற்குப் பழி வாங்குவது என்று முடிவு செய்தான் ரகுஜி. தானே வங்காளத்தின்மேல் படையெடுத்தான். அப்போது அவன் செய்த அக்கிரமம் கொஞ்ச நஞ்சமல்ல.

நவாபுக்கு ஆபத்தின் மேல் ஆபத்தாக வந்தது. அந்தச் சமயத்திலேயே அவனுடைய படைத்தலைவன் ஒருவன் அவனுக்கு எதிராகக் கிளம்பினன்; பாட்னவைப் பிடித்துக் கொண்டான். ஆனலும் நவாபு அவனைக் கொன்று அந்தக் கிளர்ச்சியை அடக்கிவிட்டான். அது முடிந்ததும் முடியாததுமாக ரகுஜியுடன் சண்டை போடநேர்ந்தது. நவாபின் சைனியம் மூர்த்தன்னியமாகப் போரிடவே வர்க்கிகள் முர்ஷிதாபாத்தை விட்டு ஓட ஆரம்பித்தார்கள்.

வருகிற வழியில் ரகுஜியின் மகன் ஜான்ஜி தலைமையில் சில வர்க்கிகள் மேஹேர்பூர் ஜமீன்தாரின் மாளிகையைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர் அதற்கு முன்னமே இதை அறிந்துகொண்டார். பொன்னையும் மணியையும் மற்ற உடைமைகளையும் எடுத்துக் கொண்டு குடும்பத்துடன் தம்முடைய நண்பரான ராமராம் மல்லிக்கின் மாடியாரி ஜமீனில் அடைக்கலம் புகுந்தார். இந்தச் செய்தியைக் கேட்டதும் வர்க்கிகளின் தலைவனுக்குக் கோபம் பொங்கியது. அவன் நேராக மாடியாரி ஜமீனுக்குப் புறப்பட்டான். அவனைத் தொடர்ந்து மற்றக் கொள்ளைக்காரர்களும் குதிரையில் சென்றார்கள். ஆனால் அவர்கள் வருவதற்கு முன்னமே ராமராம் மல்லிக் தம் நண்பரையும் அவர் குடும்பத்தாரையும் உடைமைகளையும் எங்கோ மறைவான இடத்துக்கு அனுப்பிவிட்டார். தாம் மட்டும் கடவுள் தியானத்தில் ஈடுபட்டு மெய்ம்மறந்திருந்தார். வர்க்கிகள் அவர் வீட்டை வளைத்துக்கொண்டார்கள். அவரை எவ்வளவு கேட்டும் அவர் பதில் சொல்லவில்லை. அவரைப் பலவிதமாகத் துன்புறுத்திப் பார்த்தார்கள். அப்படியும் அவர் பேசாதிருக்கவே ஒரு பாதகன் அவர் கையை வெட்டிவிட்டான். அப்போதும் அவர் கலங்காமல் பகவானைத் தியானித்தபடி இருந்தார். அதற்குள் நவாபின் சைனியம் அங்கே வந்துவிடவே வர்க்கிகள் ஓட்டம் பிடித்தார்கள். அதோடு அவர்கள் தொல்லை தீர்ந்தது.

ராமராம் மல்லிக் உடனே இறந்துவிடவில்லை. சில நாள் கழித்து ஜான்னவி நதிக்கரையில் தம் சுற்றத்தாரும் நண்பர்களும் புடைசூழ, தியானம் செய்தபடியே சமாதியானார்.

அவர் யுக்தி

கிடைத்த மனை போதவில்லை. அவர் என்ன செய்வார், பாவம்? மனைக்கேற்ற வீட்டைக் கட்டிவிட்டார்!

—'உத்யம'

தொழில்கள் வளர, பணம் முடங்காமல் புழங்க வேண்டும். அதற்கு உதவும் சாதனம் என்ன?

பாங்கித் தொழில்

சைலேன் எச். தேசாய்

பாங்கித் தொழில் நம் நாட்டில் சமீப காலத்தில் ஏற்பட்டது. ஆனாலும், லேவாதேவித் தொழில் இங்கே வெகு காலமாக இருந்து வருகிறது. நாணயமாற்று, குறைந்த தவணைக்குக் கடன் கொடுத்தல், விவசாய அபிவிருத்திக்காக முன் பணம் தந்து உதவுவது இவை யெல்லாங்கூட அந்த நாளில் உண்டு. அப்படி இருந்தும் இப்போது நம் ஜனங்கள் பாங்கி விஷயத்தில் அக்கறை செலுத்தாமலிருப்பது ஆச்சரியமே!

இந்த நாளைய பாங்கித் தொழிலில், பழைய லேவாதேவி முறையில் இல்லாத ஒரு விசேஷம் உண்டு. வர்த்தகமோ வேறு ஏதாவது தொழிலோ நடத்தப் பாங்கியில் (எப்போது வேண்டுமானாலும் பயன்படும்படி) பணம் போட்டு வைக்கலாம். பழைய லேவாதேவி முறைக்கும் பாங்கித் தொழிலுக்கும் முக்கியமான வித்தியாசம் இது தான். அப்படிப் போட்ட பணத்தைத் தகுந்த வழியில் உபயோகித்துப் பாதுகாப்பதே பாங்கி அதிகாரியின் வேலை. ஆதிகாலத்தில் இந்தியாவில் தங்கக்கட்டியாகவோ, பூஸ்திதியாகவோ, நகைநட்டாகவோ சேமித்து வைக்கும் வழக்கம் இருந்தது உண்மையே; ஆனாலும் இதைப் போன்ற முறை எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படிச் சேமித்து வைத்தது அந்தக் காலத்துக்கு ஏற்ற முறையே. அந்த நாளில் சமுசாரிகள் என்றால் நிலம் நீர் உடைய குடியானவர்கள் என்று தான் அர்த்தம். அவர்கள் பிரியாமல் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். எப்போது வேண்டுமானாலும் கையிலுள்ள தங்கத்தையோ நகைநட்டையோ விற்றுப் பணமாக்கிவிட முடியும். சமீபத்தில் கூட, மகாயுத்தத்தின்போது அரசாங்கத்தின்மேலும் வியாபாரத்திலும் நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டு நாட்டுப்புறத்து மக்கள்-ஏன், படித்தவர்கள்கூட - இப்படிச் சேமித்து வைத்தது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆதிநாளிலிருந்து நம்மிடம் படிந்துவிட்ட வழக்கம் அது; திடீரென்று எப்படிப் போய்விடும்? ஆனால் இப்போது கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்ததெல்லாம் போய்விட்டது; வியாபார அபிவிருத்தியும், மதப்பற்றற்ற அரசியலும் ஏற்பட்டுவிட்டன. நாகரிகம் முற்றிவிட்டது; வாழ்க்கை முன் போல் ஊர்ந்து செல்லவில்லை. இந்த நிலையில் பழைய முறையைப் பின்பற்றுவதால் யாதொரு பலனும் இல்லை; இன்னும் கேட்டால் அப்படிச் செய்வது ஆபத்தே.

பாங்கித் தொழிலைப்பற்றி ஜனங்கள் அசிரத்தையாக இருப்பதற்குக் காரணம் இராது போகவில்லை. நம்

காப்பிரைட்: இந்தியா (ஆங்கிலம்: 31-10-'48), பம்பாய் 1.

நாட்டு வர்த்தகர்கள், பாங்கிக்காரர்கள், தொழில் நடத்தும் முதலாளிகள் இவர்களெல்லாம் பொது ஜனங்களின் நன்மையையோ தேசத்தின் நன்மையையோ கவனிப்பதில்லை. இப்படி இருந்தால் ஜனங்கள் என் இவர்களோடு ஒத்துழைப்பார்கள்? அடிக்கடி பாங்கிகள் கவிழ்ந்து போகின்றன; பாங்கி நிர்வாகம் முறைப்படி நடப்பதில்லை. இதனால் ஜனங்களுக்கு அவநம்பிக்கை ஏற்படுவது இயற்கையே. ஆனாலும் பாங்கிகள் இருக்கவேண்டியதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்து அவைகளை ஆதரித்தால் நன்மையே உண்டாகும். இல்லாவிட்டால் பொருளாதாரத் துறையிலோ புனருத்தாரண விஷயத்திலோ என்ன செய்தாலும் பயன் இல்லை.

தவிர, பாங்கிகளைப்பற்றிச் சில தப்பு அபிப்பிராயங்களும் பொது ஜனங்களிடையே இருந்து வருகின்றன. சாதாரணமாக ஒருவன் என்ன நினைக்கிறான்? 'நாம் போடுகிற பணம் பாங்கி இரும்புப் பெட்டியில்தானே தூங்கப் போகிறது; அதை வைத்துக் கொண்டுதானே பாங்கிக்காரர்களும், வியாபாரமும் கொடுக்கல் வாங்கலும் நடத்தப்போகிறார்கள்?' என்றுதான் எண்ணுகிறான். அதனால் கையிலுள்ள ரொக்கத்தை அப்படியே பத்திரப்படுத்துகிறான்; இல்லாவிட்டால் நிலத்தின்மேலோ நகைநட்டின்மேலோ போடுகிறான். தான் பாங்கியில் போடும் பணம் மற்றத் தொகைகளோடு சேர்ந்து பெருந் தொகையாகி வர்த்தகமும் மற்றத் தொழில்களும் நடத்த உதவியாக இருக்கிறது என்றோ, அதனால் நாட்டுக்கும் தனக்கும் சுபிட்சம் ஏற்படுகிறது என்றோ அவன் உணர்ந்தால்தானே? பாங்கியில் பணம் போட்டு வைத்தால் எவ்வளவோ சௌகரியம் உண்டு. வீட்டில் பெட்டியிலே பூட்டிவைத்தால் அது கிடைக்குமோ? இது அவனுக்குத் தெரிகிறதில்லை. தான் போடும் பணத்தைப் பாங்கிக்காரர் வீண் விரயம் செய்வதாக அவனுக்கு அபிப்பிராயம். சில பாங்கிகளில் அப்படி நடந்திருக்கலாம்; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் சரியான நிர்வாகத்தின்கீழ் நடக்கும் பாங்கியில் அப்படிச் செய்யமாட்டார்கள். யோக்கியமான முறையில், ஏதாவது வியாபாரத்தில் போட்டதனாலோ, முன்பணம் கொடுத்து உதவியதனாலோ கிடைத்த மொத்த வருமானத்திலிருந்துதான் செலவுக்குரிய தொகையை எடுத்துக் கொள்வார்கள். பாங்கியில் பணம் போடுகிற விஷயத்தில் எவரும் தம் சொந்த விருப்பு வெறுப்புக்கோ தப்பு அபிப்பிராயத்துக்கோ இடந்தரக்கூடாது.

பாங்கிகளேகூடத் தப்பு அபிப்பிராயத்தை வளர்க்கின்றன. மூலதனமும், டெபாசிட் தொகையும் அதிகமாக இருந்தால்தான் நல்ல பாங்கி என்று நினைக்கும்படி விளம்பரம் செய்வதைத்தான் குறிப்பிடுகிறேன். டெபாசிட்டும் மூலதனமும் அதிகமாக இருந்தால் மட்டும் போதாது; மொத்த வருமானம் எவ்வளவு, ஒதுக்கி வைக்கப்பட்ட தொகை எவ்வளவு, செலவினம் எவ்வளவு என்று பார்க்கவேண்டும். சின்ன பாங்கியாக இருந்தாலும் நல்ல நிர்வாகத்தின் கீழ் நடக்கலாம். ஏராளமான நிதி உடைய பெரிய பாங்கியாக இருக்கலாம்; அதற்குப் பெரிய பெரிய மனிதர்களும் டைரக்டர்களாக இருக்கலாம்; ஆனாலும் நிர்வாக ஊழல் அதில் இருக்கக்கூடும்.

நம் நாட்டில் பொது ஜனங்களுக்கு எப்போதுமே திகில் அதிகம். ஏதாவது ஒரு வதந்தி கிளம்பினாலும் போதும்; அதற்கு ஆதாரம் உண்டா என்றுகூடப் பார்க்கமாட்டார்கள். தாங்கள் கட்டின பணத்தை வாங்க உடனே பாங்கிக்கு ஓடுவார்கள். அதைப் பார்த்து இன்னும் பல பேர் ஓட, இப்படி ஒரே அமர்க்களப்படும். இது மிகவும் தவறு. விஷயம் அப்படி இராவிட்டாலும் ஏராளமான பேர் வந்து கேட்பதால் நிஜமாகவே நெருக்கடி ஏற்பட்டுவிடலாம். இது மற்றப் பாங்கிகளையும் பாதிக்கும். கடைசியில் யாருக்குக் கஷ்டம்? ஜனங்களுக்குத்தான். தீர யோசித்துப் பணம் போட்டபிறகு இந்தமாதிரி வதந்திகளை நம்புவதோ, இதைப் பற்றியே எண்ணிக்கொண் டிருப்பதோ வீண்.

நம் நாட்டில் பாங்கிகள் விருத்தியாவதற்கு, ஜனங்களிடையே அதைப்பற்றிப் பிரசாரம் செய்வது அவசியம். சும்மா ஒவ்வோர் ஊரிலும் கிளைக் காரியாலயங்களை ஏற்படுத்தி விளம்பரம் செய்வதோடு காரியம் முடிந்தது என்று எண்ணிவிடக் கூடாது. ஒழுங்கான முறையில் பாங்கியில் பணம் போடுவதனால் உண்டாகும் நன்மைகளை எடுத்துச் சொல்லிப் பொது ஜனங்களின் மனத்தைக் கவரவேண்டும். இப்போது நாட்டில் ஜனங்களிடம் சேமிப்புப் பணம் எவ்வளவோ வீணாகக் குவிந்து கிடக்கிறது. அதையெல்லாம் திரட்டித் தொழில்களை விருத்திசெய்து நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்த வேண்டும். பாங்கித் தொழில்மட்டும் இங்கே நன்றாக நடந்திருந்தால் பணவீக்கத்தினால் அரசாங்கத்துக்கு இத்தனை தொல்லை ஏற்பட்டும் இராது; அரசாங்கமும் கட்டாயச் சேமிப்புத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்திராது. வெளிநாட்டுப் பாங்கிகள் இந்த விஷயத்தில் டெபாசிட்டர்களிடம் எப்படி நடந்துகொள்கின்றன என்று கவனித்து நாமும் அப்படி நடக்கவேண்டும்.

விளம்பரம் எதற்கு?

'சூவிங் கம்' என்ற குதப்பும் கோந்து வியாபார மன்னராகிய வில்லியம் வ்ரிக்ளீ என்பவர் ஒரு விமானத்தில் பிரயாணம் செய்தார். அவருடன் இருந்த ஒரு தோழர், "உங்கள் கோந்துதான் இப்போது உலகெங்கும் பிரபல மாகிவிட்டதே. அப்படி யிருந்தும், கோடிக்கணக்கான டாலர்களை வருஷந்தோறும் செலவழித்து இன்னும் விளம்பரம் செய்கிறீர்களே! ஏன்?" என்று கேட்டார்.

வியாபார மன்னர் சிறிது யோசித்துவிட்டு, "இந்த விமானம் எவ்வளவு வேகத்தில் இப்போது பறக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"மணிக்கு முந்நூறு மைல் வேகத்தில்" என்றார் தோழர்.

"அப்படியானால், அவர்கள் ஏன் இதன் எஞ்சினை எடுத்து வெளியே வீசி எறியாதிருக்கிறார்கள்? இதுவரைக்கும் ஓடிவந்த வேகத்தால் இது தானாகவே பின்னும் ஓடிக்கொண்டிருக்குமே!" என்றார் வியாபார மன்னர்.

—'கேப்பர்ஸ் வீக்லி'

கார்ட்டூன் கதம்பம்

பெண் கண்டக்டர்களுக்கு விசில் அடிக்கத் தெரியுமோ?

— 'ரிபப்ளிக்'



சூயஸுக்கு இக்கரையிலும் அக்கரையிலும்

— அமிர்தபஜார்'

க்யூ



—சங்கர்ஸ் வீக்லி.

இதுதான் பிழை

(1) ஒரு நொண்டிப் பிச்சைக்கார ஏழை மனிதன் என்பதில் 'ஒரு' இருக்கும்போது மறுபடியும் 'ஒருவன்' என்பது வேண்டியதில்லை.

(2) 'மனம் இறங்கவில்லை' என்பதில் இரங்கவில்லை என்று இடையினம் இருக்கவேண்டும். இறங்கவில்லை யென்றால் உயர்ந்த இடத்திலிருந்து கீழே வரவில்லை என்று பொருள் படும். இங்கே இரக்கத்தைச் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

(3) அமெரிக்காவின் தலைநகர் நியூ யார்க் அன்று; வாஷிங்டன். நியூயார்க் மாகாணத்தின் தலைநகர் தான் நியூ யார்க்.

(4) அவர் என்பது ஒரு மனிதரைக் குறிப்பதாக இருந்தாலும் மரியாதையாகச் சொல்லும் பாணியில் பன்மையாகச் சொல்வது தமிழ் வழக்கம். ஆகவே அவரைக் குறிக்கும் சொற்கள் பன்மையிலே அமைவதுதான் பொருத்தம். 'தன் பணம்' என்பதில் தன் என்பது ஒருமை. 'தம் பணம்' என்று இருக்க வேண்டும்.

(5) நாலாவிதத்திலும் என்பது பிழை. நாலு விதத்திலும் என்று இருக்கலாம்; அல்லது நானு விதத்திலும் என்று இருக்கலாம். நாலு என்பதும் நானு என்பதும் ஒரே சமயத்தில் ஞாபகத்திலே வந்து கலந்து குழம்பி உண்டான உருவம் நாலா என்பது.

(6) வெண்ணை என்பது பிழை; வெண்ணெய் என்று எழுத வேண்டும். வெள்+நெய் என்று பிரியும். எண்ணெய் என்று எழுதுவதை எண்ணை என்று எழுதுவதும் பிழை.

(7) இங்கே காட்டியுள்ளது ஔவையார் வாக்கு அன்று. தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழிகளில் ஒன்று இது. இப்படியே தெரியாத பலவற்றை ஔவையார் தலையில் சுமத்தி விடும் பிழையைப் பலர் செய்கிறார்கள்.

(8) 'இடம் ஒன்றிலாவது' என்று இருக்க வேண்டும்; அல்லது 'இடங்களில் ஒன்றிலாவது' என்று இருக்கவேண்டும். 'இடங்கள்' என்பது பலவற்றைக் குறிக்கும்; ஒன்று என்பதோடு அது ஒட்டாது.

(9) ராமேசுவரத்தில் ஸ்ரீ மீனாட்சியம்பிகையைத் தரிசனம் செய்ய முடியாது. அங்கே பருவதவர்த்தனி என்னும் மலைவளர் காதலி யம்மையைத்தான் தரிசிக்க முடியும். மீனாட்சியைத் தரிசிக்கவேண்டுமானால் மதுரைக்குப் போக வேண்டும்.

(10) அழிந்தொழிந்தது என்பது பிழை; அழிந்தொழிந்தன என்று இருக்கவேண்டும். யாவையும் என்பது பன்மை; ஒழிந்தது என்பது ஒருமை.

(11) 'சின்னாபின்னப்பட்டு' என்பதைச் 'சின்னபின்னப்பட்டு' என்று திருத்திக் கொள்ள வேண்டும். சின்னம், பின்னம் என்ற இரண்டு வார்த்தைகள் இங்கே சேர்ந்து வந்திருக்கின்றன. சின்னா என்று நீள்வதற்கு அவசியமேயில்லை.

(12) காக்ஷி என்பது தவறு; காட்சி என்று இருக்கவேண்டும். காட்சி என்பது காண் என்ற தமிழ்ச் சொல்லை மூலமாக உடையது. எழுச்சி, மகிழ்ச்சி என்ற வார்த்தைகளைப் போல் 'சி' என்ற விகுதி பெற்று வந்திருக்கிறது. அதை வடமொழிச் சொல்லைப் போல எழுதுவது பிழை.

சிறு கதை:

ஸர்தார்ஜி

கே. ஏ. அப்பாஸ்

பெரிய விவாதத்தைக் கிளப்பிவிட்ட கதை இது. ஒரு முஸ்லிம் மதவெறியன் தன் கதையைத் தானே சொல்வது போல் அமைந்த இந்தக் கதையை முழுதும் படிக்காமலே சில சீக்கியர் சீறினுர்கள்; முழுதும் படித்த சில முஸ்லிம்களும் சீறினுர்கள். ஆனுல், கதை இந்தியா, பாகிஸ்தான் இரண்டிலும் பிரசுரமாயிற்று. பிரத்தியட்ச வாழ்க்கையை, உயர்ந்த லட்சியத்தோடு இணைக்கும் இதை நீங்கள் முழுதும் படியுங்கள். இதை யாரும் சீறத் தேவை இல்லை என்று பாரபட்சமற்ற உங்கள் உள்ளம் சொல்லும்.

டில்லியில் வகுப்புக் கலவரம் ஆரம்பித்த புதிசு. 'நம் தலையெழுத்து இப்படியா இருக்க வேண்டும்? பக்கத்திலே குடியிருக்கிறவன் சீக்கியனுக இருந்து தொலைய வேண்டுமா? அண்டை வீட்டுக்காரன் என்ற சாக்கில் அவன் நமக்கு மோட்சத்துக்கு வழி காட்டாமலிருந்தால் பெரிய புண்ணியந்தான்!' என்று எனக்குத் தோன்றிற்று. உண்மையில், இந்தச் சீக்கியர்களைக் கண்டாலே எனக்குப் பயம்; வெறுப்புங்கூட. ஆகையால் நான் அவர்களை மனிதர்களாகவே மதிப்பதில்லை.

நான் முதல்முதலில் ஒரு சீக்கியனைக் கண்ட சம்பவமே வெகு வேடிக்கை! அப்போது எனக்கு ஆறு வயது இருக்கும். பெண்களைப் போல் நீண்ட கூந்தலும், ஆண்களைப் போல் தாடியுமுள்ள ஒரு விசித்திரப் பிராணியைக் கண்டதும், "இதோ பாருங்கள், தாடிக்காரி அத்தை!" என்று கூவினேன். நான் பெரியவனுகிப் பள்ளிக்கூடம் போன போது, இந்தப் பிராணியைப் பற்றிய சில ரகசியங்கள் எனக்குத் தெரிந்தன. வியப்பு மாறி, வெறுப்பு வளர்ந்தது. "1857-இல் பஞ்சாபில் இருந்த சீக்கிய அரசர்கள் சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை; போதாக்குறைக்குப் பறங்கிக்காரர்களோடு சேர்ந்துகொண்டு தேசத்துரோகம் செய்தார்கள்" என்று எங்கள் வீட்டுப் பெரியவர்கள் சொன்னுர்கள். சரித்திர உண்மை, தேசத்துரோகம் என்ற சொற்கள் எனக்கு அந்த வயதிலே நன்ருக விளங்கவில்லையாயினும், சீக்கியர்கள் எப்படியோ தங்கள் பெயரைக் கெடுத்துக்கொண்டார்கள் என்பது மட்டும் தெரிந்தது.

பன்னிரண்டாவது வயதில் நான் ஒரு சமயம் டில்லியிலிருந்து அலீகட் வரைக்கும் போகவேண்டியிருந்தது. வழக்கமாக மூன்ருவது வகுப்பில் போகிறவன், அன்று இரண்டாம் வகுப்பில் போக முடிவு செய்து டிக்கெட் வாங்கினேன். காலியான பெட்டியாகப் பார்த்து உள்ளே போய் என் குரங்குச் சேஷ்டைகளை ஆரம்பித்தேன். மென்மையான பஞ்சணைமேல் விதம் விதமாகக் குதித்துக் கூத்தாடினேன்;

காப்பிரைட்: மனேஹர் (மராட்டி: நவம்பர் '48), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

முகத்தில் பலவகை உணர்ச்சிகளை வரவழைத்துக்கொண்டு கண்ணாடியில் அழகு பார்த்துக் களித்தேன்; எல்லா விளக்குகளையும் போட்டேன்; விசிறிகள் விர்ரென்று சுழல்வதை ஒய்யாரமாகக் கண்டேன். உடனே எல்லாவற்றையும் நிறுத்தினேன். வண்டி புறப்பட இன்னும் இரண்டே நிமிஷந்தான் இருந்தது. 'அதிகப் பணம் செலவாகாமலே நமக்கு ரிஸர்வ் வண்டி கிடைத்துவிட்டது!' என்ற ஆனந்தத்தில் நான் மூழ்கியிருந்தபோது, செங்குரங்கு மூஞ்சியுள்ள சில ஸோல்ஜர்கள், 'டாம் பிளடி பூல்!' என்று என்னவோ கூச்சல் போட்டுக்கொண்டு (அந்தக் காலத்தில் அவ்வளவு இங்கிலீஷ்தான் எனக்குத் தெரியும்!), திபுதிபுவென்று உள்ளே வந்தார்கள்.

எனக்கு அவர்களைப் பார்க்கவே பயமாக இருந்தது. இரண்டாம் வகுப்புப் பிரயாணம் போதும் என்று நினைத்துப் பேசாமல் என் கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு மூன்றாவது வகுப்பைப் பார்க்கக் கம்பி நீட்டினேன். உள்ளே கால் வைக்க இடமில்லை; எங்கே பார்த்தாலும் தாடிக்காரப் பெண்கள்; அவர்களைப் பார்த்து நான் ஓடவில்லை. அவர்களிடமும் எனக்குப் பயந்தான்; ஆனால் ஆங்கிலேயர்களிடம் உள்ள அவ்வளவு பயமில்லை. வெள்ளைக்காரனுக்கும் சீக்கியனுக்குமிடையே நான் வித்தியாசம் பாராட்டினேன். என்ன இருந்தாலும் வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன்தான்! அவனைப் போலவே சட்டையும் பூட்ஸும் போட்டுக்கொள்ள எனக்கு ஆசையாக இருந்தது; 'டாம் பிளடி பூல்' என்று பேச ஆவலாக இருந்தது. சீக்கியர்களைப் பின்பற்றும் ஆசையே எனக்கு உண்டாகவில்லை. ஆணாகப் பிறந்து பெண்ணைப்போலக் கூந்தலை வளர்க்கும் இந்த ஜீவன்களிடம் எனக்குப் பயத்தோடு வெறுப்பும் சேர்ந்து கொண்டது. வெள்ளைக்காரர்கள் கிராப் வைத்துக்கொள்கிறார்களே, எவ்வளவு அழகாக இருக்கிறது! தாடி வைத்துக் கொண்டால்தான் என்ன, இப்படியா? என் தகப்பனாருக்குக் கூடத்தான் தாடி இருக்கிறது; என் தாத்தாவுக்குந்தான் இருந்தது. ஆனால் அவர்களுடைய தாடியழகு, சீக்கியர்களுக்கு வருமா என்ன?

மெட்ரிக் பாஸானதும் நான் அலிகட் முஸ்லிம் சர்வகலாசாலையில் சேர்ந்தேன். எங்களோடு படித்த பஞ்சாபிப் பையன்களுக்கு நாகரிகமே தெரியாது என்பது எங்கள் அபிப்பிராயம். அவர்களுடைய சாப்பாடும் பாஷையும் - ஐயே, அவலட்சணமே! ஏதோ சண்டை என்று போய்ப் பார்த்தால், அன்பாகப் பேசுகிறார்களாம்! 'அவீ, துவீ, ஸாடு, தொஹாடே, கட்டீ'- இது ஒரு பாஷையா, ஐயா! இந்தப் பஞ்சாபிகளிடமிருந்து நான் எப்போதுமே விலகியிருப்பது வழக்கம். ஆனால் எங்கள் வார்டன் என் அறையிலே ஒரு பஞ்சாபியைக் கொண்டு விட்டார்; என்ன செய்வது! சில நாளைக்குள்ளே நாங்கள் ஒத்துப் போனோம். என் தோழனுடைய பெயர் குலாம் ரஸூல். அவனுடைய ஊர் ராவல்பிண்டி. சீக்கியர்கள் விஷயத்தில் அவனுக்கும் என் அபிப்பிராயந்தான். "அவர்கள் எல்லாருமே முட்டாள்கள்; கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடித்தால் அவர்களுடைய மூளை காலியாகிவிடும்" என்று அவன் சொல்வதுண்டு. அவர்கள் எப்படியாவது கிடந்துவிட்டுப் போகட்டும்; கிறுக்

குத்தனம், அடிதடி, கம்பீர நடை ஆகிய மூன்று விஷயங்களிலும் எங்களோடு அவர்கள் போட்டி போடுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. கழுத்தில் 'கிருபாணை'த் தொங்கவிட்டுக் கொண்டு, அவர்கள் மீசையையும் தாடியையும் முறுக்குவதுதான் எனக்கு அடியோடு ஆவதில்லை. "என்றைக்காவது ஒரு நாள் இவர்களின் கொட்டத்தை அடக்காமல் விடுவதில்லை" என்று குலாம் ரஸூல் அடிக்கடி சொல்வான்.

படிப்பு முடிந்ததும் நான் குமாஸ்தாவானேன்; பிறகு தலைமைக் குமாஸ்தாவானேன். சர்க்கார் கட்டிடத்தில் குடிவந்தேன். எனக்குக் கல்யாணமாகிக் குழந்தைகளும் இருந்தன. எனக்குப் பக்கத்தில் ஒரு ஸர்தார்ஜி குடிவந்தார். அவர் வந்தபோதுதான் குலாம் ரஸூலின் ஞாபகமும் எனக்கு வந்தது. ஸர்தார்ஜி ராவல்பிண்டியிலிருந்து வந்தவர். அங்கே முகம்மதியர்கள் சீக்கியரை வெளுத்து வாங்கிவிட்டார்கள்! கண்ணிலே மையிட்டுக் கொண்டு கிருபாணைச் சுழற்றிவந்த சீக்கியரின் சூரத்தனம் அங்கே ஒன்றும் சாயவில்லை! எத்தனையோ சீக்கியர்கள் தாடியைக் கத்தரித்துவிட்டு முஸல்மான்களானார்கள். பல பேர் உயிரையும் விட்டார்கள். மேற்குப் பஞ்சாபிலும் ராவல்பிண்டியிலும் முகம்மதியர்கள் ஹிந்துப் பெண்களைக் கடத்திச் சென்றதாகச் சொல்கிறார்களே, அது சுத்தத் தப்பு. முகம்மதிய இளைஞர்களைக் கண்டதும் அவர்கள் சொக்கிப் போனால், அது யாருடைய தவறு என்று நான் கேட்கிறேன்! மொத்தத்தில், சீக்கியர் வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்கள் என்பது அங்கே ருஜுவாகிவிட்டது!

எனக்குப் பக்கத்திலே இருந்த ஸர்தார்ஜி அறுபது வயதுக் கிழவர். சாவுக்குத் தப்பிவந்தும், எப்போது பார்த்தாலும் கலகலவென்று சிரிப்பதிலே குறைவில்லை. கொஞ்சங்கூட வெட்கமில்லாமல் என்ன கழுதைச் சிரிப்பு வேண்டியிருக்கிறது! அவர் மெதுவாகத் தமது வலையை வீசத் தொடங்கினார். போகும்போதும் வரும்போதும் பேசாமலிருக்கமாட்டார். நடுவிலே ஒரு நாள், ஏதோ பண்டிகையாம், எனக்குப் பட்சணங்கள் கொடுத்தார். என் மனைவி அவற்றைத் தோட்டியினிடம் விட்டெறிந்தாள் என்பது வேறு விஷயம். நான் அவரோடு எப்போதுமே கணக்காகப் பேசுவேன். சற்றுத் தாராளமாகப் பழகினால் அவர் தமது கிருபாணை என் நெஞ்சிலே செருகிவிடுவார் என்று எனக்குத் தெரியும். வீட்டிலே எல்லாரையும் ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று நான் என் குடும்பத்தாரிடம் சீக்கியரின் முட்டாள்தனத்தைப்பற்றிக் கதை கதையாகச் சொன்னேன். "இதோ, நேரிலேயே பாருங்கள் ஒரு விஷயம்" என்று கூறி, என் வேலைக்காரனை ஸர்தார்ஜியிடம் போய் மணி என்ன என்று கேட்டுவரச் சொன்னேன்.

"பன்னிரண்டு அடித்து இரண்டு நிமிஷம்" என்று ஸர்தார்ஜி சொல்லி அனுப்பினார்.

"பார்த்தீர்களா? மணி பன்னிரண்டு என்று சொல்ல இவர்களுக்கு இவ்வளவு பயம்!" என்று நான் சொன்னேன்.

குழந்தைகள் நல்லபடி இருக்க வேண்டுமே என்று எனக்குக் கவலை. சீக்கியர்கள் ஏற்கனவே சொல்லத் தேவையில்லை; அதிலும் இவர்கள்

ராவல்பிண்டியிலிருந்து உதைபட்டு வந்தவர்கள். எந்த நிமிஷத்தில் பழி வாங்குவார்களோ என்று பயம். "ஜாக்கிரதை! குழந்தைகளை ஸர்தார்ஜி வீட்டுப் பக்கம் நாட விடாதே!" என்று என் மனைவிக்குப் பலமான எச்சரிக்கை கொடுத்திருந்தேன்.

ஆனால் என்ன செய்தும் என்ன, குழந்தைகள் நாம் சொல்வதைக் கேட்டால்தானே! ஸர்தார்ஜியின் பெண் மோகினி எங்கள் வீட்டுக் குழந்தைகளோடு விளையாட வந்து விடுவாள். அவளுக்கு வயது பன்னிரண்டு இருக்கும்; உண்மையிலேயே அவள் மோகினியாகத்தான் இருந்தாள். பொதுவாகச் சீக்கியப் பெண்களே அழகிகள். "பஞ்சாபிலிருந்து சீக்கிய ஆண்கள் ஓடிப்போய், பெண்கள்மட்டும் இருந்தால், தேவலோகத்து ரம்பைகளை நாம் தேடித் திரிய வேண்டியதில்லை" என்று குலாம் ரஸூல் சொல்வதுண்டு.

குழந்தைகளோடு குழந்தைகள் விளையாடுவதைக் கண்டு எனக்கு ஒரு நாள் கோபம் வந்துவிட்டது. என் குழந்தைகளைத் தரதரவென்று உள்ளே இழுத்துப்போய், ஆத்திரம் தீர அடித்துவிட்டேன். அதற்குப் பிறகு என் கண்ணெதிரே அந்தக் குழந்தைகள் ஒன்றாக விளையாடி நான் பார்த்ததில்லை.

சீக்கிரமே சீக்கியர்கள் பழி வாங்கினார்கள். கிழக்குப் பஞ்சாபில் சிறுபான்மையினரான முஸ்லிம்களை அவர்கள் லட்சக்கணக்கில் கொன்று குவித்தார்கள். முஸ்லிம் ரத்தம் ஆறாகப் பெருகியது. பெண்களைக்கூட அவமானப் படுத்திக் கொன்றார்கள். மேற்குப் பஞ்சாபிலிருந்து ஓடிவந்த சீக்கியர்கள் கலவரக் கதைகளையெல்லாம் தங்களோடு சுமந்து வந்தார்கள். பஞ்சாபிலே கொஞ்சநஞ்சம் விட்டுப்போன குறை டில்லிக்கு வந்து சேர்ந்தது. 'சரி, இனிமேல் இங்கிருந்தால் ஆபத்து!' என்று எண்ணி, என் மனைவி மக்களைத் தம்பியோடு பாகிஸ்தானுக்கு அனுப்பிவிட்டேன். நான் மட்டும் அல்லாவின்மேல் பாரத்தைப் போட்டுத் தங்கியிருந்தேன். என் வீட்டுச் சாமான்கள் ஆகாய விமானத்தில் அடங்குகிறவை அல்ல; ஆகையால், ரெயில் வாகனில் கொண்டுபோய் அவற்றை நிரப்பினேன். அதற்குள், வண்டிகளையெல்லாம் தாக்குவதாகச் செய்தி வந்தது. எனவே, சாமான்களை அனுப்பும் யோசனையைக் கைவிட்டேன்.

ஆகஸ்ட் 15உ சுதந்தர விழா வந்தது; ஆனால் அதைப்பற்றி

எனக்கு என்ன? 'பாகிஸ்தான் டைம்ஸ்', 'டான்' என்ற பத்திரிகைகளைப் படித்தவண்ணம் அன்றைப் பொழுதைக் கழித்தேன். ஹிந்துக்களும் வெள்ளைக்காரர்களுமாகச் சேர்ந்துகொண்டு முஸ்லிம்களை அழிக்கச் சதி செய்தது பற்றிய முழு விவரங்கள் அந்தப் பத்திரிகைகளில் இருந்தன. ஒரு காலத்தில் முகம்மதிய ராஜதானியாக இருந்த டில்லியை அவர்கள் எங்களிடமிருந்து பறித்துக்கொண்டு, சுட்டுப் போட்டால்கூட உர்து பேசத் தெரியாத ஒரு காட்டுமிராண்டிப் பிரதேசத்துக்கு எங்களைத் துரத்திவிட்டார்கள். காயதே ஆஜம் இருந்ததனால்தான் பாகிஸ்தான் கிடைத்தது. ஜின்னுவுக்காகவும் பாகிஸ்தானுக்காகவும் நாம் எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்துக்



கொள்ளத்தான் வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் டில்லியை விட்டுப் போவது எனக்குப் பிடிக்கவில்லை.

"என்ன ஷேக்ஜி, இன்று சுதந்தரத் திருநாள் அல்லவா?" என்று சாயங்தரம் ஸர்தார்ஜி என்னைக் கேட்டபோது, எனக்கு என்ன கோபம் வந்தது தெரியுமா? அவருடைய தாடியை அப்படியே வேரோடு பெயர்த்து அவர் கையிலே வைத்துவிட்டால் ஆசாமி வாயடைத்துப் போவார் என்று எனக்குத் தோன்றிற்று.

மேற்குப் பஞ்சாபிலிருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை இப்போது லட்சத்துக்குமேல் போய்விட்டது. பாகிஸ்தானின் பெயரைக் கெடுப்பதற்காகவே இவர்கள் அத்தனை பேரும் தங்கள் வீடுவாசல்களைக் கொளுத்திவிட்டு வந்திருப்பார்கள் போலத் தோன்றிற்று. இதே சமயத்தில் முஸ்லிம்களுக்கு எதிராகக் காங்கிரஸ் பிரசாரம் நடந்தது. ராஷ்டிரீய சுயம் சேவக சங்கத்தையும், ஷஹீத் படையையும் காங்கிரஸ்காரர்கள் முழுக்க முழுக்கப் பயன்படுத்திக்கொண்டார்கள். காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி, ஹிந்து மகா சபைக்காரர்களாக இருந்தாலும் சரி, மொத்தத்தில் ஹிந்துக்கள் எல்லாரும் ஒன்றுதான் என்பது அப்போது உலகத்துக்குத் தெரிந்துவிட்டது. சும்மா ஜனங்களை ஏமாற்றுவதற்காகக் காந்தியையும் நேருவையும் திட்டுகிறார்களே தவிர, இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரைக்கும் ஹிந்துக்கள் எல்லாரும் ஒன்றுதான்.

ஒரு நாள் அந்தப் பயங்கரச் செய்தி வந்தது! கரோல்பாகில் நூற்றுக்கணக்கான முஸ்லிம் வீடு

களை எரித்தார்கள். சாந்த்னீ சௌக்கில் ஆயிரக்கணக்கான கடைகளைக் கொள்ளையடித்தார்கள். காங்கிரஸின் ஹிந்து ராஜ்யத்துக்கு இது ஒரு 'ஸாம்பிள்'! 'புது டில்லியில் பல வருஷங்களாக ஆங்கிலேய ஆட்சி நடக்கிறது; இங்கே மவுண்ட் பாட்டன் இருக்கிறார். கமாண்டர் - இன் - சீப் இருக்கிறார். இந்த ஊரைப் பொறுத்த வரைக்குமாவது முஸ்லிம்களுக்கு ஆபத்து இராது' என்று எண்ணி, நான் ஆபீசுக்குப் புறப்பட்டேன். அன்று பிராவிடெண்ட் பண்டு கிடைக்கும் நாள். இதற்காகத்தான் நான் பாகிஸ்தானுக்குப் போகாமல் தங்கியிருந்தேன். கோல் மார்க்கெட்டுக்கு அருகில் நான் போனபோது, எங்கள் ஆபீஸில் வேலை செய்யும் ஹிந்து குமாஸ்தா ஒருவர் எதிரே வந்து மடக்கினார்.

"எங்கே, ஐயா, போகிறீர்கள்? பேசாமல் வீடு திரும்புங்கள். கனாட் பலேஸில் குண்டாக்கள் முஸ்லிம்களைச் சீவித் தள்ளுகிறார்கள். சீக்கிரம் ஓடுங்கள் வீட்டுக்கு!" என்றார்.

அதற்குப் பிறகு அங்கே நிற்க எனக்குப் பைத்தியமா? ஒரே ஓட்டமாக ஓடிவந்து என் வீட்டு வாசலில் நின்றேன். ஸர்தார்ஜி எனக்கு முன்னமே அங்கே நின்றிருந்தார்.

"ஷேக்ஜி, நீங்கள் துளிக்கூடக் கவலைப்படவேண்டாம். நான் உயிரோடு இருக்கும் வரைக்கும் உங்கள் மேல் யாரும் கை வைக்க முடியாது" என்று அவர் சொன்னார்.

'இந்தக் கிழவனுடைய தாடிக்குள்ளே எவ்வளவு கபடம் மறைந்திருக்கிறதோ! உள்ளூற இவனுக்குச் சந்தோஷமாகத்தான் இருக்கும். இவன் காபிர். இவன் தயவு நமக்கு எதுக்கு?' என்று எண்ணி, நேரே என் அறைக்குள் சென்றேன். அந்த வட்டாரத்திலேயே நான் ஒருத்தன்தான் முஸ்லிம். கட்டிலண்டை தேடிப்பார்த்தபோது என் துப்பாக்கியைக் காணவில்லை. கலவரம் ஆரம்பித்த நாளிலிருந்தே நான் நிறையத் தோட்டாக்களும் குண்டுகளும் சேகரித்து வைத்திருந்தேன். ஆனால் துப்பாக்கியைக் காணவில்லையே? வீடு முழுவதும் தேடினேன்.

"என்ன ஸார், என்ன வேணும்?" என்று என் வேலைக்காரன் கேட்டான். அவன் ரொம்ப நாணயமானவன்.

"என் துப்பாக்கி எங்கே?"

அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை; ஆனால் அவன் முகத்தைப் பார்த்தால் எதையோ மறைக்கிறான் என்று தெரிந்தது.

"என்னடா, பேசாமல் நிற்கிறாய்?" என்று அதட்டினேன்.

அப்போதுதான் அவன் வாயைத் திறந்தான். என் துப்பாக்கியைக் கொண்டுபோய் நண்பர்களிடம் கொடுத்திருக்கிறானாம். தரியாகஞ்சில் முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள் ஆயுதங்களைச் சேகரிக்கிறார்களாம்.

"நூற்றுக்கணக்கிலே துப்பாக்கி இருக்கிறது, ஸார்! மூன்று மெஷின் கன், பத்துப் பிஸ்டல்... இன்னும் எத்தனையோ ஆயுதங்கள்! இந்தக் காபிர்கள் நம்மைத் தாக்க வந்தால் ஒரேயடியாகத் தவிடுபொடியாக்கி விடுவோம்!" என்றான்.

"தரியாகஞ்சில் அவர்களைத் தவிடுபொடியாக்கினால், அது எந்த விதத்தில் எனக்குப் பாதுகாப்பு? தரியாகஞ்சில் நீங்கள் அவர்களைச் சுடுவதற்கு முன்பே, அவர்கள் இங்கே என்னைச் சுட்டுவிட்டால்

அதற்கு யார் பொறுப்பு? போ, உடனே ஓடிப்போய் எப்படியாவது என் துப்பாக்கியைக் கொண்டுவா'' என்றேன்.

அவன் திரும்பி வரமாட்டான் என்று எனக்குத் தெரியும். நாணயமான வேலைக்காரன் தன் வேலையை முடிக்காமல் எஜமானனிடம் வருவானா? அவன் போய் விட்டான்; வீடு முழுவதிலும் நான் தன்னந்தனியே இருந்தேன். சுவரில் மாட்டிய படத்திலிருந்த என் மனைவியும் குழந்தைகளும் என்னைப் பார்த்தார்கள். இனிமேல் இந்த ஜன்மத்தில் நான் அவர்களைப் பார்க்க முடியாது என்று நினைத்ததுமே அழுகை வந்தது. 'அவர்களாவது சௌக்கியமாய்ப் போய்ச் சேர்ந்தார்களே' என்று சற்று ஆறுதலும் உண்டாயிற்று. இந்தப் பிராவிடெண்ட் பண்டு ஆசையில் நான் தங்காமல் இருந்திருக்கலாம்; - ஆனால் இனிமேல் அதை எண்ணி என்ன உபயோகம்!

''ஸத் ஸ்ரீ அகால்! ஹர ஹர மஹாதேவ்!''

கர்ஜனை வரவர நெருங்கியது. அது கர்ஜனையல்ல; என் சாவு. ஸர்தார்ஜி என்னிடம் வந்து, ''ஷேக்ஜி, எங்கள் வீட்டுக்குள் வாருங்கள், எழுந்திருங்கள்!'' என்றார்.

சீக்கியர்களின் தயவு நமக்கு வேண்டாம் என்ற எண்ணம் அந்தக் கர்ஜனைக்கு முன்னால் நிலைக்கவில்லை. நான் நேராக ஸர்தார்ஜியின் வீட்டுக்குள் போனேன். நான் உள்ளே போவதற்குள் இருபது முப்பது இளைஞர்கள் அடங்கிய ஒரு லாரி, வீட்டின் முன்னால் வந்து நின்றது. ''க்வார்டர் நம்பர் 8, ஷேக் புர்ஹானுத்தீன்'' என்று ஒருவன் உரக்கப் படித்தான். உடனே அத்தனை பேரும் திடுதிடுவென்று என் அறையை நோக்கிப் பாய்ந்தார்கள். என் கண் முன்னால் என் வீடு கொள்ளைபோயிற்று. அவர்களாவது எனக்கு அடியோடு தெரியாதவர்கள். இந்த ஸர்தார்ஜி இருக்கிறாரே, இவர் என்ன செய்தார், தெரியுமா? ''பக்கத்திலே இருக்கும் எனக்குத்தான் இதில் பங்கு உண்டு'' என்று கொஞ்சமும் வெட்கமில்லாமல் சொல்லிக் கொண்டு, அவர் என் பொருள்களையெல்லாம் கொண்டுவந்து தம் வீட்டில் அடுக்கினார்.

கொள்ளைக்காரர்கள் ஆயுதங்களோடு வந்ததனால், நான் வெளியே தப்பிப் போக முடியவில்லை. அதற்குள் ஸர்தார்ஜி கையில் கிருபாணைத் தாங்கி, ''இப்படி வா உள்ளே!'' என்று என்னை அழைத்தார். அவர் முகத்தைப் பார்க்க எனக்குப் பயமாக இருந்தது. அந்த முரடர்களிடம் சிக்குவதைவிட இந்தக் கிழவனிடந்தான் போவோமே என்று நினைத்து மெல்ல மெல்ல நடந்தேன். ''இப்படிப் போப்பா உள்ளே!'' என்று ஸர்தார்ஜி என்னைப் பின்னும் உள்ளே தள்ளினார். கசாப்புக் கடைக்குள் நுழையும் பசுவைப் போல, நான் அறைக்குள் சென்றேன். ''இந்தா தம்பி, உன் சொத்து'' என்று கூறி, அவர் என் வீட்டிலிருந்து கொண்டுவந்த பொருள்களை என்முன்னால் வைத்தார். ''உனக்கு நாங்கள் ஒன்றுமே செய்ய முடியவில்லையே, தம்பி!'' என்றாள் அவர் மனைவி.

இதைக் கண்டு நான் பிரமித்தேன். எந்த மூஞ்சியைக் கொண்டு நான் அவர்களிடம் பேசுவது?

வெட்கத்தால் எனக்கு உயிரே போய்விடும்போல் இருந்தது.

பக்கத்தில் குண்டர்கள் என் இரும்புப் பெட்டியை உடைக்கும் சத்தம் கேட்டது. "இதன் சாவி கிடைத்தால் நல்லது" என்ருன் ஒருத்தன்.

"சாவியா? பாகிஸ்தானில் கிடைக்கும்! அந்தப் பேடிதான் ஓடிப்போய் விட்டானே!" என்ருன் மற்ருெருவன்.

"அவரா பேடி? நீங்கள் மட்டும் சூரரோ? அவர் ஒன்றும் பாகிஸ்தானுக்குப் போகவில்லை." - இது மோகினியின் குரல்.

நெஞ்சம் திடுக்கிட, நான் கவனித்துக் கேட்டேன். "பாகிஸ்தானில் இல்லாவிட்டால், இங்கே எங்காவது போய் முகத்தில் கரியைப் பூசிக் கொண்டிருப்பான்."

"உங்கள் முகத்திலேதான் கரி பூசியிருக்கிறது! அவர் எங்கள்..."

இதற்கு மேல் என் காதில் ஒன்றும் விழவில்லை. கலகக்காரர்களுக்கு இவ்வளவு தகவல் போதுமே! நான் தொப்பென்று கீழே உட்கார்ந்தேன். ஸர்தார்ஜி தம் கிருபாணை மகனிடம் கொடுத்து விட்டு வெளியே போனுர். தவடையில் அறையும் சத்தமும், மோகினியின் அழுகையும், பஞ்சாபி பாஷையில் வசவுகளும் கேட்டன. திடீரென்று வெடிச் சத்தமும், அடுத்தபடி ஸர்தார்ஜியின் அலறலும் கேட்டன. அந்த வீட்டார் என்னை வெளியே அழைத்து வந்தபோது எங்கும் பயங்கரமான அமைதி பரவியிருந்தது. ஸர்தார்ஜி கட்டிலில் கிடந்தார். அவருடைய மார்பில் ரத்தம் பெருகியது. அவர் மகன் டாக்டரை டெலிபோனில் அழைத்தான்.

"ஸர்தார்ஜி, என்ன இப்படிச் செய்துவிட்டீர்களே!" என்றேன். அதற்குமேல் என்னுல் பேச முடியவில்லை. வெறுப்பும் பகைமையும் நிரம்பிய என் பழைய உலகம் எங்கோ மறைந்துபோயிற்று.

"நான் என் கடனைத் தீர்க்க வேண்டியிருந்தது" என்று அவர் மங்கிய குரலில் சொன்னுர்.

"கடனு?"

"ஆமாம், உன்னைப்போன்ற ஒரு முஸ்லிம்தான் என்னையும் என் குழந்தைகளையும் காக்கத் தன்னைப் பலி கொடுத்தான். இது கடன் இல்லையா?"

"என்னைப்போன்ற முஸ்லிமா? அவன் யார்?"

"குலாம் ரஸூல்!"

அவர் அந்தப் பெயரைச் சொன்னபோது கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடித்தது. நான் அவரைப் பார்த்தேன். அவர் சிரித்த முகமாக இருந்தார். அவருடைய தாடி என் தாத்தாவை நினைப்பூட்டியது.

கடிகாரம் மெதுவாகப் பன்னிரண்டு தரம் அடித்தது.

"இருபத்து நான்கு மணி நேரமும் மணி பன்னிரண்டுதான்!" என்று கூறுவதுபோல இருந்தது அவர் பார்வை.

அவருடைய கண்கள் மூடின. என்றைக்கும் மீளாத நித்திரையில் அவர் ஆழ்ந்துவிட்டார்.

ஸர்தார்ஜியா இறந்தார்? இல்லை, என் பழைய சொரூபந்தான் செத்துப் போயிற்று.

சயின்ஸ் கல்வியின் அவசியம்

பற்பல சயின்ஸ்களையும் கற்பது அவசியம். ரசாயனம், பௌதிகம் இரண்டையும் எவ்வளவு கற்ருலும் தகும். —காந்தி.

கல்யாணி
ஆசிரியர்: ஜைனேந்திர குமார்
"வேதாந்தமாக எழுதுவதில் கீர்த்திபெற்ற ஆசிரியர்; காந்தி சகாப்தத்தில் தோன்றிய தலை சிறந்த சிந்தனையாளர்" என்று 'பி. இ. என்.' பத்திரிகை இந்த ஆசிரியரைப் புகழ்கிறது. அதற்கு அத்தாட்சி போல் விளங்குவது 'கல்யாணி'. இது ஒரு பெண்ணின் மனப் போராட்டத்தைத் தத்ரூபமாய்ச் சித்திரிக்கும் நீண்ட ஹிந்தி நாவல். ஆசிரியரின் அநுமதியுடன் கா. ஸ்ரீ. ஸ்ரீ. இதைச் சுருக்கித் தந்திருக்கிறார்.

கல்யாணி

நேற்றுத்தான் நடந்தது போல இருக்கிறது. இரவு ஒன்பது மணிக்கு மேல் இருக்கும். என் நண்பன் ஸ்ரீதரனோடு பேசிக் கொண்டிருந்தேன். கல்யாணியும் அவள் கணவர் டாக்டர் அஸரானியும் என்னிடம் வந்தார்கள்.

“பாக்கியம் சமயம் பார்த்தா வருகிறது? ஆயினும் இந்தச் சமயத்தில் ஏதாவது முக்கிய வேலையாகத்தான் வந்திருப்பீர்கள். என்றால் ஆகக்கூடியது ஏதாயினும் இருந்தால் சொல்லுங்கள்” என்று வரவேற்றேன்.

அவள் பேச மனமில்லாதவள் போல வெட்கத்தோடு, “விஷயம் ஒன்றுமில்லை; சும்மாத்தான்...” என்று இழுத்தாள்.

“இதில் என்ன வெட்கம்? ஐம்பதுக்கு மேற்பட்ட இந்தக் கவிதைகளை இவள் ஐந்தே நாளில் எழுதியிருக்கிறாள், ஸார்! ஹிந்தி பாஷையில் இவள் பெரிய கவி என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. ஹிந்தியிலும் இவள் முன்னுக்கு வரப்போகிறாள், பாருங்கள்” என்று சொல்லி, அவளது மடியிலிருந்த கையெழுத்துப் பிரதியை எடுத்து டாக்டர் என்னிடம் கொடுத்தார்.

“கட்டாயம் வரத்தான் போகிறார்” என்றேன்.

அவள் கோபத்தோடு அவரைப் பார்த்தாள். ஆனால் அவர் சற்றும் அசையாமல், “அந்தப் பாரதமாதா பாட்டைப் பாடேன்; இவர்கள் கேட்பார்கள்” என்றார்.

“உங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் பேசுவதே உங்கள் வழக்கமாகிவிட்டது” என்று அவள் சினந்துகொண்டாள்.

இந்தத் தர்மசங்கடமான நிலையில் ஸ்ரீதரன் எழுந்து போக விரும்பினான். “நீங்கள் சற்று நேரம் இருந்தால் நல்லது. நான் இந்தக் கவிதைகளைப் பாட விரும்புகிறேன். உங்களுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ? எனக்கு ஹிந்தி நன்றாகக் கற்றுக்கொள்ள ஆசை; நீங்கள் எல்லாரும் உதவி செய்ய வேண்டும். இதைப் பாடட்டுமா?” என்று அவள் சொல்லவே, அவன் உட்கார்ந்தான்.

கல்யாணி உடனே ஒரு கவிதையைப் பாடினாள். அது பாரத மாதாவைப்பற்றியல்ல; ஒரு வழிப்போக்கனைப் பற்றி.

“பேஷான கவிதை! உங்கள் குரலும் மதுரமாக இருக்கிறது” என்றேன்.

“பாஷையில் நிறையப் பிசகுகள் இருக்குமே?” என்று அவள் கூச்சத்தோடு கேட்டாள்.

நான் ஏதோ சொல்வதற்குள் டாக்டர் குறுக்கிட்டார்: “ஹிந்தியில் உயர்ந்த கவிதை ஏது? உன் கவிதையிலுள்ளது போன்ற அழகிய கருத்து ஹிந்தியில் கிடையாது. ஹிந்தியில் நீ ஒப்பற்ற கவியாகப் போகிறாய்!”

இதைக் கேட்டதும் கல்யாணியின் முகத்தில் தோன்றிய சங்கடத்தைக் கண்டு எனக்கு வருத்தம் உண்டாயிற்று. “டாக்டர் சொல்வது அத்தனையும் பொய்யல்ல. நீங்கள் கட்டாயம் எழுதுங்கள். எழுதுவதை விடவேண்டாம்” என்றேன்.

"பாஷை..." என்று அவள் மெல்லிய குரலில் இழுத்தாள்.

"ஆமாம், பாஷை இன்னும் சரியாக அமையவில்லை. ஆனால் கருத்து பேஷாக இருக்கிறது. கருத்துத்தான் முக்கியமாக வேண்டும். போகப் போக, பாஷையில் மெருகு ஏறும்."

இவ்விதம் கவிதையைப்பற்றிச் சில நேரம் பேசிய பிறகு அஸரானி தம்பதிகள் போய்விட்டார்கள்.

"இவர்களை உங்களுக்கு எத்தனை நாளாகத் தெரியும்?" என்று ஸ்ரீதரன் கேட்டான்.

"ரொம்ப நாளாகத் தெரியும்."

"கணவனுக்கு நிறைய வரும்படி வரும்; அதனால் மனைவிக்குக் கவிதையிடம் அன்பு போலிருக்கிறது!"

"அப்படி யல்ல; அவளும் டாக்டர்தான். இருவரும் டாக்டர் தொழில் நடத்துகிறார்கள்; ஆனால் முக்கியத் தொழில் அவளுடையது தான். சீமைக்குப் போய், பாஸ் செய்திருக்கிறாள். அவர் ஒருவேளை பாஸ் செய்யாதவராக இருக்கலாம்; அதில் எனக்கு ஆச்சரியமில்லை. தொழிலை அவர்தாம் மேற்பார்வை பார்த்துக்கொள்கிறார்."

"அவள் டாக்டரா? அப்படியானால் எப்படிக் கவியானாள்?"

"ஏன்? ஆகக்கூடாதா?"

"டாக்டராக இருப்பவள் கவியாக முடியாது."

"இதோ இவள் ஆகியிருக்கிறாளே. தொழில் முறையில் இவள் டாக்டர்; இயற்கையில் கவி."

"அப்படியானால் இது துன்பமான விஷயம்."

"வாஸ்தவம், இது இன்பமான விஷயமல்ல."

மறுநாள் அதிகாலையில் டாக்டர் அஸரானி என்னிடம் வரவே, எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "வாருங்கள், வாருங்கள்!" என்றேன்.

அவர் மிகுந்த கோபத்தோடு, "நீங்கள் இப்படியா செய்வது?" என்றார்.

"தெரியாமல் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னிக்கவேண்டும். விஷயம் என்ன?"

"நீங்கள் என் மனைவியிடம் அப்படி நடந்து கொண்டது சரியல்ல. அவளுடைய திறமை உங்களுக்குத் தெரியும். நீங்கள் அவளை எழுதத் தூண்டியிருக்க வேண்டும். இங்கிருந்து போனதும் அவள் அந்தக் கவிதைகளைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறிந்துவிட்டாள். இதற்கு நீங்கள்தாம் பொறுப்பாளி."

இதைக் கேட்டு நான் ஸ்தம்பித்துப்போனேன்.

"இனிமேல் அவள் ஹிந்தியில் ஒரு கவிதைகூட எழுதமாட்டாள்."

"எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. நான் நாளைக்கு வந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். என்றால் அவருக்கு ஏதாவது வருத்தமென்றால் அதில் எனக்குத்தான் வருத்தம் அதிகம் என்று அவரிடம் சொல்லுங்கள்" என்று அவரைச் சமாதானப்படுத்தினேன்.

மறுநாள் நான் கல்யாணியைச் சந்தித்தபோது, "உங்கள் பேச்சைக் கேட்டு எனக்கு உற்சாகம் போய் விட்டது. அதனால்தான் கவிதைகளைக் கிழித்து விட்டேன்" என்றாள்.

"அப்படியானால் நான் அல்லவா இப்போது குற்றவாளி யாகிவிட்டேன்?"

"உண்மையில் நான் நன்றாக எழுத முடியுமா?"

"பேஷாக எழுத முடியும்."

"சரி, அப்படி எழுதுவதால் என்ன லாபம்?" என்று அவள் மெதுவாகக் கேட்டாள்.

டாக்டர் அப்பொழுது அங்கே இல்லை. சாயந்தர வேளை. அவள் சிறிது ஓய்வோடு இருந்தாள்.

"எழுதுவதால் என்ன லாபமா? முன்னால் எழுதினீர்களே. அது எதற்காக?"

"எதனால்தான் என்ன லாபம் என்று நான் கேட்கிறேன். கவிதை என்பது உள்ளத்தின் பெருமூச்சு. இந்தப் பெருமூச்சினால் என்ன நன்மை?"

"பெருமூச்சை அடக்குவதைவிட அது வெளிவருவது நல்லது இல்லையா?"

"அது என் நல்லது?"

நான் வியப்போடு அவளைப் பார்த்தேன். "என் நன்மை இல்லை? இதோ, நீங்கள் நோயாளிக்கு ஆரோக்கியமும் சாகிறவனுக்கு உயிரும் கொடுக்கிறீர்கள். வேறு என்ன நன்மை வேண்டும்?" என்றேன்.

"ஹூம்! நானா வைத்தியம் செய்கிறேன்? நான் பணம் சம்பாதிக்கிறேன். எனக்கு நோய் வந்தால் நான் இந்த மருந்தை உட்கொள்வதில்லை. இதே மருந்தைப் பிறருக்குக் கொடுக்கிறேன். இது உபகாரமா? இது தொண்டா? அல்லது, இது பிறரை ஏமாற்றுவதா?"

அவள் பேச்சிலிருந்து, அவளுக்கு இந்தத் தொழில் பிடிக்கவில்லை என்றும், குடும்பம் இல்லாவிட்டால் அவள் இந்தத் தொழிலே செய்ய மாட்டாள் என்றும் தெரிந்தது. "இப்படி அநாவசியமான விஷயங்களைப் பற்றி நீங்கள் சிந்திக்கக் கூடாது" என்றேன்.

அவள் கலுக்கென்று நகைத்து, "இந்த உலகிலே எதுதான் அவசியம்? இந்த டாக்டர் தொழிலா? இந்த மோட்டார்காரா, வீடா, கணவனா? எது அவசியம்?" என்றாள்.

இந்தமாதிரியான கேள்விக்கு நான் தயாராக இல்லை. ஆயினும், "இதெல்லாம் வேண்டாதது? வேண்டாதது எதுவுமே இல்லை. நீங்கள் உங்களை வீணாகத் துன்புறுத்திக் கொள்கிறீர்கள்" என்றேன்.

"என்னைச் சுற்றி இங்கே துன்பத்துக்கு அடையாளம் ஏதாவது இருக்கிறதா? எனக்கு நான் கொடுக்காத சுகமே இல்லை. கஷ்டப்படுகிற ஆசாமிகள் வேறு. அதற்கு நான் லாயக்கல்ல."

நான் விஷயத்தை மாற்றி, "நீங்கள் கவிதை எழுதுவதை நிறுத்தவில்லை என்று நான் நினைக்கலாமா? இல்லாவிட்டால் நான் தான் குற்றவாளியாக இருப்பேன்" என்றேன்.

"கவிதை சுகத்துக்காக எழுதுவதல்ல; எழுதித்தீரவேண்டும் என்பதற்காகத்தான்."

"எப்படியானாலும், என்னிடம் உங்களுக்குக் கோபமில்லை என்று தெரியவேண்டும்."

"கோபமா!" என்று கூறி அவள் மீண்டும் சிரித்தாள். அவள் மனத்தில் எப்போதுமே துன்பம் நிரம்பியிருப்பதில்லை; வேடிக்கைக்கும் அங்கே இடமுண்டு என்று அறிந்தேன். ஆனால் இம்மாதிரி வேளையில் அவளை அறிந்துகொள்வது மிகவும் சிரமமாகத்தான் இருந்தது.

சில நாள் கழித்து ஸ்ரீதரன் எனக்குத் திடுக்கிடும் செய்தியைச் சொன்னான். "பார்த்தீர்களா, உங்கள் டாக்டரம்மாளை! அவளைப்

பற்றிப் பெரிய விஷயங்களெல்லாம் காதில் விழுகின்றன" என்றான்.

"யார்? லேடி அஸரானியா!"

"ஆமாம், ஐயா! டாக்டர் தொழில் என்ன, தெரியுமா? வெறும் திரை. அதன் மறைவில் என்ன என்னவோ நடக்கிறது."

"ஸ்ரீதரா, எனக்குத் தெரிய வேண்டாம்; தெரிந்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை."

"அப்படியானால் நான் சொல்வது பொய்யா? அந்த வீட்டுக்கு ரொம்ப வேண்டியவரான ராவ் சாகபே என்னிடம் சொன்னார்."

இதற்குப் பிறகு இடம், பெயர், விவரங்களோடு ஸ்ரீதரன் சில கதைகளைச் சொன்னான். அவை, கல்யாணிக்கும் ராவ்சாகபுக்கும் ஒழுங்கற்ற தொடர்பைப் பற்றியவை. இதைக் கேட்டு எனக்குத் துயரம் தாங்கவில்லை. ஸ்ரீமதி அஸ ரானியிடம் எனக்கு எப்போதுமே மதிப்பு உண்டு. "கண்டபடி உளருதே" என்று ஸ்ரீதரனை மிரட்டி அனுப்பினேன்.

அடுத்த தடவை கல்யாணியைச் சந்தித்தபோது, ஏதோ பேச்சு வாக்கில், "உங்களைப்பற்றி என்ன என்னவோ விஷயம் காதில் அடிபடுகிறதே!" என்று சொல்லிவிட்டேன்.

"அடிபடுகிறதல்லவா?" என்று கேட்டுவிட்டு அவள் சிரித்தாள்.

"இப்படிச் சொன்னவர்கள் யார் தெரியுமா?"

"எனக்குத் தெரிந்தும் இருக்கலாம்."

"அப்படியானால் நீங்கள் ஏன் இதற்குப் பரிகாரம் செய்யவில்லை?"

"பரிகாரமா!" அவள் வறண்ட முறுவல் பூத்தாள்.

"ராவ்சாகபே இதைப் பரப்பியவர்."

"அவருக்கு நான் ரொம்பவும் கடன்பட்டிருக்கிறேன்."

"கடனா! பணம் கொடுக்க வேண்டுமோ?"

"இல்லை, அவர் எனக்கு நிறைய உபகாரம் செய்திருக்கிறார்."

"இதுவா உபகாரம்! நீங்கள் விரும்பினால், இனி அவரோடு பழகாமலேகூட இருக்க முடியும்."

"நான் விரும்பினால்தானே?"

"அது போகிறது; டாக்டர் பார்க்கவ் யார்?"

"டாக்டர் பார்க்கவ்! அது யார்? படநாகரைச் சொல்கிறீர்களா?"

"ஆமாம், ஆமாம்; படநாகர்!"

எனக்கு வெட்கமும் கூச்சமுமாக இருந்தது. என் மறதியையும் சங்கோசத்தையும் கண்டு அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்.

"உங்கள் பக்கந்தான் அவருடைய வீடு; தெரியாதா? படநாகர் யார்? அவர் ஒரு டாக்டர்!"

அவள் மீண்டும் சிரித்துக் கொண்டே, "நீங்கள் எல்லாவற்றையும் அறிய விரும்புகிறீர்களா? ஒரு பெண்ணைப்பற்றிய முழு விஷயத்தையும் நீங்கள் அறிய வேண்டுமோ? - ஆனால் அது முழுவதும் கடவுளுக்குத்தான் தெரியும்" என்றாள்.

கடவுள் என்று சொன்னவுடனே அவள் முகத்தில் இருந்த முறுவல் மறைந்து நடுக்கம் நிலவியது. அந்தப் பெண்மணியைப் பற்றிச் சிறிது அவமதிப்பாக எண்ணியது, என்னையே நான் அவமானப்படுத்திக் கொண்டது போல் ஆயிற்று.

"ஒரு நாளைக்கு நானே எல்லாம் உங்களிடம் சொல்வதாக இருந்தேன். பெண்களிடம் சந்தேகப்

படுவது நமது சமூகத்தின் இயல்பு. ஆனால் என்னைக் குற்றமற்றவளாகவும் நீங்கள் எண்ணவேண்டாம். பெண் குற்றமற்றவளாக இருக்க முடியுமா? அவள் பெண்ணாக இருப்பதே முதல் குற்றம்.''

பார்க்காத பொருளைப் பார்க்க விரும்புகிறவள்போல அவள் எங்கோ பார்வையைச் செலுத்தினாள். பிறகு கடிகாரத்தைப் பார்த்து, ''ஓ, மணி எட்டாகிவிட்டதே! நான் ஓர் இடத்துக்குப் போக வேண்டும்'' என்றாள்.

அவள் வெளியே புறப்பட்டாள். நானும் எழுந்து நின்றேன். அதற்குள் டாக்டர் அங்கே வந்தார். ''நான் வர நேரமாகி விட்டது. என்ன, தயார்தானா?'' என்று கேட்டார்.

''எவ்வளவு நேரமாக நான் காத்திருக்கிறேன்?''

டாக்டர் என்னைப் பார்த்ததும், ''நீங்களா! வாருங்கள், உட்காருங்கள்'' என்றார்.

''நான் வந்து வெகு நேரமாயிற்று.''

அவர் எங்கோ ஞாபகத்துடன், ''சரி, உட்காருங்கள்'' என்றார்.

''அவர் வெகு நேரமாக இங்கே இருக்கிறார். நாம் புறப்படுவோமே.- நீங்கள் போய் வருகிறீர்களா?'' என்றாள் கல்யாணி.

''சரிதான்'' என்று சொல்லி, அவர் என் கையைக் குலுக்கினார். கல்யாணி கைகூப்பினாள்.

கொஞ்சநாள் கழித்து அந்தப் பக்கம் போனபோது ஆஸ்பத்திரியில் டாக்டரைப் பார்த்தேன். மனைவி கல்கத்தாவுக்குப் போயிருப்பதாகவும், வர இரண்டு வாரம் ஆகுமென்றும் சொன்னார். அவர் ஸ்வாரஸ்யமாகப் பேசவில்லை.

நாலு நாள் கழித்து ஸ்ரீதரன் ஓர் அதிசயச் செய்தியைக் கொண்டு வந்தான். ''ஸ்ரீமதி அஸரானியை டாக்டர் பலமாக அடித்து ஓர் அறைக்குள் பூட்டி வைத்திருக்கிறார்; இரண்டு நாளாக அவள் ஒன்றும் சாப்பிடவில்லை'' என்றான்.

''ஏனப்பா உளறுகிறாய்? அவள் கல்கத்தாவுக்கு அல்லவா போயிருக்கிறாள்?''

''நல்ல அழகுதான்! அவள் இந்த ஊரை விட்டு எங்குமே போகவில்லை. வீட்டை விட்டுச் சில நாள் இங்கேயே வெளியில் தங்கியிருந்தாள். திரும்பிவந்ததும் டாக்டர் அவளை அறைக்குள் அடைத்திருக்கிறார்.''

நான் இந்த உண்மையை விசாரிக்க நேரே ஆஸ்பத்திரிக்குப் போனேன். டாக்டர் தனியே உட்கார்ந்திருந்தார். ''ஸ்ரீமதி அஸரானி இன்னும் ஊரிலிருந்து வரவில்லையா?'' என்றேன்.

''இல்லை, கடிதம் வந்திருக்கிறது; சீக்கிரமே வந்துவிடுவாள்.''

''மற்றப்படி எல்லாம் சௌக்கியந் தானே?''

''ஓ, அவளுக்கு அந்த ஊர் ரொம்பப் பிடித்திருக்கிறதாம்.''

'கணவனுக்கும் மனைவிக்கும் நடுவே நாம் யார் தலையிட?' என்று எண்ணி, நான் பொதுவாகப் பேசிவிட்டுத் திரும்பினேன்.

மறுநாள் ஒரு பொதுஜனத் தொண்டர் என்னிடம் வந்து, ''உங்களுக்கு டாக்டர் அஸரானி தம்பதிகள் வேண்டியவர்களாச்சே; நீங்கள் அவர்களைச் சமாதானப் படுத்த வேண்டும்'' என்றார்.

''விஷயம் என்ன?'' என்று கேட்டேன்.

''உங்களுக்குத் தெரியாதா? ஒரு நாள் டாக்டர் அவளை வெளியே பிடித்துத் தள்ளி, 'இனிமேல்

இங்கே மூஞ்சியைக் காட்டாதே' என்று சொன்னாராம். நாலைந்து நாள் அவள் எங்கே எப்படி இருந்தாளோ தெரியாது. அதைப்பற்றிப் பலவிதமாகப் பேசுகிறார்கள். அவள் இருக்குமிடம் தெரிந்ததும் டாக்டர் போய் அவளை அழைத்துவந்து, அடித்து, அறைக்குள் பூட்டி வைத்தார். மனைவியின் விஷயத்தில் சமூகத்துக்குக் கணவன்தானே பொறுப்பாளி? அவர் இப்படிச் செய்தது ஆச்சரியமல்ல. ஆனால் அவள் படித்தவளாயிருந்தும் அவரிடம் ஏன் அடங்கியிருக்கிறாளோ, தெரியவில்லை. ஊர்ப் பெண்கள் அவளிடம் போய், தனி ஆஸ்பத்திரி வைத்துக்கொள்ளச் சொன்னார்கள். அவள் மறுத்துவிட்டாள். யார் எவ்வளவு வேண்டியும் அவள் சாப்பிடவேயில்லை. நீங்கள் சற்று வாருங்கள்" என்றார்.

நான் அங்கே போவதாக ஒப்புக்கொண்டேன்.

நான் போனபோது டாக்டர் ஆஸ்பத்திரியில் இருந்தார். "வாருங்கள், இந்தத் தடவை..." என்று இழுத்தார்.

"டாக்டர், என்னை மன்னிக்க வேண்டும். அவர் கல்கத்தாவுக்குப் போகவில்லை; இங்கேதான் இருக்கிறார்."



டாக்டருக்குத் தர்மசங்கடமாக இருந்தது. "அவளுக்குக் கொஞ்ச நாள் ஜுரம் இருந்தது. இப்போது ஒன்றுமில்லை" என்றார்.

"நான் அவரைப் பார்க்கலாமா?"

டாக்டர் உள்ளே போய் வந்து, "இப்போது அவள் தூங்குகிறாள்" என்றார். நான் திரும்பிவிட்டேன்.

இரண்டு நாள் கழித்துக் கல்யாணி பழையபடி வேலைக்கு வந்தாள். ஆனால் இரண்டு கம்பவுண்டர்களும் ஒரு நர்ஸும் மாறினார்கள். டாக்டர் உட்கார்ந்த வெளிக் கட்டிடத்தில் இப்பொழுது லேடி டாக்டர் வந்து உட்கார்ந்தாள். டாக்டர் அஸரானி ஏதோ பெரிய வியாபாரத்துக்காக வெளியூர் போவதாகவும் கேள்விப்பட்டேன். இந்த மாறுதல்களின் ரகசியம் எனக்கு ஏதும் விளங்கவில்லை.

ஒரு நாள் பிற்பகல் கல்யாணி எங்கள் வீட்டுக்கு வந்தாள்; என் மனைவியோடும் குழந்தைகளோடும் வேடிக்கையாகப் பேசினாள். "நாளைக்கு எங்கள் ஆஸ்பத்திரியின் வருஷ விழா. எல்லாரும் கட்டாயம் வரவேண்டும்" என்று அழைத்தாள்.

மறுநாள் நாங்கள் போனோம். அதிதிகளை வரவேற்பதில் டாக்டர் முனைந்திருந்தார். அன்று, ஆரோக்கிய பவனம் என்ற கட்டிடத்தைப் புதிதாகத் திறந்து வைத்தார்கள். ஸ்ரீமதி அஸரானி, "இங்கே ஏழைகளுக்கு இலவசமாக மருந்து கொடுப்போம். ஒழிந்த வேளை முழுவதும் நான் இங்கே தான் இருப்பேன். பணக்காரர்களுக்காக நான் தினம் ஒரு மணி நேரம் வேலை செய்வேன். அவர்களுக்குப் பணமே வியாதி. நிறையப் பணம் செலவழியும் சிகிச்சைதான் அவர்களுக்குப் பிடிக்கும். அதில் எனக்குக் கிடைக்கும் வரு

மானத்தை ஆரோக்கிய பவனத்துக்குச் செலவழிப்பேன்" என்று பேசினுள்.

பவனத்தை ஒரு தர்மசொத்தாக்கினுர்கள். டிரஸ்டிகளில் என் பேரும் இருக்கவே எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

எல்லாரும் போனபிறகு, கல்யாணி எங்களைத் தன் காரில் வீட்டுக்குக் கொண்டுவிட்டாள். "டிரஸ்டைப்பற்றி நீங்கள் என்னிடம் சொல்லவே இல்லையே?" என்றேன்.

"இந்த அளவுக்குக்கூட உங்களிடம் எனக்கு நம்பிக்கை இருக்கக் கூடாதா? - சரி, வேறு விஷயம் உங்களுக்குத் தெரியுமா?"

"என்ன விஷயம்? நான் தெரிந்துகொள்ளத்தான் வேண்டுமா?"

"ஆமாம்; ஐந்து நாள் நான் அயல் புருஷனுடைய வீட்டில் இருந்ததாக ஊர் முழுவதும் சொல்கிறதே; உங்களுக்குத் தெரியாதா? இவர் நேரே படகாகரின் வீட்டுக்கு வந்தார்; 'என் பெண்டாட்டியை எங்கே ஒளித்து வைத்திருக்கிருய், சொல்!' என்று நாலுபேர் நடுவில் கேட்டார்; அந்த வீடு முழுவதையும் சோதனை போட்டார். இவ்வளவும் ஏன் தெரியுமா? போன தடவை நான் நோயுற்றபோது படகாகர் நாலைந்து தடவை என்னிடம் வந்தார். 'அவர் நல்லவரல்ல!' என்று இவர் சொன்னுர். 'எனக்கு நல்லவராகத்தானே தோன்றுகிருர்; அத்தாட்சி இல்லாமல் நான் எப்படி ஒருவரைக் கெட்டவரென்று சொல்ல முடியும்?' என்றேன். விவாதம் வளர்ந்தது. அதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் இவர், பாவம், அந்தப் பிள்ளைகுட்டிக்காரரை இப்படி அவமானப்படுத்திஞர்" என்று சொல்லி, அவள் சிரித்தாள்.

"உண்மையில் என்ன நடந்தது?"

"நடந்ததென்ன? தொலைந்து போன வஸ்து இவருக்கு மறுபடி கிடைத்துவிட்டது. நான் எங்கே இருந்தேன் என்பதில் விசேஷமாகத் தெரிந்துகொள்ளக் கூடியது ஏதுமில்லை. அதற்குள் இவர் தவியாகத் தவித்தார். இவருக்கு என்னிடம் அவ்வளவு அன்பு!"

"டாக்டர் எங்கோ வெளியூர் போகிருராமே?"

"ஆமாம்; அவருக்கு எதுவும் நிறைய வேண்டும்; நிறைய வேலை, நிறையப் பணம், நிறையப் புகழ். நேரமாயிற்று; நான் போய் வருகிறேன்."

டாக்டர் வெளியூர் போய்விட்டார். நான் போனபோது கல்யாணி துயரத்தோடு இருந்தாள்.

"உங்களுக்கு உடம்பு சரியில்லையா? டாக்டர் ஒருவேளை கோபித்துக்கொண்டு போயிருக்கிருரோ? வர நாளாகுமோ?" என்றேன்.

"இந்த உலகம் கடவுளுடையது. அவருக்கு முன்னுல் யாருக்கு என்ன மனஸ்தாபம் இருக்க முடியும்? விவாகத்துக்குமுன்பு நான் கன்னிகையாக இருந்தேன்; வெறும் கன்னிகையல்ல, டாக்டருங்கூட. விவாகமின்றியே நான் இருந்திருக்க முடியும்; ஆனுல் அது நடக்கவில்லை. நான் பத்தினியானேன். பத்தினித்தன்மையும் டாக்டர்தன்மையும் எப்படி ஒத்துக் கொள்ளும்? 'ஒன்று, நான் வீட்டிலே இருந்து பத்தினியாக இருப்பேன்; அல்லது, டாக்டராக இருந்து வெளியே யாரோடும் பழகுவேன். வீட்டுக்குள்ளே

பத்தினியாக இருக்கட்டுமோ, அல்லது டாக்டராக இருந்து பணம் சம்பாதித்துக் கொடுக்கட்டுமோ?' என்று இவரைக் கேட்டேன். நான் பத்தினியாகவே இருக்க விரும்பினேன்; டாக்டர் தொழில் எனக்குப் பிடிக்கவில்லை. இவரும் அதைத்தான் சொன்னார். ஒரு வாரம் நான் ஆஸ்பத்திரிக்கே போகவில்லை. வரும்படி சூனியமாகிவிட்டது. இவர் என்னை டாக்டராகச் சொன்னார். 'சரி, பணம் என்னிடத்தில் இருந்தால் உங்களுக்குப் பயமாக இருக்கிறது. அந்தப் பணம் இனி நம்முடையதல்ல. உலகத்துக்குப் பொதுவான ஜகந்நாதனுடையது. நாம் அவருக்குப் பிரதிநிதிகளாக இருந்து அதைச் செலவழிப்போம்' என்று சொல்லி, இந்த டிரஸ்டைப்பற்றிய முழு விவரத்தையும் எழுதிக் கொடுத்தேன். அவரால் அதற்குத் தடை சொல்ல முடியவில்லை.''

''அவர் போனதற்கு இதுதான் காரணமோ?''

''இருக்கலாம்; ஆஸ்பத்திரிக் கணக்கு என் கையில் வந்தது, அவரது பெருமிதத்தைத் தூண்டியிருக்கலாம். 'இந்தச் சமயத்தில் எனக்குப் பாதுகாப்பு வேண்டுமே; நீங்கள் போகவேண்டாம்' என்று சொன்னேன். அவர் கேட்கவில்லை. நிறையப் பணம் சம்பாதிக்கப் போய் விட்டார்.''

நான் போவதற்கு எழுந்தேன். ''உட்காருங்கள், இந்த நிலையில் நான் யாரைப் புகலடைவது என்று நீங்கள் சொல்ல முடியாதல்லவா?'' என்றாள்.

''வருங்காலத்தைப்பற்றி இப்போது சிந்திக்காதீர்கள்.''

''சிந்திக்க வேண்டாம் என்கிறீர்கள். நல்லது; நமஸ்காரம்!''

ஒரு நாள் அவள் என்னை அவசரமாகக் கூப்பிட்டனுப்பினாள்; போனேன். ''டாக்டர் பரதேசத்தில் ஆபத்தில் இருக்கிறார். வக்கீல் என்ற முறையில் நீங்கள் ஏதாவது உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டாள்.

''இரண்டாயிரம் ரூபாய் வேண்டும்; இல்லாவிட்டால் என்ன நடக்குமோ, தெரியாது'' என்று டாக்டர் எழுதியிருந்தார்.

''பணம் அனுப்புவதைவிட நீங்களே நேரில் போனால் விஷயம் தெரியும்'' என்று அவள் சொன்னாள்.

''நான் நேரில் போக வேண்டிய அவசியமில்லை'' என்று சொல்லி, பம்பாய்க்கு டெலிபோன் செய்து என் நண்பர்கள் மூலம் தக்க ஏற்பாடு செய்துவிட்டேன். டாக்டர் அங்கே கெட்ட சகவாசத்தில் பணத்தைத் தோற்றுவிட்டதாக என் நண்பர் தெரிவித்தார்.

சில நாள் கழித்து டாக்டரே வந்துவிட்டார். நான் அவரைப் போய்ப் பார்த்தேன். ''இனிமேல் எங்கும் போவதாக உத்தேசமில்லையே?'' என்று கேட்டேன்.

''இனி எங்கும் போவதாக இல்லை. மனிதனுடைய ஓட்டமும் ஆட்டமுமெல்லாம் வீண். இருப்பதைக் கொண்டு திருப்திப்படுவதுதான் நல்லது'' என்றார்.

ஒரு நாள் அவர் என் வீட்டுக்கு வந்து, ''அவளுடைய கோயிலை நீங்கள் பார்க்கவில்லையே?'' என்றார்.

''கோயிலா! அது என்ன?''

'நான் வந்த பிறகு அவளுக்கு வேலையில் புத்தி ஓடவில்லை. பக்தி அதிகமாகிவிட்டது. விடிகாலையில் ஸ்நானமும் எப்போதும் உபவாசமும். எனக்கு ஒன்றும் பிடிக்க

யில்லே.— நீங்கள் வந்து சொல்லிப் பார்த்தால் ஒருவேளே கேட்கலாம்.''

நான் போனேன்; "உங்கள் கோயிலே நான் பார்க்கலாமா?'' என்று கேட்டேன்.

"உங்களேப் பொறுத்தவரைக்கும் அது என் கோயிலாக இருக்கும் போது, நீங்கள் அதில் எப்படிப் போகலாம்? கோயில் என்பது மியூசியம் அல்ல.''

எனக்கு ஒன்றுமே பதில் சொல்லத் தோன்றவில்லே.

"இவள் விடிகாலேயிலிருந்து இரவு பத்து மணி வரைக்கும் ஓயாமல் வேலே செய்கிருள். தினமும் உபவாசந்தான். உடம்பையும் பார்த்துக்கொள்வதில்லே'' என்ருர் டாக்டர்.

அவளுடைய உதடுகள் ஆத்திரத்திஞல் துடித்துக் கறுத்தன. "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நான் சாகவேண்டும் என்று விரும்புகிறீர்களா? ஒவ்வொரு நிமிஷமும் நீங்கள் என்னே நச்சரித்து விற்கிறீர்கள். உயிர் போகும் வரைக்கும் என்னே விற்ருலும் நான் தடுக்கப் போவதில்லே. ஆஞல் அதற்குப் பிறகு என் இஷ்டப்படி என்னே விடுவதுதானே? — நான் அந்த விக்கிரகங்களே இப்போதே உடைத்துப் போடுகிறேன்; திருப்தி தானே?'' என்று கூறிவிட்டு உள்ளே போகப் புறப்பட்டாள்.

"நீங்கள் போகக்கூடாது'' என்று நான் கம்பீரமாகச் சொன்னேன்.

அவள் நின்ருள்; அவள் பார்வை சூனியத்தில் லயித்தது. பெருமூச்சோடு, "நான் என்ன செய்வேன்? என்ன செய்வேன்?'' என்று சொல்லி, அவள் முகத்தை மூடிக்கொண்டு விக்கி விக்கி அழுதாள்.

எனக்கு ஒன்றும் தோன்றவில்லே.



அவள் முகத்திலிருந்து தன் கையை எடுத்து, "நீங்கள் போங்கள்'' என்ருள். அவள் அப்படிச் சொன்னது மிகவும் பரிதாபமாக இருந்தது.

நான் பிறகு வெகு நாள் வரைக்கும் அந்தப் பக்கம் போகவில்லே. ஒரு நாள் போனபோது டாக்டர் அங்கே இல்லே; கல்யாணி இருந்தாள். 'இப்போது பார்க்க முடியாது' என்று சொல்லி அனுப்பி விட்டாள்.

அன்று சாயந்தரம் அவள் என் வீட்டுக்கு வந்தாள். "நீங்கள் இனிமேல் அங்கே வரவேண்டாம்; வந்தால் அவமானப்படுவீர்கள்'' என்ருள்.

"இப்போது நீங்கள் இப்படிச் சொல்வதே எனக்கு அவமானமில்லேயா?''

"அவமானமோ இல்லேயோ, எனக்குத் தெரியாது. நீங்கள் நோயாளியல்ல; உங்கள் வீட்டிலும் நோயாளி யாருமில்லே. நீங்கள் எதற்காக அங்கே வருகிறீர்கள்? நடந்தது நடந்தாகிவிட்டது. இனிமேல் நீங்கள் அங்கே வரவேண்டாம்; நானும் இங்கே வரவில்லே.''

"சரி, இனிமேல் அந்தப் பிழையைச் செய்யமாட்டேன்.''

"ஆமாம், வேண்டாம். இரண்டு நாள் கழித்து எல்லாரும் எல்லாவற்றையும் மறந்துவிடுவோம். இதை நீங்கள் தப்பாக நினேக்க

வேண்டாம். நான் உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டும்.''

''என்ன?''

''என்னவா? வாழ்க்கை என்பது என்ன? நாம் ஏன் வாழ்கிறோம்? நான் ஏன் வாழ்கிறேன்? எனக்கு வாழ்வதற்கு என்ன இருக்கிறது?''

''இந்த மாதிரியான பேச்சைக் கேட்கவே எனக்குப் பிடிப்பதில்லை.''

''உங்களால் சொல்ல முடியாது; நான் சொல்கிறேன். வயிற்றிலுள்ள இந்தக் குழந்தைக்காக நான் வாழ்கிறேன். இல்லாவிட்டால் இந்தச் சிறையிலிருந்து எப்போதோ விடுபட்டிருப்பேன். இந்தக் குழந்தை என் வயிற்றிலிருந்து வெளிவந்ததும், நான் விடுபடுவேன். இந்தக் குழந்தையைக் காக்கும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?''

''இதென்ன, இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்! உள்ளே வாருங்கள்'' என்று அழைத்துப் போனேன்.

என் மனைவி மக்களைப் பார்த்ததும் அவள் வெகுநேரம் அவர்களோடு வேடிக்கையாய்ப் பேசி விளையாடினாள். வீட்டுக்குப் போனதும் என் குழந்தைகளுக்கு விலையுயர்ந்த பொம்மைகளை வாங்கி வேலைக்காரனிடம் கொடுத்து அனுப்பினாள்.

மறுநாள் என் மனைவி அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாள்; அவளுடைய கோயிலைப் பற்றிப் பெருமையாகச் சொன்னாள். அங்கே எல்லா ஜாதியாரும் வருகிறார்களாம். பணப்பெட்டி, நகைப்பெட்டி முதலிய எல்லாச் சொத்துக்களையும் அங்கேயே வைத்திருக்கிறாளாம். அந்த அறைக்குப் பூட்டே இல்லையாம். எல்லா மதத்தைச் சேர்ந்த தெய்வங்களும் இருக்கின்றனவாம். காலையில் நாலு மணிக்கு எழுந்து அவள் பூஜை செய்கிறாளாம். தன்னிடம் வரும் நோயாளியிடம் மருந்துக்குப் பணம் வாங்குவதில்லையாம். டாக்டரோ, உதவி டாக்டரோ பணம் கேட்டதாகத் தெரிந்தால் அவள் இரண்டு நாளைக்குச் சாப்பிடுவதில்லையாம். மற்றொரு விஷயம்: மேல்நாட்டு நாகரிகத்தைக் கண்டால் அவளுக்கு அடியோடு பிடிக்கவில்லையாம். ''அந்த நாகரிகத்தில் இருதயமில்லை, கணக்குத்தான் இருக்கிறது; சந்தோஷமில்லை, ஓட்டந்தான் இருக்கிறது'' என்கிறாளாம். ''அவள் மொத்தத்திலே தன் இஷ்டத்தோடு அந்த இடத்தில் இல்லை'' என்று என் மனைவி சொன்னாள்.

நான் வேண்டுமென்றே அந்தப் பக்கம் வெகு நாள் போகவில்லை. போய்த்தான் என்ன செய்துவிடப் போகிறேன்? ஒரு நாள் தபாலில் அவளுடைய இரண்டு கட்டுரைகளும் ஒரு கடிதமும் வந்தன. அவற்றைப் படித்து நான் ஆச்சரியப்பட்டேன். நடை வெகு அழகாக இருந்தது. பெண் விடுதலை இயக்கத்தைப் பழித்து, விவாகம் செய்துகொள்ள வேண்டிய அவசியத்தை ஆதரித்து எழுதியிருந்தாள்.

அவற்றைப் படித்த மறுநாள் நான் அவளிடம் போனேன். அவள் கொடுத்த தேநீரை அருந்தினேன்.

''டாக்டர் என்னிடம் கோபித்துக் கொண்டு போய்விட்டார். அவர் திரும்பி வராவிட்டால் நான் என்ன செய்வது? இது ஐந்தாவது மாதம். நான் உதவிக்கு யாரைத் தேடுவேன்?''

''பயப்படாதீர்கள்; அவர் கட்டாயம் திரும்பி வருவார்.''

''போன தடவை ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன்; இனி என்னால் அங்கே போக முடியாது.''

"எல்லாவற்றுக்கும் கடவுள் இருக்கிறார்; கவலைப்படாதீர்கள்; டாக்டரிடமிருந்து ஒன்றும் கடிதம் வரவில்லையா?"

"வந்திருக்கிறது."

"வருவதாக ஒன்றும் எழுதவில்லையா?"

அவள் உள்ளே போய் அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து, "இதைப் படியுங்கள்" என்றாள்.

நான் அதைப் படிக்கலானேன். நடு நடுவே படிக்க மிகவும் வருத்தமாக இருந்தது. அதில் அவர் தம் மனைவியைப் பற்றிச் சொல்ல முடியாத பேச்சுக்களையெல்லாம் எழுதியிருந்தார். "நீ இருந்த நிலைமைக்கு, நான்தானே உன்னைக் கடைத்தேற்றினேன்? இப்போது உன் ஒழுக்கம் என்ன? நான் வக்கீல்களைக் கேட்டேன். ஹிந்துப் பெண்ணுக்குச் சொத்தில் அதிகாரம் கிடையாது. உனக்கு யோக்கியதை இருந்தாலும் என்னால்தான் இன்று நீ சம்பாதிக்கிறாய். கோர்ட்டு மூலமாக நான் என் உரிமையைப் பெறுவேன். ஒழுக்கம் கெட்ட பெண் இரக்கத்துக்கு உரியவளல்ல; சமூகம் அவளுடைய பொறுப்பை ஏற்றுக் கொள்ளாது. உன்னுடைய டிரஸ்ட் செல்லாது. உனக்கு உதவி செய்பவர்கள் இருப்பது எனக்குத் தெரியும். அவர்கள் யார் என்பதையும், என்ன செய்ய முடியும் என்பதையும் பார்த்துவிடுகிறேன். இந்த ஏற்பாட்டை ஒரு வழியாக முடிக்காமல் நான் திரும்பப்போவதில்லை" என்று அவர் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. "என்ன, கவலையில் ஆழ்ந்துவிட்டீர்களா?" என்று அவள் கேட்டாள்.

"இல்லை, கோர்ட்டுக்குப் போனால் யார் பக்கமாக வேண்டுமானாலும் தீர்ப்பாகலாம்."

அவள் சிரித்தாள். "அவரை உங்களுக்குத் தெரியாது. என் உடலைத்தான் அவர் துன்புறுத்துவாரே தவிர, அவருக்கு என்னிடம் ரொம்ப அன்பு உண்டு. - அது போகட்டும். மனிதர்கள் செத்ததும் என்ன ஆகிறது, சொல்லுங்கள்."

"எனக்குத் தெரியாது."

"எனக்குத் தெரியும். எங்கள் வீட்டு ஸ்நான அறையில் ஒரு கொலை நடந்திருக்கிறது. கொலையுண்ட அந்தப் பெண்ணையும், கொன்ற ஆசாமியையும் நான் தினமும் பார்க்கிறேன். ஒரு மாதமாக, அஸ்தமித்தால் ஸ்நான அறையில் அழும் சத்தம் கேட்கிறது. ஒரு நாள் பாதி ராத்திரிக்கு மேல் கனவு கண்டு எழுந்தேன். ஸ்நான அறையில் யாரோ மெல்லப் பேசும் சத்தம் கேட்டது. இங்கே எனக்குத் துணைக்கு யாருமில்லை. அசையாமல் கட்டிலில் படுத்திருந்தேன். 'வாயை மூடமாட்டாயா?' என்றது ஆண் குரல். 'மாட்டேன், நீங்கள் என்னைக் கொன்றாலுங்கூட வாயை மூடமாட்டேன்' என்றது பெண்குரல். 'மாட்டாயா, மாட்டாயா?'; 'உம், நெஞ்சை நெறியுங்கள், நன்றாக நெறியுங்கள்!'; 'மூடமாட்டாயா வாயை? உம்!' ஏதோ துடிதுடிக்கும் குரல் கேட்டது.

பிறகு ஒரே அமைதி. நான் இருந்த அறைவழியே அந்த மனிதன் போனான். பயத்தினால் எனக்கு நெஞ்சு அடைத்துக்கொண்டது. கீச்சிட்டுக் கத்தினேன். வாசல் புறத்திலிருந்த வேலைக்காரர்கள் ஓடிவந்தார்கள். அதற்குப் பிறகு எத்தனையோ தடவை நான் அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறேன்..."

"சட்! அந்தக் கெட்ட கனவை மனத்திலிருந்து நீக்கிவிடுங்கள்."

"இது கனவல்ல, உண்மை. இதற்கு முன்னால் இங்கே மகாராஷ்டிர தம்பதிகள் குடியிருந்தார்களா? அவள் மகாராஷ்டிரக்காரி. ஆனால் அவனுடைய மனைவியோ, யாரோ?"

"நீங்கள் இந்த வீட்டை மாற்றிவிடுங்கள். எங்கள் வீட்டில் வந்து ஐந்தாறு நாள் இருங்கள். அதற்குள் நான் இந்த வீட்டின் அமைப்பையே மாற்றிவிடுகிறேன்" என்றேன்.

அதற்கு அவள் ஒப்புக்கொள்ளவில்லை. 'பெண்களின் அடமே இப்படித்தான்' என்று எண்ணி, நான் வீடு திரும்பினேன்.

பல வருஷங்கள் கழித்துப் பார்க்கவே அவனை அடையாளமே கண்டு பிடிக்க முடியவில்லை. "தெரியவில்லையா? நான்தான் பால்" என்றான்.

"ஓ! என்ன இப்படி மாறிவிட்டாயே!"

"இரண்டு நாள்தான் இங்கே முகாம். உங்களைப் பார்த்துப் போகலாமென்று வந்தேன்." அவன் தன் கதையைச் சொன்னான். அந்தக் காலத்தில் சாதுவாக இருந்த விரஜலால் இப்போது புரட்சிக்காரன் ஆகிவிட்டான். இப்போது அவன் தலைமறைந்திருந்தான். அவனைப் பிடிப்பவர்களுக்குச் சர்க்கார் ஆயிரக்கணக்கில் பரிசு கொடுக்குமாம். புரட்சியைப்பற்றி நாங்கள் சிறிது நேரம் தர்க்கம் செய்தோம். அவன் போய் விட்டான்.

இரண்டு நாள் கழித்து, 'பால் கைதாகாமல் தப்பித்துக் கொண்டான்; கல்யாணியின் வீட்டைப் போலீசார் சோதனையிட்டார்கள்' என்று பத்திரிகையில் செய்தி வந்தது. அவன் ஒரு வாரம் அந்த வீட்டில் இருந்தான். பயங்கரப் புரட்சி இயக்கத்துக்கு அவன் தலைவனும். கல்யாணியைச் சிறிது நேரம் காவலில் வைத்து விடுதலை செய்தார்களாம்.

நான் போனபோது கல்யாணி ஆவேசத்தோடு பேசினாள். "இந்தப் பையன்களின் புரட்சியைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் அவர்களுக்கு அக்காவாக நான் ஏன் இருக்கக்கூடாது? பல நாளாக அவர்களுக்கு நான் உதவி செய்கிறேன்; இனியும் செய்யத்தான் போகிறேன்" என்றாள்.

பிறகு சிரித்துக்கொண்டே, "அந்த அழகிய பெண் அடிக்கடி என்னிடம் வருகிறாள். அவள் எங்களுக்கெல்லாம் பிரதிநிதி. 'வாழ்க்கை என்பது வேள்வி' என்கிறது சாஸ்திரம். பெண்ணின் வாழ்க்கை வேள்வியல்ல; வேள்விக் குண்டம்" என்றாள்.

அங்கிருந்து நான் திரும்பிய போது என் மனத்தில் ஒரே பளுவாக இருந்தது. இந்தப் பெண் மணி தன்னை என்ன செய்து கொள்ள விரும்புகிறாள்? இவளிடம் எல்லாச் செல்வமும் இருக்கிறது; ஆனால் அமைதி அடியோடு இல்லை. இவளைத் தன்புறத்தும் பொருள்

எது? வெளியே இழுக்கும் பொருள் எது? உள்ளே தகதகவென்று எரியும் பொருள் எது? கல்யாணியின் வாழ்வில் சாவு என்னும் தத்துவம் வியாபித்திருந்தது. இது ஏன்? இது எந்தச் சம்பவத்தின் விளைவு?

ஒரு நாள் அவள் என்னை வரச் சொல்லி டிரைவரை அனுப்பினாள். அதே காரில் போனேன்.

"புது டில்லியில் நான் பங்களா வாங்கப் போகிறேன்" என்றாள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"அவர் கடிதம் எழுதியிருக்கிறார். நல்ல பங்களாவாகப் பார்த்து வாங்கவேண்டுமோம். இருபது நாளில் எல்லா ஏற்பாடும் நடக்கவேண்டும்."

நான் ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தேன்.

"உங்களுக்குத் தெரியாதா? ஏப்ரலில் ...... மாகாணத்துப் பிரதமர் புது டில்லிக்கு வரப் போகிறார். அவரை நம்முடைய பங்களாவில் வரவேற்க வேண்டுமென்று டாக்டர் எழுதியிருக்கிறார். இந்தப் பிரதமர் ஒரு காலத்தில் பிரதமராக இல்லை. சீமையில் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்தார். அப்போது நானும் சீமையில் படித்தேன். நெருங்கிய நண்பரான இவரை இப்போது பிரதமராக நான் வரவேற்க வேண்டுமோம். இது, நட்பைக் கொண்டு சூதாடுவது போலத்தானே?"

"இது எனக்கு ஒன்றும் அநுசிதமாய்ப் படவில்லையே?"

"உங்களுக்குத் தெரியாது. பிரதமரைக் கொண்டு இவர் லாபம் அடையப் பார்க்கிறார். காங்கிரஸ் மந்திரி பதவி சுயநலம் பெறத்தான் இருக்கிறதா? என் நட்பை இதற்குப் பயன்படுத்தப்போகிறார். இது தான் வியாபாரமா? நன்மையா? முன்னேற்றமா? இத்தகைய பாரதநாடு உருப்படுமா?"

"நீங்கள் இதில் சம்பந்தப்பட வேண்டாமே."

அவள் அழுதுகொண்டே, "நான் என்ன செய்வேன்? என்ன செய்வேன்?" என்றாள்.

"ஏன்? இதில் உங்களுக்குக் கஷ்டம் என்ன?"

"என் நண்பருடைய மேன்மையை நான் போற்றுகிறேன். உங்களிடத்தில் சொல்ல வெட்கமென்ன? நான் அவருடைய வேண்டுகோளைப் புறக்கணித்தேன். இன்னமும் அவர் மணம் செய்துகொள்ளவில்லை. ஆயுள் முழுவதும் மணம் ஆகாமலே இருக்கலாம். இத்தகைய நண்பர் வரும்போது நான் ஒன்றும் செய்யாமலிருக்க முடியுமா? இதோ பங்களா வாங்குகிறேன். 'பிரதமரைச் சந்தோஷப்படுத்தினால் முதல் வருஷமே ஐந்து லட்சம் கிடைக்கும்; அடுத்த காண்டிராக்டில் இன்னும் அதிகம் கிடைக்கும்' என்று இவர் எழுதியிருக்கிறார். இவர் இப்போது என்னிடம் வெளிப்படையாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறார். என்னிடம் எப்போதுமே இவருக்கு அன்பு" என்று கூறி அவள் சிரித்தாள்.

இதைக் கேட்டதும் எனக்கு வருத்தமாக இருந்தது; அந்த வருத்தத்தோடு திரும்பினேன்.

ஒரு நாள் காலையில் ஒரு ரோல்ஸ்ராய்ஸ் கார் என் வீட்டு வாசலில் வந்து நின்றது. டாக்டர் அஸரானி உல்லாசமே வடிவாக அதிலிருந்து இறங்கினார்.

"வாருங்கள்" என்று வரவேற்றேன்.

"இவர் நம்முடைய நண்பர் ராவ் சாகப்."

"சந்தோஷம். முன்னால் ஒரு தரம் பார்த்திருக்கிறேன்."

ராவ்சாகப் என் கையைக் குலுக்கிக்கொண்டே, "ஆமாம், ஆமாம். உங்கள் கட்டுரைகளைப் பத்திரிகையில் படிக்கிறேன்" என்றார்.

"உள்ளே வாருங்களேன்" என்றேன்.

"இப்போது சமயமில்லை. இன்னும் பல இடங்களுக்குப் போக வேண்டும்......பிரீமியருக்கு அட்-ஹோம். கட்டாயம் வாருங்கள்" என்று சொல்லி, ராவ்சாகப் காரில் அமர்ந்தார்.

கதவுக்குப் பக்கத்திலிருந்த கல்யாணியின் அருகில் நிறையக் கவர்கள் இருந்தன. அவள் என்னைக் கண்டதும் கைகூப்பினாள்; ஒன்றும் பேசவில்லை. அவள் முகத்தில் அதே வறண்ட சிரிப்பு.

நான் மிகவும் சந்தோஷத்தோடு அந்தத் தேநீர் விருந்துக்குப் போனேன். கல்யாணிக்கும் பிரதமருக்கும் நடுவிலே என்னை உட்கார வைத்தார்கள். வேறு வழியின்றி உட்கார்ந்தேன். சுமார் இருநூறு பேர் வந்திருந்தார்கள்.

டாக்டர் வரவேற்புப் பத்திரத்தைப் படித்தார். அஸரானி தம்பதிகளுக்கு நன்றி பாராட்டிப் பிரதமர் ஒரு சிறிய பிரசங்கம் செய்தார்.

பார்ட்டி முடிந்ததும், வந்திருந்தவர்கள் எல்லாரும் போய்விட்டார்கள். ஓர் அழகிய அறையில் நாங்கள் மட்டும் பிரதமரைச் சந்தித்தோம். எல்லாருக்கும் திரும்பிப் போக அவசரமாக இருந்தது. டாக்டர் ஒருவரே சந்தோஷமாக இருந்தார். பிரதமர் கல்யாணியைப் பார்த்து, "உங்களுக்குக் களைப்பாக இருந்தால் போய் இளைப்பாறலாம். இங்கே அதிதி யாரும் இல்லை" என்றார். "இல்லை, எனக்கு ஒரு களைப்பும் இல்லை" என்றாள் கல்யாணி. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நாங்கள் திரும்பிவிட்டோம்.

சில நாள் அங்கே தங்க விரும்பிய பிரதமர் அன்று சாயந்தரமே திரும்பிப் போவதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது.

ஒரு நாள் பிற்பகலில் டிரைவர் வந்து என்னைக் கூப்பிட்டான். கல்யாணி வாசலில் காரில் உட்கார்ந்திருந்தாள்.

"அரை மணி நேரம் என்னோடு வாருங்கள்" என்றாள்.

நான் மறுத்தாலும் அவள் கேட்கமாட்டாள்போல இருந்தது. நான் காரில் அமர்ந்தேன்.

கார் புது டில்லியைத் தாண்டிப் பன்னிரண்டு மைல் தூரம் சென்று, வழியல்லாத வழியில் ஓரிடத்தில் நின்றது.

"இந்த இடம் எப்படி இருக்கிறது?" என்று அவள் கேட்டாள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"எனக்கு டாக்டர் தொழிலில் ஓய்வில்லை. 'பாரதி தபோவனம்' என்னுடைய கனவு. இதை நீங்கள் நனவாக்க வேண்டும். ரவீந்திரரின் 'தபோவனம்' என்ற கவிதைதான் உங்களுக்குத் தெரியுமே. அந்த மாதிரி ஒரு தபோவனம் இது. என் நகைகளை விற்று உங்களுக்குப் பதினாயிரம் ரூபாய் கொடுக்கிறேன். இந்த ஸ்தாபனத்துக்கு அதிகாரி - சட்டம் - எல்லாம் நீங்கள்தாம். நீங்கள் என்னைப்போலப் பெண் அல்ல, டாக்டர் அல்ல. நான் மெஷின்; ஒவ்வொரு நிமிஷமும் வேலை செய்து ரூபாய் சம்பாதிப்பேன்; உங்களிடம் கொடுப்பேன். 'பாரதி தபோவனம்' தோன்றி

விட்டால், நான் செத்தும் சாகாதவளாவேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்!''

"நான் தபோவனம் நடத்தத்தான் லாயக்கானவன் என்பது உங்கள் எண்ணமா?'' என்று சொல்லிச் சிரித்தேன்.

"என்னால் முடிந்தால் இந்த நிமிஷமே நான் ஆசிரமவாசி ஆகிவிடுவேன். ஆனால் பணத்தொல்லை என்னை விட்டபாடில்லை. பணத்தினால் மனமும் உடலுங்கூடக் கட்டுப்பட்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு நான் இங்கே வந்து சேருவேன்.''

"அது சரி, இந்தக் காட்டுநிலத்தைச் செழிப்பாக்க மட்டான உழைப்பா வேண்டும்?''

அவள் உற்சாகத்தோடு, "நிறையத்தான் உழைக்க வேண்டும். நம் நாட்டில் பணமா இல்லை? இந்த டில்லியில் மட்டான பணமா இருக்கிறது? அந்தப் பணம் உழைப்பினால் வரவில்லை என்று எனக்குத் தெரியும். இந்தப் பணத்தினால் யாருக்கும் நன்மை இல்லை; யாருடைய வாழ்வும் வளரவில்லை. ஒரு கோடீசுவரனுடைய நாட்டுப் பெண்ணுக்கு நான் வைத்தியம் செய்கிறேன். அவளுடைய கணவன் அழகன், இளைஞன், படித்தவன்; அவனுக்கு என் அழகிலே பித்து; அவனிடம் பணம் கிடைக்கும்; நான் ஏன் வாங்கக் கூடாது? இப்படிச் சில ஆசாமிகள் இருக்கிறார்கள். நீங்கள் ஆசிரமத்தை நடத்துகிறீர்களா?'' என்றாள்.

வரும்போது அவளே காரை ஓட்டி வந்தாள். டிரைவர் பின்னால் உட்கார்ந்தான். நான் தயங்கித் தயங்கிக் கடைசியில், "பார்க்கலாம்!'' என்றேன். அவளுடைய முகம் மலர்ந்தது.

"கனவுதான் உண்மை. இல்லாவிட்டால் இதோ நாம் கண்ணால் பார்க்கும் இந்த மண்ணுலகமா உண்மை? கனவை உண்மையாக்குவதுதான் வாழ்வு. பாரதி தபோவனத்துக்கு நீங்கள் யாகவேதியர்.''

என் வீடு வந்தது. நான் அவளுடைய உற்சாகத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். நமஸ்காரம் செய்துவிட்டு, அவள் பறவையைப் போல உல்லாசமாகப் போனாள்.

சனிக்கிழமையன்று டாக்டர் அஸரானி என்னிடம் வந்தார்.

"இவளுக்கு என்ன வேண்டுமாம்? எப்போது பார்த்தாலும் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு இருக்கிறாள். நான் கோபத்தில் எதையாவது உளறிவிடுகிறேன். இவளுக்குக் சோபமும் வருவதில்லை; ஒன்றும் சொல்வதும் இல்லை. இந்த அழகில் நான் வெளியூர் போகவேண்டும்'' என்றார்.

"வெளியூருக்கா போகிறீர்கள்? எதற்கு?''

"போக வேண்டியிருக்கிறது. பணமில்லாமல் என்ன செய்வது? இந்த நிலையில் இவளை விட்டுப் போக மனமில்லைதான். நீங்கள் எல்லாரும் இருக்கிறீர்கள்; பார்த்துக் கொள்ளுங்கள். இரண்டொரு நாளில் நான் புறப்பட வேண்டும்.''

பிறகு அவர் தமது முழுத் திட்டத்தையும் சொன்னார். ஐந்து வருஷத்தில் பத்து லட்சம் திரட்டுவதாக அவருடைய திட்டம். அவருக்கு எல்லாம் சந்தோஷந்தான்; கல்யாணியின் மன வருத்தந்தான் அவரை வாட்டியது.

என் வீட்டிலிருந்து புறப்பட்டபோது அவர் மிகவும் சந்தோஷமாக இருந்தார்; ஆனால் என் மனத்தில் ஏனோ மகிழ்ச்சியே இல்லை.

ஞாயிற்றுக்கிழமையன்று நான் அந்தப் பங்களாவுக்குப் போனேன். டாக்டர் இல்லை. வேலைக்காரன் என்னை உள்ளே அழைத்துப் போனான்.

என்னைக் கண்டதும் கல்யாணி படுக்கையிலிருந்து எழுந்தாள்.

"வேண்டாம்; படுத்திருங்கள். மருந்து ஒன்றும் குடிக்கவில்லையே?"

"இல்லை."

"அதனால்தான் டாக்டர் கவலைப் படுகிறார். உங்கள் நினைவுதான் அவரைப் போகவொட்டாமல் தடுக்கிறது."

அவள் அலமாரியிலிருந்து நாலு கடிதங்களை எடுத்து, "இதைப் பாருங்கள்" என்று கொடுத்தாள்.

நான் படிக்காமலே சும்மா இருந்தேன்.

"பாருங்கள், நான் பத்துப் பேருக்கு எழுதினேன். அந்தக் கோடீசுவரனுடைய பிள்ளை எனக்குப் புது மோட்டார் வேண்டுமானால் வாங்கிக் கொடுக்கிறானும். 'பணம் உங்களுக்கு எதுக்கு?' என்கிறான். மீதிப் பேருடைய பதிலும் ஏறக்குறைய இப்படித்தான் இருக்கிறது. எல்லாரும் 'இந்தா, இந்தா' என்றார்கள். கை நீட்டியதும் இப்படி அவமானப் படுத்துகிறார்கள். பாரதி தபோவனத்துக்காக நான் இவ்வளவும் செய்தேன். இனி என்ன செய்வது, சொல்லுங்கள்" என்றாள்.

நான் பேசாமல் இருந்தேன்.

அவள் தொடர்ந்தாள்: "உலகத்திலே அன்பு என்று உண்டா? இதைப் பாருங்கள்" என்றாள்.

நான் அதைப் படித்தேன்; மாகாணத்துப் பிரதமரின் கடிதம். "அன்பே, கடிதம் கிடைத்தது. நன்றி. வாழ்க்கை ஓடுகிறது. காலம் செல்லுகிறது. நாம் எதைத்தான் ஏன் விரும்பவேண்டும்? நான் காந்தி சேவா சங்கத்தின் அங்கத்தினன். ஒரு தம்படிகூட எனது என்று வைத்துக் கொள்ளக்கூடாது. என்னிடம் ஒன்றும் எதிர்பார்க்க வேண்டாம்."

நான் அதை மடித்து வைத்தேன். அதற்குள், "கல்யாணி" என்று கூப்பிட்டுக்கொண்டு, டாக்டர் வந்தார்.

"கல்யாணி, வக்கீலும் வந்திருக்கிறாரா? நல்லதுதான். அந்த ஹாலுக்குப் போகலாம், வா. ஒரு வேடிக்கை!"

"எனக்குத் தலை வலிக்கிறது. நான் எங்கும் வரவில்லை."

"அப்படியானால் படுத்துக்கொள்ளேன்" என்று அவர் இரண்டு தலையணைகளைப் போட்டார். அவளைச் சாய்வாகப் படுக்க வைத்தார். "மிகவும் ஜோரான வஸ்துக்கள் வாங்கி வந்திருக்கிறேனே; நீ பார்க்க வேண்டாமா?" என்று சொல்லி, அவர் அந்தப் பொருள்களை எடுத்து வந்தார்.

யானைத் தந்தத்தில் சித்திர வேலைப்பாடு அமைந்த ஒரு பெரிய படகு; அதில் ராஜாவும் ராணியும்; வெள்ளி டீ ஸெட் இரண்டு; அன்னமும் மயிலும் கூத்தாடும் இரண்டு தட்டுகள்.

"இவற்றில் உனக்கு எது வேண்டும், கல்யாணி? இந்தத் தந்தப் படகு ராவ்சாகப் அனுப்பியிருக்கிறார். ஓஹோ! உடம்பு சரியில்லையா? பேசாமல் படுத்துக்

கொள்ளேன். - களைப்பாக இருக்கிறதா? சரி, தூங்கு. வெளியே ராவ்சாகப் தனியாக இருக்கிறார். நான் போய் அவரைப் பார்க்கிறேன்" என்று சொல்லி, அவர் அந்தப் பொருள்களை வேறு அறையில் கொண்டுவைத்தார். "நீங்களும் வருகிறீர்களா?" என்று என்னைக் கூப்பிட்டார்.

"இவர் இங்கே இருக்கட்டும்" என்றாள் கல்யாணி. அவர் போனதும் ஒரு துணியைத் தண்ணீரில் நனைத்து நெற்றியில் வைக்கச் சொன்னாள். "கொடுங்கள் இப்படி" என்று அவள் அதை வாங்கிக்கொண்டாள்.

"அவர் காந்திக்காரராம்! நெஞ்சில் ஈரமில்லாதது எதுவும் காந்தியினுடையதல்ல. காந்தியினுடைய கனவு, காந்தியினுடைய தவம் - எல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் எழுந்து போங்கள். என் துன்பத்தை நீங்கள் பார்க்க வேண்டாம். என் குழந்தையை உங்களைப் பார்த்துக்கொள்ளச் சொன்னேனே; இனி அதற்கு அவசியமில்லை. அந்தக் குழந்தை பிறக்காது."

"உங்கள் மனம் சரியில்லை. வீண் கவலை வேண்டாம். டாக்டர் ஊருக்குப் போகமாட்டார்."

"நீங்கள் அவரைத் தடுத்தால் என் உயிரை வாங்கிவிடுவார். அவர் போகட்டும். என் கணவர் என் மூலமாகப் பிரதமரிடம் சுயநலத்தைப் பெற்றதற்குப் பிராயச்சித்தம் செய்ய எனக்குத் தெரியும்."

ராவ்சாகப் வந்து அவளை இனிமையாகச் சமாதானப்படுத்தினார். "நாங்கள் ஒரு பெரிய நகரத்தை நிர்மாணிக்கப்போகிறோம். பெரிய வேலை. உங்களால் டாக்டருக்குக் கவலை கூடாது. நீங்கள் படித்தவர், புத்திசாலி, நீங்கள் சற்று இளைப்பாறுங்கள்'. என்றார்.

அவர் வெளியே போனதும் கல்யாணி தழுதழுத்த குரலில், "நீங்கள் போகலாம். என் குற்றத்தை மன்னியுங்கள்" என்றாள்.

"நீங்கள்-"

"மனித யத்தனத்தில் எதுவும் இல்லை. எல்லாம் உங்களுக்குத் தெரியுமே!"

அதுதான் கடைசிச் சந்திப்பாக இருக்கும் என்று நான் நினைக்கவே யில்லை.

★

கல்யாணி இப்போது இல்லை. அவள் எப்படிச் செத்தாள் என்று நான் ஏன் தெரிந்துகொள்ள வேண்டும்? சாவிலே அப்படித் தெரிந்துகொள்ளத்தான் என்ன இருக்கிறது? பகலுக்கு மேல் எனக்குச் செய்தி வந்தது. விடிகாலையில் மூன்று மணிக்கு ஆண் குழந்தை பிறந்ததாம். அப்போது நன்றாக இருந்தாளாம். ஆனால் சிறிது நேரம் கழித்து இருதய ஓட்டம் நின்றுவிட்டதாம். - திடீரென்று? ஒருவேளை - சரிதானையா, விட்டுத்தள்ளும். அவள் வாழ்க்கை முடிந்தது; அவ்வளவுதான்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

ஆசியும் யோசனையும்

'மஞ்சரி'க்கு ஓராண்டு நிறைந்த செய்தியை அறிந்தவுடனே பல நண்பர்கள் அன்பு கனிந்த ஆசி மொழிகளை வழங்கி யிருக்கிறார்கள். முக்கியமான ஒரு கடிதம் இது:

"எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது; இப்பொழுதுதான் அது பிறந்தாற்போல் இருக்கிறது. அதற்குள் ஓர் ஆண்டு கடந்துவிட்டதா?... என் மனப்பூர்வமான ஆசிகளை வழங்குகிறேன்.

"பார்த்தவுடன் இழுக்கும் முகத் தோற்றமும், கையில் எந்தியவுடன் நம் விருப்பங்களுக் கிசைந்த வசீகரமும், இன்னும் வளர்ச்சி ஏற்பட ஏற்பட மேன்மையும் கொண்ட மஞ்சரிக்கு இணையுண்டோ என்றுதான் தமிழ்த் தாய் உள்ளத்தில் உவகை பெறுவாள். வேறு யாருக்காவது சந்தேகமுண்டோ என்னவோ, எனக்கு அதில் சந்தேகமில்லை."—கி. சந்திரசேகரன்.

'மஞ்சரி'யின் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி, காரியாலயத்தில் ஒரு சிறு விருந்து நடைபெற்றது. பத்திரிகை அநுபவம் மிக்க பிரபல ஆசிரியர்களும் பிற நண்பர்களும் அதில் அன்புடன் கலந்துகொண்டார்கள்.

பேராசிரியர் வ. ரா., 'தினமணி' ஏ. என். சிவராமன், 'ஸ்வதந்த்ரா' காஸா சுப்பராவ், 'ஹிந்துஸ்தான்' ரா. நாராயணன், 'பிரசண்ட விகடன்' நாரண துரைக்கண்ணன், ச. கு. கணபதி ஐயர் ஆகியவர்கள் 'மஞ்சரி'யின் அபிவிருத்தி குறித்துப் பல அரிய யோசனைகள் கூறினார்கள்.

நண்பர்களின் யோசனைகளை இயன்றமட்டும் அநுசரிக்கிறோம். சகல வாசகர்களின் அன்புக்கும் மேலும் மேலும் பாத்திரமாகும் முறையில் 'மஞ்சரி' வளர்ந்து வர என்றும் முயலும்.

—ஆசிரியர்